விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: பதினாறு + பதினாறு
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk
சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 26 ஞாயிற்றுக்கிழமை (11.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 358

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோட்டல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
021 222 5392
(C-6650)

## கோண்டாவிலில் தடிகள், பொல்லுகளுடன் வீதியை மறித்து நின்று

# இ.போ.ச-தனியார் பேருந்து சாரதிகள் மோதல்;

## மூவர் காயம்; சாரதியொருவர் கைது; பயணிகள் பரிதவிப்பு



15 ஆம் பக்கம் பார்க்க....

# சித்திரவதைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இலங்கை அரசிடம் மன்னிப்புச் சபை வலியுறுத்து

(ஜெனிவா)

**இலங்கை படைத்தரப்பினரின் சித்திரவதைகள் மற்றும் முறைகேடான நடத்தைகள் போன்றவற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் சித்திரவதைகள் மற்றும் முறைகேடான நடத்தைகள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி குற்றவாளிகளை பொறுப்புக்கூறும் நிலைக்கு கொண்டு வரவேண்டும்.

சித்திரவதைகளில் ஈடுபட்டுள்

15 ஆம் பக்கம் பார்க்க....



மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்று வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் காணாமல் போனவர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரி கவனயீர்ப்பு போராட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் யாழ்.நகரத்தில் இடம்பெற்ற போராட்டத்தின் காட்சியொன்றை படத்தில் காணலாம்.

## நாய் கடிக்கு இலக்கான பெண் ஒரு மாத காலத்தின் பின் மரணம்

(யாழ்ப்பாணம்)

தெரு நாய்க்கடிக்கு இலக்கான குடும்பப் பெண்ணொருவர் ஒரு மாதத்தின் பின்னர் உயிரிழந்த சம்பவம் ஒன்று அல்வாய்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது

அல்வாய் மத்தியை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான தர்மபாலன் ரதிமலர் (வயது 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த நவம்பர் 12 ஆம் திகதி அயல்வீடு ஒன்றுக்கு சென்ற வேளை தெரு நாய் அவரது கையை கடித்து துண்டாடியுள்ளது.

படுகாயமடைந்தவரை மந்திகை

15 ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்படுவது அவசியம்

## மனிதவுரிமைகள் தின நிகழ்வில் விக்னேஸ்வரன் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

உலகளாவிய ரீதியில் இடம்பெறக் கூடிய இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், ஆக்கிரமிப்புக் குற்றங்கள் என அபாயம் மிகுந்த பல குற்றச்செயல்களை தடுத்து நிறுத்துவதற்கும், அவ்வாறான செயல்கள் இடம்பெறாது இருப்பதற்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதற்குமான ஒரு சட்டவாக்கமாகவே சர்வதேச மனித உரிமைகள் தின பிரகடனத்தைப் பார்க்கின்றோம் எனத் தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட

15 ஆம் பக்கம் பார்க்க....

### 110 மேலதிக வாக்குகளால்

## நல்லாட்சி பட்ஜெட்-2017 நிறைவேற்றப்பட்டுள்ளது

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் 2017 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 110 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு- செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 165 வாக்குகளும் எதிராக 55 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 4 பேர் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. இந்நிலையில் 110 மேலதிக வாக்குகளால் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வரவு -செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரச ஆதரவு அணியினர், அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன வாக்களித்தன.

15 ஆம் பக்கம் பார்க்க....

## பணியாளர் தேவை

யாழ்.நகரிலுள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனமொன்றின் சிற்றுண்டிச்சாலைக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

**01.சிற்றுண்டிச்சாலை உதவியாளர் (ஆண்/பெண்)**

**02. சிற்றுண்டி தயாரிப்பவர் (பெண்)**

தகுதியானோர் 15.12.2016 (வியாழக்கிழமை) அன்று மாலை 4 மணிக்கு நேரில் வரவும்.

**NEW SCIENCE WORLD**

Brown Road, Jaffna. - T.P: 077 336 4055

(சி-6658)

## வேலையாட்கள் தேவை - யாழ்ப்பாணம்/கொழும்பு

- ✦ சமையலாளர்கள்
- ✦ சமையல் உதவியாளர்கள்
- ✦ காசாளர் (பெண்கள் விரும்பத்தக்கது)
- ✦ வரவேற்பாளர்கள்

தொடர்புகளுக்கு: **BRIGHT INN**

No.51, Sivan Road, Thirunelvely, Jaffna.

Tel: 021 222 1889, 077 606 3397

(6694)

## உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனி யுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை,

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல் வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=. 5500/=. (24000/=. 3 மாதத்திற்குரியது.)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. (விலை 3500/=, 5500/=)

தொடர்புகளுக்கு : 077 210 6155 221. நாவலர் றோட்

(பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

(6898)

## சேவையாளர்கள் ஆண்/பெண் தேவை

No.173, Palali Road, kandarmadam, Junction,Jaffna

077 852 7394, 077 888 0737

## காணி விற்பனைக்கு

A9 வீதி நுணாவில் சந்திக்கு அப்பால் ராசா கடை முன் வீதியில் (150m உள்ளே) 3 பரப்பு காணியில் புது வீடும், மட்டுவில் வீதி, துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 14 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:

**077 873 0129**

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்



## திருமதி சோமலிங்கம் பவளம்மா

அராலி மத்தியை பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி K.V.R அரிசி ஆலை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சோமலிங்கம் - பவளம்மா கடந்த (07.12.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசிவம் - விசாலாட்சி தம்பதியினரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற தம்பு - பவளம்மா தம்பதியினரின் மருமகளும், சோமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், திரிபுரசுந்தரி (டென்மார்க்), ஞானகுமார் (லண்டன்), சாந்தகுமார் ஆகியோரின் தாயாரும், ராஜசேகரம், பூங்கோதை, கலையரசி ஆகியோரின் மாமியாரும், றயோ (டென்மார்க்), கமிலா (டென்மார்க்), ஸ்ரீபன் (டென்மார்க்), செமி (டென்மார்க்), ஞானேஸ்காந்த் (லண்டன்), அபிறேஷ்காந்த் (லண்டன்), மனோஷ்காந்த் (லண்டன்), பமீலா, பானுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் K.V.K அரிசிஆலை ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (11.12.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வல்லை முள்ளி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.V.K அரிசி ஆலை,
உடுப்பிட்டி.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.பே : 077 004 3348

(சி-6663)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 12 . 1941



மறைவு
23 . 11 . 2015

அமரர்

## சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை

(ஓய்வுநிலை தபால் தரம் பிரிப்பாளர் (M.S.O) பருத்தித்துறை

பாசம் நிறைந்த உங்கள் அன்புள்ளம்
புன்சிரிப்பு கொண்ட உங்கள் இன்முகம்
அன்போடும் பண்போடும் பேணியெம்மை வளர்த்து
பார்போற்றும் வண்ணம் பாங்குடனே வாழவைத்த
எம் குடும்பத்தின் ஒளி விளக்கே
ஓர் ஆண்டு சென்றாலும் — உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது

விநாயக முதலியார் வீதி,
பருத்தித்துறை.
021 226 0163


என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்

(சி-6652)

# SINGER Plus

வருட இறுதி

## மெகா சேல்



வீட்டுத்தளபாடங்களுக்கு விசேட விலைக்கழிவு,
வட்டியின்றிய மாத கொடுப்பனவு
இலவச பரிசுப் பொருட்கள்.

SINGER HOMES


தொ.பே: 021 225 5343
021 510 0280

(சி-6662)

இடம் SINGER Plus காட்சியறை, மானிப்பாய்

காலம் 11 - 17 Dec 2016

40" SONY TV



Home Theatre இலவசம்

- சாதாரண விலை: 10?,000/=
- விசேட விலை: 87,000/=
- வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு

SINGER, SKYWORTH, UNIC TV களிற்கு

- 18,000/- வரையான விசேட விலைக்கழிவு.
- வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு

SINGER Skyworth unic

3 வருட உத்தரவாதம் இலவசம்

சிங்கர் சலவை இயந்திரங்கள்



- சாதாரண விலை: 49,000/=
- விசேட விலை: 42,000/=
- வட்டியின்றிய மாதக்கொடுப்பனவு
- 4 வருட உத்தரவாதம்

நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்துப் பொருட்களுக்கும் விசேட சலுகைகள்...

# ஒற்றையாட்சிக்குள் தீர்வை தமிழர்கள் ஏற்கமாட்டார்கள்

## வடக்கிலிருந்து தெற்கிற்கு அழுத்தமாக அறிவிப்பு

அபிவிருத்தி என்ற போர்வைக்குள் மனிதவுரிமை மீறல்களை மறைக்கும் செயற்பாட்டில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருவதாகவும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதனை ஒரு போதும் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வு விடயத்தில் நிதானமாகவும் உறுதியுடனும் செயற்பட வேண்டும் என மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பொது மண்டபத்தில் நேற்றுக் காலை சர்வதேச மனிதவுரிமைகள் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்விலேயே மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதை தமிழர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதனை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசிற்கு ஒரு தெளிவான பதிலாக தற்போதைய சந்தர்ப்பத்தில் கூறினால் தான் அடுத்த ஏமாற்றத்தை தடுக்க முடியும். அல்லது தீர்வு என்று தரப்பட்டதை தமிழர் தரப்பு நிராகரித்துள்ளது என்ற தெளிவான செய்தியை சர்வதேசம் உணர்ந்து கொள்ளும் என இதன் போது வலியுறுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சட்டத்தரணிகளான கரிகாலன், சுகாஸ, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் எஸ்.சிவகரன், பாதிரியார்களான மங்களராஜா, செபமாலை, ஆகியோரும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கணேசலிங்கம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (இ-4)

## பண்டிகைக்காலங்களில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள்

பண்டிகைக் காலங்களில் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர சந்திப்பின் போது குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடை அணிந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர். இதேவேளை பண்டிகைக் காலங்களில் வீதி ஒழுங்குகளை மீறி போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன், போக்குவரத்து தொடர்பில் கவனிப்பதற்கு விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## திடீர் விபத்து நோயாளர்கள் விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுவர்

### அமைச்சர் ராஜித அவதானம்

திடீர் விபத்துக்களுக்கு முகங்கொடுக்கும் நோயாளர்களை விமானம் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

குறித்த யோசனையை பொருளாதார குழுவிற்கு தான் முன்வைத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் விபத்து மற்றும் திடீர் பரிகாரம் தொடர்பிலான தேசிய கொள்கையை வெளியிடும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-10)

## பியருக்கு வரி நிவாரணம் ஏன்?

### அநுர கேள்வி

பியரை இறக்குமதி செய்யும் நிறுவனத்துக்கு இறக்குமதி வரி நிவாரணம் வழங்கப்பட்டமையால் ஒரு பில்லியன் ரூபாய், அரச வருமானம் இல்லாமல் போயுள்ளதாக ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் (பாதீடு) இறுதிநாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பியரை இறக்குமதி செய்யும் போது, அதற்கென இறக்குமதி வரி அறவிடப்பட வேண்டும். எனினும், அந் நிறுவனத்துக்கு வரி நிவாரணம் வழங்கியமையால் பாரிய அரச நிதி இழக்கப்பட்டுள்ளது. வரி நிவாரணம் வழங்கிய நிலையில் பியரை அந்த நிறுவனம் விற்பனை செய்தமையால் நிறுவனத்துக்கு 100 கோடி ரூபாய் இலாபம் கிடைத்துள்ளது.

பியர் இறக்குமதி செய்வதற்கு வரி நிவாரணம் வழங்கப்பட்டபோதும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக அந்தப் பகுதியில் உள்ள விகாரையொன்றுக்கு பொருட்கள் கொண்டுவரப்பட்டன. பொருட்களுடன் வந்த கொள்கலனுக்கு வரி அறவிடப்பட்டது இது நியாயமா? பியர் நிறுவனத்துக்கு வரி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு அரசாங்கம் போதியளவான நிவாரணத்தை வழங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினார். (இ-10)

## நல்லாட்சி நீதி எங்கே போயிற்று?

### யாழில் நேற்று கவனயீர்ப்பு



(படங்கள்:-உ.சாளின்)

சர்வதேச மனிதவுரிமைகள் தினமான நேற்றைய தினம் காணாமற் போனோரின் தகவல்களை வெளிப்படுத்தக் கோரியும் பொறுப்புகூறலை வலியுறுத்தியும் யாழில நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ். பிரதான பேருந்து நிலையம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த போராட்டத்தினை சமவுரிமை இயக்கம் முன்னெடுத்திருந்தது. நல்லாட்சி நீதி எங்கே போயிற்று? என இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் குரல் எழுப்பியிருந்தனர்.

கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கிலும் தெற்கிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் இராணுவத்தினராலும் புலனாய்வு பிரிவினராலும் கடத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு என்ன நடந்தது எங்கே உள்ளார்கள்? என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாத நிலையேயுள்ளது. கடத்தப்பட்டவர்களின் நிலை தொடர்பில் ஆளும் வர்க்கத்திற்கு தெரிந்துள்ள போதிலும் அவற்றை எந்த அரசும் வெளிப்படுத்தாத நிலையே உள்ளது. இதனையே நல்லாட்சி என கூறிக்கொண்டு ஆட்சியிலுள்ள தற்போதைய அரசும் செய்து வருகின்றது. வடக்கு, கிழக்கிலும் தெற்கிலும் பல்லாயிரக்கணக்கான மனிதவுரிமை செயற்பாட்டளர்களும் பொதுமகன்களும் கடத்தப்பட்டு இருந்தார்கள். இவர்கள் அனைவருமே பாதிக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்படும் மக்களின் குரல்களை வெளிக்கொணர்ந்தவர்களாகவே இருந்தார்கள்.

இந்த நிலையே அவர்கள் கடத்தப்படுவதற்கு காரணமாக இருந்தது. கடந்த 2011 ஆம் ஆண்டு சர்வதேச மனிதவுரிமை தினத்திற்கு முன்னதாக மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த லலித், குகன் ஆகியோரும் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு என்ன நடந்தது? எங்கே உள்ளனர்? என்பது இதுவரை தெரியாத நிலையேயுள்ளது. கடத்தலாளிகளும் கைது செய்யப்படவில்லை.

கடத்தப்பட்டவர்களுக்கு என்ன நடைபெற்றது? அவர்கள் தொடர்பான உண்மை நிலையை வெளிப்படுத்த கோரியுமே தமது போராட்டம் இடம்பெற்றதாக கூறிய சமவுரிமை இயக்கம், மனிதவுரிமை தினத்திலும் இலங்கையில் உள்ள எத்தனையோ உறவுகள் அழுத வண்ணம் உள்ளனர். இந்த நிலையில் நல்லாட்சி என வேடமிட்டு கொண்டுள்ளவர்கள் என்ன செய்கின்றார்கள்? எனவும் கேள்வி எழுப்பினர்.

முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமாகிய இந்த போராட்டத்தில் யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமற போன லலித்தின் தந்தை யாரும். குகனின் மனைவியும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். எமது வாக்கை பெற்று வந்த அரசாங்கம் இப்போது எம்மை ஏமாற்ற தொடங்கிவிட்டது. எனது மகன் எங்கே? என்று எனக்கு இதுவரை தெரியவில்லை, நலலாட்சியே பதில் கூறு, என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குரல் எழுப்பியிருந்தனர்.



மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் புகைப்படங்கள் பெரிதாக அச்சிடப்பட்டு அதனை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தாங்கிப் பிடித்து தமக்கு நீதி வழங்குமாறு வலியுறுத்தி இருந்தனர். காணாமற் போனோரின் பெற்றோர்கள் கலந்து கொண்டு தமது உறவுகளைமீட்டுத்தருமாறு கோரி கதறி அழுதனர். (இ-4)

## கடற்படை தாக்கியதில் பலர் காயம்

பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்ற அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ துறைமுக ஊழியர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஊடகவியலாளர்கள் இருவர் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

தங்களது நியமனங்களை நிரந்தரமாக்குமாறும் துறைமுக வளாகத்தில் சீனாவின் முதலீடுகளைத் தடுக்குமாறும் கோரி கடந்த 7ஆம் திகதி முதல் அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தில் பணிபுரியும் 483 ஊழியர்கள் நுழைவாயில் முன்பாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே அவர்களை அங்கிருந்து கலைப்பதற்காக குறித்த பகுதிக்குச் சென்ற கடற்படையினரில் சிலர் துறைமுக ஊழியர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

சம்பவத்தில் ஊடகவியலாளர்கள் இருவர் உட்பட 6 பேர் காயமடைந்து அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதேவேளை துறைமுக ஊழியர்கள் மீது கடற்படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிலவுகின்ற ஊழியர்களின் நெருக்கடி நாடாளுமன்றத்திலும் நேற்றைய தினம் பெரும் அமைதியின்மையை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும் கடற்படையினரால் துறைமுக ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தாம் அறியவில்லை என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்த இராஜாங்க பாதுகாப்பு அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இது குறித்து ஆராய்வதாகவும் கூறினார்.

இதேவேளை துறைமுக ஊழியர்களினால் சர்வதேச கப்பலொன்றை கடலுக்குச் செல்லவிடாமல் இடைமறித்திருப்பதாக தெரிவித்த கடற்படைப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி, கடற்படையினர் குறித்த பகுதிக்குச் சென்றிருப்பதை ஏற்றுக்கொண்டதோடு அங்கு எவ்வித தாக்குதலிலும் படையினர் ஈடுபடவில்லை என்று தெரிவித்தார். துறைமுக ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகங்கள் மூலமாக வெளியான செய்திகளையும் கடற்படைப் பேச்சாளர் முற்றாக நிராகரித்தார்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைய கப்பலொன்றை தடுத்து வைத்திருப்பது சட்டவிரோத செயல். எனவே அந்தக் கப்பலை விடுவிப்பதற்காகவே கடற்படையினர் குறித்த பகுதிக்குச் சென்றதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# 3 வது ஆண்டு விழாவை முன்னிட்டு

# பாரிராஜ்

## பல்பொருள் அங்காடி

வழங்கும்

**எதிர்பாராத சலுகைகள்**

ஆடம்பரப் பொருட்கள் முதல் அத்தியாவசியப் பொருட்கள் வரை உங்கள் அனைத்து விதமான தேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பூர்த்தி செய்ய சிறந்த ஓர் இடம் **பாரிராஜ்**

- நத்தார் சோடனைகள்
- மின்சார உபகரணங்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்



**20% - 25% வரையான விலைக்கழிவும்**

(நிபந்தனைக்குட்பட்டது)







**ஏனைய பொருட்களுக்கு விசேட விலைக்கழிவும் வழங்கப்படும்**

ஆண்டுவிழாவை முன்னிட்டு பொருட்கள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலவச அன்பளிப்பு வழங்கப்படும்.

ஆண்டு தோறும் எம்மிடம் வந்து அன்பளிப்பு பெற்றுச் செல்லும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (C-6660)

**பாரிராஜ்** பல்பொருள் அங்காடி

இல.344, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, அருகாமை யாழ்ப்பாணம். 021 221 7252

---

## நீங்காத நினைவலைகளில் ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1954 05 09

மறைவு 2014 12 03

### அமரர் கிருஷ்ணபிள்ளை ரேவதியம்மா

(ரேவதியம்மா ஸ்ரோர்ஸ்)

அம்மா பாசத்தின் சுமையோடு எம்மை பரிதவிக்க விட்டு நீங்கள் மட்டும் நெடுந்தூரம் சென்றது ஏன்? ஆணிவேராய் எம்மைக்காத்து நின்ற தெய்வமே 2 ஆண்டுகள் ஆகியும் ஆறவில்லை எம்மனம் விழிகளில் கண்ணீர் காயவில்லை. காலங்கள் கடந்தாலும் மாறாது உங்கள் நினைவலைகள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-6659)

ரேவதியம்மா ஸ்ரோர்ஸ்
கரணவாய் மேற்கு,
கரவெட்டி

உங்கள் பிரிவால் துயருறும்
தந்தை, கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## காணி விற்பனை

குளப்பிட்டி றோட் C.C.T.M.S வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

இராச பாதை வீதியில் 25 பரப்பு காணி விற்பனைக்குண்டு.


இராசாவின் தோட்ட வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (6901)

தொடர்பு: 077 167 1174, 077 728 6061

---

## நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு: Dr.K.கிருபாகரன்



Cell : 077 973 8802

Ph : 021 224 2102

(6713)

காலை 09 - 12 PM 446, நாவலர் வீதி, நல்லூர்

---

## யாழ் புத்தகசாலை புதிய முகவரியில்

ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை 09.12.2016 முதல் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத் திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களுக்கு: 10% - 20%; காகிதாதிகள், எழுதுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள்: 10% - 40%**




தொடர்புகளுக்கு :

யாழ் புத்தகசாலை
இல.22A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சண்முகம் உணவகத்திலிருந்து 5ஆவது கடை)
021 221 7874, 021 492 7568

(சி-6632)

*கிளை :* யாழ் புத்தகசாலை
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(கனகபுரம் விளையாட்டரங்கு சந்தி)
021 492 7625

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்



**LONDON METROPOLITAN COLLEGE**

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
**LIFE SKILLS A1, B1**
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

(சி-6633)

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.

HOTLINE : 0714150995 I 021 753 8395

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா

**மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகிறது.**

| JOB CATEGORY | QTY | SALARY (RM) |
|---|---|---|
| 01. உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200+OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200+OT |
| 02. தையல் இயந்திர திருத்துநர் | 10 | 1800-2500 |

### நிபந்தனைகள்

- இலவச தங்குமிட வசதி மற்றும் மருத்துவ வசதி 3 வருடங்கள்
- வேலை நேரம் 08 மணித்தியாலங்கள். மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- அரசாங்க அனுமதிக் கட்டணம் ரூபா 50,000.
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச் சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்.

இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். ஆஸ்பத்திரி பின்வீதி)

காலம் : 17.12.2016 (சனிக்கிழமை) காலை 9 மணி

முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணம் - 0779729481, 0767183799
கொழும்பு - 0115244446

**Capital Recruitment International (Pvt) Ltd.**
No. 130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14.

அரச அனுமதி இலக்கம் LL No : 2248 advt/2248/17/18/16

# பர்தாவுடன் பரீட்சையில் தோற்றும் மாணவிகளை சோதனையிட பணிப்பு

பர்தா அணிந்து பரீட்சை நிலையம் வரும் பரீட்சார்த்திகளை பெண் பரீட்சை அதிகாரிகளைக் கொண்டு சோதனையிடுமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதேபோன்று பர்தாவுடன் வரும் முஸ்லிம் மாணவிகளும் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பரீட்சை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றச் சென்ற மாணவர்கள் பர்தா அணிந்திருந்தமையால் பரீட்சை நிலையத்திற்குள் செல்ல முடியாமல்போன சம்பவம் குறித்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இது குறித்து அமைச்சர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என். ஜே.புஸ்பகுமாரவிடம் விசாரணை நடத்தியதுடன் எக்காரணம் கொண்டும் பரீட்சை அதிகாரிகள் பரீட்சை விதிகளை மீறக்கூடாது என்றும் அமைச்சர் பரீட்சை அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

அந்தவகையில் எந்நிலையிலும் பர்தா அணிந்து வரும் முஸ்லிம் மாணவிகள் சௌகரியக் குறைவிற்கு உட்படுத்தப்படக் கூடாது என்றும் அவர்களது அடையாள அட்டை உள்ளிட்ட ஏனைய ஆவணங்களை பெண் உத்தியோகத்தர்களைக்கொண்டு சோதனையிட வேண்டும் என்றும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். இவ்வாறான சம்பவங்களால் இனவாதம் மற்றும் மதவாதம் முன்னிலைப்படுத்தப்படுவதையிட்டு அமைச்சர் தனது கவலையை தெரிவித்துள்ளார். (இ-10)

# விரைவில் எல்லை நிர்ணய அறிக்கை கையளிக்கப்படும்

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணய அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கையளிக்கவுள்ளதாக எல்லை நிர்ணயக் குழுவின் தலைவர் அசோக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எனவே அவ்வறிக்கைக்கிணங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக முழு நாடும் 4 ஆயிரத்து 833 தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அத்தொகுதிகளூடாக 5 ஆயிரத்து 92 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)


UNIVERSITY OF CAMBRIDGE **CAMBRIDGE ENGLISH**



- Around 4 million people a year take Cambridge English exams
- 13000 universities and employers globally recognise their certificates
- Cambridge have an international network of 2,700 authorised exam centres in 130 countries
- 40,000 schools and intitutions prepare students for cambridge English exams
- Cambridge have 100 years of experience and expertise in English language assessment

Cambridge ன் மூன்று பாடநெறிகள் 19.12.2016 ல் ஆரம்பிக்கின்றோம்

**Exam Date :-18.03.2017**

**Cambridge - Prelimnary English Test (PET)**

**Centre - British Council Colombo.**

இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.

நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

**FCE** Cambridge First Certificate in English

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

**Exam Date : 06.06.2017**

**Centre - British Council Colombo**

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

**CAE** Cambridge Advanced English - C1

**Who is the exam for?**

*Cambridge English: Advanced is typically taken by high achievers who want to:*

- follow an academic course at university level
- communicate effectively at managerial and professional level
- participate with confidence in workplace meetings or academic tutorials and seminars
- carry out complex and challenging research
- stand out and differentiate themselves.

**Who recognises the exam?**

Cambridge English: Advanced is accepted by more than 4,000 organisations, employers and governments around the world as being a reliable, accurate and fair test of English. This includes universities and colleges in the UK, USA, Canada, Australia, Europe and beyond.

**Course Schedule**

வகுப்புக்கள் ஆரம்பம் 19.12.2016

Monday, Tues, Wed, Thurs 10.30 - 1.00 pm

Sat & Sunday 3.00 pm - 6.00 pm

**Speciality of this course:**

- B1 Level க் இருந்து C 1 Level வரை எல்லா மாணவர்கட்கும் போதனை நடைபெறும்.
- ஒவ்வொரு நாளும் Listening Practice நடைபெறும்.
- வாழ்நாள் முழுவதும் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைப்பதற்கும் Complete Practice கொடுக்கப்படும்.

**BRITISH COLLEGE OF ENGLISH**

192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோவிலடி திணைக்கள காரியாலயத்திற்கு முன்னால்.)


# இலங்கை தேயிலைக்கு உலக கேள்வி அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்கு உலக சந்தையில் இந்த நாட்களில் அதிக கேள்வி காணப்படுவதாக இலங்கை தேயிலைச் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி காணப்படுகின்ற கேள்விக்கமைய உலக சந்தையில் தேயிலைக்கான விலை அதிகரித்துள்ளது.

இதற்கு முன்னர் ஒரு கிலோகிராம் தேயிலை 470 ரூபாவாக இருந்ததுடன், கேள்வி அதிகரித்துள்ளமையையடுத்து ஒரு கிலோகிராம் தேயிலை 600 ரூபாவிற்கு விற்கப்படுவதாக தெரிய வந்துள்ளது.

அத்துடன் மத்திய மலைநாட்டில் நிலவுகின்ற காலநிலையை காரணமாக தேயிலையின் தரம் அதிகரித்துள்ளமை தேயிலை விலை அதிகரிப்பிற்கான காரணம் என்று இலங்கை தேயிலைச் சபை கூறியுள்ளது.

எவ்வாறாயினும் தேயிலை தொழிற்றுறையில் காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறை காரணமாக கேள்விக்கேற்றவாறு தேயிலையை வழங்குவதற்கு தேயிலை நிறுவனங்களுக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை தேயிலைச் சபை கூறியுள்ளது. (இ-10)


## வகுப்புக்கள்

தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புகள் மற்றும் குழுநிலை வகுப்புக்கள் பிரபல பாடசாலை ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன.

பிரத்தியேக வகுப்புக்கள் வீடு வந்தும் குழுநிலை வகுப்புக்கள் - நல்லூர் பின் வீதி (ராஜா கிறீம் கவுஸ் அருகாமை) நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு

தீபன் - 075 046 0496

தமிழ்வேந்தன் - 076 310 0506

(6893)


# இராசி பலன்

11.12.2016

(கார்த்திகை 26, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.12 மணிக்கு

துவாதசி பிற்பகல் 1.36 மணிவரை

பரணி பிற்பகல் 1.43 மணிவரை

சுபநேரம் 9.19-10.49 மணிவரை

இராகுகாலம் 4.49-6.19 மணிவரை

திருவண்ணாமலை தேர்

பிரதோச விரதம்

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| கேது செவ் | கிரகநிலை சந்திராஷ்டமம் சித்திரை-சுவாதி | | |
| சுக் | | | ராகு |
| புத | சனி சூரி | | குரு |

**மேடம்:** கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்று இடம்பெறலாம், மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், சுபகாரியச் செலவுகள் உருவாகும்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வாழ்க்கைத்தரும் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**கன்னி:** குடும்ப பெரியவர்கள் உங்கள் வழிபாடுகளில் குறை கண்டு கூறலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**துலாம்:** திட்டமிட்ட பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் அகலும், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**தனுசு:** தாழ்ந்த சுபாவமுண்டு, கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும், போசன சுகமுண்டு.

**மீனம்:** இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.





"ஏனையோரின் உரிமைகளுக்காக இன்றே எழுவோம்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். கலைத்தூது மண்டபத்தில் இடம்பெற்றது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகத்தின் செயலாளர் எஸ்.பத்மநாதன், நலன்புரி நிலையங்களின் இணைப்பாளர் எஸ்.அன்ரன் குயின், சிவில் சமூக மற்றும் பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளர் சட்டத்தரணி திருமதி சுபாஜினி கிசோர் ஆகியோர் அனுபவ உரையினை நிகழ்த்தியிருந்தனர். அதைத் தொடர்ந்து விழிப்புணர்வு நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது. இந்த நிகழ்வில் பொலிஸார், சிவில் சமூகத்தினர், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)

# தமிழகத்தின் பிரபல பேச்சாளர் நெல்லைக்கண்ணன் யாழ்.வருகை



(யாழ்ப்பாணம்)

தமிழகத்தின் பிரபல பேச்சாளர்களில் ஒருவரும் கவிஞருமான நெல்லைக் கண்ணன் யாழ்ப்பாணம் வருகின்றார். இன்று யாழ். நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகம் அகில இலங்கை அமுதசுரபிக் கலா மன்றத்துடன் இணைந்து நடத்தவுள்ள பாரதிவிழாவில் முதன்மை விருந்தினராக நெல்லைக் கண்ணன் கலந்துகொள்ளவுள்ளார்.

தமிழ்க்கடல், நாவுக்கரசர், இலக்கிய இமயம், இலக்கியப் பேரரசு, நெல்லை நக்கீரன், கம்பக் காட்டாறு, வாழும் வாரியர் எனப் பல கௌரவப் பட்டங்களைப் பெற்றவர் அவர்.

பாரதிவிழாவில் யாழ். மண்ணின் சிறப்பிசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் பாரதி பாடல்கள் இசை விருந்தும் இடம்பெறவுள்ளது. சிவஸ்ரீ. விஸ்வ பிரசன்னா குருக்கள் (நல்லூர்), சிவஸ்ரீசோ.குமாரதாச சர்மா, சிவஸ்ரீ கு.விஸ்வசுந்தர், ஈழத்து இளைய சௌந்தரராஜன் இ.அருள்ஜோதி, ஸ்ரீ. சுலக்ஷன், ம.தயாபரன், தி.மேரி நவரத்தினம், நாதன் உள்ளிட்ட பிரபல பாடகர்கள் இந்நிகழ்வில் பாடல்களை இசைக்கவுள்ளனர். ஆசிரியர் ஜேம்ஸ் அன்ரன் கீபோர்ட் இசையையும் ந.பிரேமானந்த் ஒக்ரோபாட் இசையையும் கபிலன் தபேலா இசையையும் இ.இராஜேஸ்வரன் பேஸ்கிற்றார் இசையையும் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் அமுதசுரபி கலாமன்ற அமைப்பாளர் பேராசிரியர் தி.வேல்நம்பி வரவேற்புரையையும் யாழ். இந்தியத்துணைத்தூதர் ஆ.நடராஜன் தலைமையுரையையும் ஆற்றவுள்ளனர்.

நிகழ்வின் தொடக்கமாக பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூரில் உள்ள பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்வணக்கம் இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

## மூன்று நூல்களின் வெளியீட்டு விழா

ஜீவநதி வெளியீடுகளான கலாநிதி த.கலாமணியின் தெளிதல், எம்மவர்கள், பூதத்தம்பி ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டுவிழா நாளை மறுதினம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.தேவரையாளி இந்துக்கல்லூரியில் இடம்பெறும்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபர் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நூல்களின் வெளியீடு இடம்பெறும். (இ-3)

## கலைவிழாவும் பரிசளிப்பும்

சரஸ்வதி சனசமூக நிலையத்தின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சரஸ்வதி முன்பள்ளி கலையரங்கில் இடம்பெறும்.

முன்பள்ளி முகாமைத்துவக்குழு தலைவர் சு.வைகுந்தநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ் வில் விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச செயலாளர் யு.ஜெலியன், ஏ.எம்.ரி.நிறுவன முகாமையாளர் இ.நிமலன், கு.ஜெயந்தன், கல்வியங்காடு ஜே/ 259 கிராம அலுவலர் சி.சுபாகரன், கல்வியங்காடு ஜே/259 அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செல்வேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-134)




சிவமயம்

"ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவா ராற்றலின் பின்"

## விற்பனைக்கு

யாழ்.நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 10 பரப்பு காணியுடன் கூடிய வீடும் மற்றும் பிறவுண் வீதியில் 2 வீடும் யாழ்.நகரின் வர்த்தக மையப்பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 50 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் யாழ். மானிப்பாய் வீதியில் 3 பரப்பில் அமைந்த வீடு வளவும் விற்பனைக்குண்டு. யாழ்.வைத்தியசாலை வீதியில் 2 கடைகள் 2 மாடி கட்டடத்துடன் உடன் விற்பனைக்குண்டு. திருநெல்வேலி பலாலி வீதியில் 6 பரப்புடன் கூடிய வீடும் பலாலி வீதி முகப்புடன் செல லங்கா முன்பாக 10 பரப்பு காணித்துண்டும் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் பழைய வீட்டுடன் 10 பரப்பு காணியும் சுண்டுக்குளியில் A9 வீதியில் பஸ்ரியான் ஹோட்டல் முன்பாக 6 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக காந்தி வீதியில் 10 பரப்பு காணியும் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் 12 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வின்சன் தியேட்டருக்கு அண்மையில் 10 பரப்பு காணியும்,

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 6 பரப்பு காணியும் கொழும்பு செட்டித் தெருவில் 4 பேர்ச் இல் அமைந்த கடையும் 6 பேர்ச் இல் அமைந்த கடையும், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் 5 பரப்பு காணித்துண்டும். பண்ணையில் கொழும்பு பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக 10 பரப்பு காணித்துண்டும். சுண்டுக்குளி A9 வீதியில் வஸ்தியாம் ஹோட்டலுக்கு அருகில் 3 பரப்புடன் கூடிய வீடும் கஸ்தூரியார் வீதியில் 3 பரப்புக் காணி (அன்றா பதிப்பகத்திற்கு அண்மையில்) யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த வீடும் காணியும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சத்திரசந்திக்கும் ரட்ணம் பாமசிக்கும் இடையில் மூன்று மாடிக் கட்டடத்துடன் கூடிய மூன்று கடைகளும் யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் சகல வசதிகளும் கூடிய கடையும் விற்பனைக்குண்டு. (C4555)

தொடர்பு:-கனகசபை தர்மகுலசிங்கம், இல.187/3,189 மின்சாரநிலைய வீதி,யாழ்ப்பாணம். 0777232535

# அம்பாந்தோட்டையில் 15 ஆயிரம் ஏக்கர் காணிகள் சீனாவுக்கு வழங்கப்படும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



தென் மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 15,000 ஏக்கர் காணிகளை சீன முதலீட்டாளர் களுக்கு நீண்ட கால குத்தகையின் கீழ் தர அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவித்த கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, அம்பாந்தோட்டை துறை முகத்தில் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலை நிறுத்தம் காரணமாக அந்த துறை முகத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள் ளதாக தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை தனி யார்மயப்படுத்த அரசாங்கம் தயாராகி வருவதாகவும் அதனை உடனடியாக நிறு த்துமாறு வலியுறுத்தியும் அந்த துறை முகத்தின் ஊழியர்கள் கடந்த 7ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள் ளனர்.

அதற்கு பதிலளித்த ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, ஜனாதிபதி மற்றும் சீன அரசுடன் மேற்கொண்ட பேச்சுவார்த் தைகளின் பின்னர் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள 15,000 ஏக்கர் காணிகளை சீன முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால குத்தகையின் கீழ் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்தது என்று அறிவித்தார்.

இதன்படி சனதா பிரதேசத்தில் சுமார் 400 க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இதனை அம்பாந்தோட்டை மக்கள் எதிர்ப்பதாக போலியான பிரசாரங்களை முன்னெடுத்து இந்த வேலை நிறுத்தம் நடை பெற்று வருவதாக தெரிவித்த அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த சூழ்ச்சியின் பின்னணியில் கூட்டு எதிர்க்கட்சி இருப் பதாகவும் குற்றம்சாட்டினார். (இ-10)

### வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் ROOM வாடகைக்கு உண்டு (அரச வேலை பார்க்கும் அல்லது படிக்கும் பெண்கள் மட்டும்)
தொடர்பு - 075 738 6796 (8884)

### தவறிவிட்டது

இணுவில் தெற்கு, இணுவிலை வசிப் பிடமாகக் கொண்ட கமலநாதன் கலைரஜி என்பவருடைய 666982959V எனும் இல க்கமுடைய அடையாள அட்டை ஒரு மாத காலத்துக்குமுன்யாழ்.நகரப்பகுதிக்குசென்று வரும் வழியில் தவறவிடப்பட்டுள்ளது. கண் டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (8885)
தொடர்புகளுக்கு- 021 224 1852

SALE
பண்டிகைக்கால
விசேட விலைக்கழிவு
50% வரை
LOT MIXED TILES களுக்கு
வாடிக்கையாளர்கள் எதிர்பாக்கமுடியாத
விலைக்கழிவில்...
HOUSE OF CERAMICS
581, K.K.S Road, Jaffna. | 115, Stanley Road, Jaffna.

### வாகனம் வாடகைக்கு உண்டு

TATA 207 Pickup(Aluminija full body)மாத அடிப்படையில் வாடகைக்கு கொடுக்கப்படும். (நிறுவனங்கள், வியாபாரஸ்தாபனங்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு:-077 354 9092 (8886)

### கடை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கும் ரயில் கடவை க்கு இடையில் (சன்னதி முருகன் கடைக்கு அருகாமையில்) 2 கடைகள் வாடகைக்கு உண்டு. (8883)
T.P:-0772030309

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம்

### 2017 ஆம் ஆண்டுக்கான பகிரங்க கேள்வி அறிவித்தல்

வலிகாமம். தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மீன்சந்தை,இறைச்சிக் கடை,மலசலகூடம் என்பவற்றினை 01.01.2017 தொடக்கம் 31.12.2017ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | மாத வாடகை (VAT, NBT தவிர) |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | |
| 2 | கருவாட்டுக்கடை-03 | 750.00 | 7500.00 | 250.00 |
| 3 | முட்டைக்கடை இல-04 | 750.00 | 7500.00 | 250.00 |
| 4 | கோழிக்கடை இல-06 | 750.00 | 7500.00 | 250.00 |
| 5 | பொது மலசலகூடம் | 750.00 | 7500.00 | |
| உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5000.00 | 250.00 |

01. காலம் - 16.12.2016 முற்பகல் 10.00 மணி
02. இடம் - தலைமை அலுவலகம்.

ஏலம் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தி.சுதர்சன், செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,சுன்னாகம். (C-6654p)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கி.பா:18உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில
தொ.இ: B/5705

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 30சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'6"
தகைமைதொழில்:வங்கியாளர்
தொ.இ: B/1949

பிறப்பு: 1984RC
உயரம்: 168CM
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/4481

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 32சூரிசெவ் 12 இல்
உயரம்: 163cm
தகைமை/தொழில்:BIT/வங்கியாளர்
தொ.இ: B/6091

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
திகி.பா: 19
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/2797

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 41
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/அரசதொழில்
தொ.இ: G/2839

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 25செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:பொறியியலாளர்
தொ.இ: G/2854

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 12சூரிசெவ் 6 இல்
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
தொ.இ: G/2859

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:-kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# முகத்தில் ஏன் அந்த நான்கு புள்ளிகள்? கேள்விகளை உருவாக்கும் 'ஜெ' மரணம்

ஜெயலலிதாவின் உயிர் டிசெம்பர 5, இரவு 11:30 மணிக்குப் பிரிந்தது என அப்பலோ நிர்வாகம் அறிவித்தது. அன்று, இரவே இறுதிச் சடங்குகள் போயஸ் கார்டனில் நிறைவேற்றப்பட்டு காலையில் ராஜாஜி ஹோலில் மக்கள் பார்வைக்கு ஜெயலலிதாவின் உடல் வைக்கப்பட்டது. அப்போது தான் ஜெயலலிதாவின் முகத்தில் நான்கு புள்ளிகள் இருப்பது தெரிய வந்தது.


இந்தப் புள்ளிகள் என்ன என்ற விவாதங்களும் சர்ச்சைகளும் கிளம்பின. அதுமட்டுமில்லாமல் செப்டெம்பர் 22ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஜெயலலிதா, 75 நாட்கள் சிகிச்சைக்குப் பிறகும் சற்றும் மாறாமல் நாம் எப்போதும் பார்க்கும் ஜெயலலிதாவாகவே அஞ்சலிக்கு வைக்கப்பட்டதும் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியது.

'முகத்தில் இருந்த நான்கு புள்ளிகள், அதே முகம்' எனப் பல விடயங்களுக்கு விடை தேடினால் கிடைக்கும் பதில்களில் ஒன்று இம்பாமிங். இது உடலைப் பதப்படுத்தப் பயன்படுத்தப்படும் முறைகளில் ஒன்று.

இதில் உடலில் இருந்து இம்பாமிங் செய்ய உதவும் கருவி மூலம் குறைந்த அழுத்தத்தில் இரத்தம் நீக்கப்பட்டு உடலில் அதே சிறுதுளை மூலமாக பார்மால்டிஹைடு கலந்த திரவம் நிரப்பப்படும்.

இது உடலை உயர் குளிர் நிலையில் வைத்துப் பாதுகாக்கப் பயன்படும். சோவியத் ஜனாதிபதி லெனின் உள்ளிட்ட உலகின் முக்கியமான தலைவர்கள் இறந்த போது இதேபோன்ற இம்பாமிங் முறையில்தான் அவர்களது உடல் பதப்படுத்தப்பட்டது.

இந்த இம்பாமிங் குறித்து வைத்தியர் ஒருவரிடம் கேட்டபோது, "உடலைப் பதப்படுத்தி, பாதுகாக்கத்தான் இந்த முறை பின்பற்றப்படுகிறது. இந்த முறையைப் பயன்படுத்தி பதப்படுத்தப்படும் ஒருவரது உடலைக் குறைந்த பட்சம் மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை பாதுகாக்க முடியும். ஆனால், உயர் குளிர்நிலையில் உடலைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.



கன்னத்தில் நான்கு புள்ளிகள்...

அப்படி வைக்க முடிந்தால் ஒருவரது உடலை தாராளமாக மூன்று மாதகாலம் வரை எந்த மாற்றமும் இன்றி அப்படியே பாதுகாக்க முடியும்.

இதேபோலத்தான் ஜெயலலிதாவுக்கும் செய்யப்பட்டது என்றால் மாலை 5 மணிக்கு முதல்வருக்கு சிகிச்சை அளித்து வருகிறோம் வதந்திகளை நம்பாதீர்கள்' என்ற அறிக்கையை அப்பலோ வெளியிட்டது. இரவு 11:30 மணிக்கு இறந்தார்' என்ற அறிவிப்பு வருகிறது. இரவு 2 மணிக்கெல்லாம் முதல்வர் உடல் வைத்திய சாலையில் இருந்து வெளியேறுகிறது.

இதற்கு இடைப்பட்ட நேரத்தில் இம்பாமிங் செய்யப்பட்டதா? முதல்வரது உடல் காலையில் பார்வைக்கு வைக்கப்பட்டது போல மாலையில் இல்லை. உடலில் சில மாற்றங்களை மக்களால் உணர முடிந்தது.

இதன் பின்னால் என்ன நடந்திருக்கும்? இம்பாமிங் செய்யப்பட்ட உடலை நீண்ட நேரம் உயர் குளிர் நிலையின்றி வைக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால்தான் முதல்வர் உடல் ஒரே நாளில் அடக்கம் செய்யப்பட்டதா? என்ற கேள்வியும் எழுகிறது" என்றார்.

இதையெல்லாம் தாண்டி இம்பாமிங் செய்யப்பட்ட ஒருவரது உடலை மூன்று மாதங்கள் வரை பாதுகாக்கலாம் என்ற தகவலும் முகத்தில் இருக்கும் துளைகளும் 'முதல்வர் டிசெம்பர் 5 ஆம் திகதி அன்று தான் இறந்தாரா? என்ற கேள்வியை எழுப்புகிறது.

இந்தக் கேள்விகளுக்கு பதில் அப்பலோவுக்கும், மன்னார்குடி குடும்பத்தாருக்கும் மட்டுமே தெரியும்!

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016 11

- 1282 - வேல்சின் கடைசி பழங்குடி இளவரசர் கடைசி லெவெலின் கொல்லப்பட்டார்.
- 1789 - ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பழமையான பொதுப் பல்கலைக்கழகம் வட கரொலைனா பல்கலைக்கழகம் (சாப்பல் ஹில்) அமைக்கப்பட்டது.
- 1792 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் நாட்டுத்துரோகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டான்.
- 1816 - இந்தியானா ஐக்கிய அமெரிக்காவின் 19வது மாநிலமானது.
- 1907 - நியூசிலாந்தின் நாடாளுமன்றக் கட்டடம் தீயில் எரிந்து சாம்பரானது.
- 1917 - பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடம் இருந்து ஜெருசலேமை மீட்டன.
- 1927 - சீனாவின் குவாங்சூ நகரை கம்யூனிஸ்டுகள் கைப்பற்றி அதனை குவாங்சூ சோவியத் என மாற்றியிருப்பதாக அறிவித்தனர்.
- 1931 - அவுஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து, நியூசிலாந்து, மற்றும் தென்னாபிரிக்கா ஆகியவற்றுக்கு தமது முழுமையான அரசியலமைப்புகளைப் பேணும் சட்டமூலம் வெஸ்ட்மின்ஸ்டர் சட்டம் 1931 பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.
- 1936 - ஐக்கிய இராச்சியத்தின் மன்னன் எட்டாம் எட்வேர்ட் முடி துறந்தார்.
- 1937 - எஸ்தோனியாத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் ஸ்டாலின் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் இத்தாலியும் ஐக்கிய அமெரிக்காமீது போரை அறிவித்தன.
- 1946 - ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) நிறுவனம் அமைக்கப்பட்டது.
- 1958 - அப்பர் வோல்ட்டா பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1964 - நியூயோர்க் நகரில் ஐநா பொதுச்சபைக் கூட்டத்தில் சே குவேரா உரையாற்றினார். இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஐநா கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.
- 1972 - அப்பல்லோ 17 சந்திரனில் இறங்கியது.
- 1981 - எல் சல்வடோரில் இராணுவத்தினர் நாட்டின் உள்நாட்டுப் போரின் ஒரு கட்டமாக கிட்டத்தட்ட 900 பொதுமக்களை கொன்றனர்.
- 1993 - மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உயர்மாடிக் கட்டடம் ஒன்று வீழ்ந்ததில் 48 பேர் கொல்லப்பட்டனர்.
- 1994 - உருசியவின் அரசுத்தலைவர் போரிஸ் யெல்ட்சின் உருசியப் படைகளை செச்சினியாவுக்கு அனுப்பினார்.
- 1998 - தாய்லாந்தைச் சேர்ந்த விமானம் வீழ்ந்ததில் 101 பேர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

- 1781 - சர் டேவிட் ப்ரூஸ்டர், ஸ்காட்லாந்து இயற்பியலாளர். (இ. 1868)
- 1803 - ஹெக்டர் பேர்லியோஸ், பிரெஞ்சு இசையமைப்பாளர். (இ. 1869)
- 1843 - ராபர்ட் கோக், ஜேர்மனிய அறிவியலாளரும் மருத்துவரும். (இ. 1910)
- 1882 - மாக்ஸ் போர்ன், ஜேர்மனிய இயற்பியலாளரும், நோபல் விருதாளரும். (இ. 1970)
- 1882 - சுப்பிரமணிய பாரதி, கவிஞர் .(இ. 1921)
- 1890 - மார்க் டோபே, அமெரிக்கப் பண்பியல் வெளிப்பாட்டிய ஓவியர். (இ. 1976)
- 1911 - நகிப் மஹ்ஃபூஸ், நோபல் பரிசு பெற்ற எகிப்திய எழுத்தாளர் . (இ. 2006)
- 1918 - அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர். (இ. 2008)
- 1931 - ஓஷோ, இந்திய ஆன்மீகத் தலைவர். (இ. 1990)
- 1935 - பிரணப் முக்கர்ஜி, இந்திய அரசியலவாதி.
- 1951 - பீட்டர் டி. டேனியல்ஸ், மொழியியல் அறிஞர்.
- 1954 - பிரசந்தா, நேபாளப் பிரதமர்.
- 1958 - ரகுவரன், நடிகர். (இ. 2008)
- 1969 - விஸ்வநாதன் ஆனந்த், இந்திய சதுரங்க ஆட்டக்காரர்.
- 1980 - ஆர்யா, தமிழ்த் திரைப்பட நடிகர்.


**இறப்புகள்**

- 1937 - ஜான் ஆன்வெல்ட், எஸ்தோனியாவின் தலைவர். (பி. 1884)
- 2004 - எம். எஸ். சுப்புலட்சுமி, கருநாடக இசைக் கலைஞர் . (பி. 1916)

**சிறப்பு நாள்**

- புர்கினா பாசோ - குடியரசு நாள் . (1958)

## பரீட்சையில் பாட்டி



தற்போது நடைபெற்று வரும் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 73 வயதான பெண் ஒருவரும் தோற்றியுள்ளார். மாத்தறை நாதுகல பிரதேசத்தை சேர்ந்த என். என்.எஸ். கல்யாணி என்ற 73 வயதான பெண் சாதாரண தரப்பரீட்சையில் தகவல்தொழிநுட்பப் பாடத்திற்கான பரீட்சையில் தோற்றினார். மாத்தறை இல்மா கல்லூரியின் பரீட்சை மண்டபத்தில் அவர் பரீட்சைக்கு தோற்றியதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 70 | 70 | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 35 | 70-100 | 50 | 100 | 60 |
| தக்காளி | 60 | 100 | 45 | 60 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 40 | 80 | 20 | 40 | 50 | 60 | 40 |
| கரட் | 120 | 80 | 60 | 100-140 | 100 | 160 | 100 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 60 | 40 | 60 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 60 | 35 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 400 | 110 | 280 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 120 | 70 | 100 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 60 | 60 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 160 | 120 | 180 | 130 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 60 | 60 | 70 | 120 | 60 |
| கறிமிளகாய் | 150 | 300 | 100 | 200 | 130 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 180 | 200 | 100 | 300 | 120 | 160 | 200 |
| போஞ்சி | 180 | 400 | 200 | 200 | 180 | 200 | 220 |
| கத்தரிதம்புள்ள | 60 | 20 | 40 | 60 | – | 60 | 50 |
| கீரை - 1பிடி | 40 | 60 | 30 | 40 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-35 | 50 | 30 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 300 | – | – | – | 250 | – | 300 |
| வெங்காயப்பூ | 160 | – | – | – | – | 200 | – |
| முள்ளங்கி | 50 | – | 50 | 80 | 60 | 120 | 70 |
| பொன்னாங்காணி | 40 | – | 10 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 15 | – | 15 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | – | – | 80 | – | 100 | 60 |

## “ உங்களுக்கு முன் நான் போயிடணும்”

# ‘ஜெ’ சொல்ல கண்டித்தார் ‘சோ’ சொன்னதை மெய்ப்பித்தார் ‘ஜெ’



சாட்டிலைட் சனல்கள் இல்லாத காலம் அது. அரசு தொலைக்காட்சியான தூர்தர்ஷன் மட்டுமே அப்போது கோலோச்சிக் கொண்டிருந்தது. தனியார் தயாரித்துத் தரும் தொடர்களை தூர்தர்ஷனில் ஒளிபரப்ப ஏக டிமாண்ட் இருந்தது. காசைத் தள்ளினால்தான் சீரியல்களுக்கு அனுமதியே கிடைக்கும். அப்படிப்பட்ட சூழலில் தனது நாடகத்துக்கு அனுமதி கேட்டு அப்ளிகேஷன் போட்டிருந்தார் சோ. அனுமதி கிடைக்கவில்லை. இத்தனைக்கும் அப்போது ராஜீவ் அமைச்சரவையில் தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்த அருண் நேரு, சோவுக்கு ரொம்ப நெருக்கம். ஆனாலும் சிபாரிசுக்கு போய் நிற்கவில்லை சோ. "என்னோட சீரியலுக்கு அனுமதி தர தூர்தர்ஷன் அலுவலர்கள் எதையோ எதிர்பார்க்கிறார்கள்" என தனது ஊழியர்களிடம் சொல்லி ஆதங்கப்பட்டார். "எதுக்கு கவலைப்படுறீங்க சார்... பணத்தை கொடுத்திட வேண்டியதுதானே" என ஊழியர்கள் சொன்னபோது, "பணம் இல்லாமல் இல்லை. அதைக் கொடுத்து சீரியலுக்கு அனுமதி வாங்கிவிடலாம். அதற்கு நான் துக்ளக்கை நிறுத்திவிட வேண்டும். பரவாயில்லையா?" என பதில் சொன்னார் சோ. அவர்தான் சோ!

1991 - 1996 ஜெயலலிதா ஆட்சி கடும் விமர்சனத்துக்கு உள்ளானது. 1996 சட்டசபைத் தேர்தல் நேரத்தில், காங்கிரஸில் இருந்து பிரிந்து த.மா.கா என்கிற புதிய கட்சியை மூப்பனார் ஆரம்பித்து தி.மு.கவோடு கூட்டணி வைத்தார். அந்த கூட்டணிக்கு நடிகர் ரஜினியின் ஆதரவும் கிடைத்தது. "ஜெயலலிதா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்ற முடியாது. அதனால் தி.மு.க கூட்டணிக்கு வாக்களியுங்கள்" என பகிரங்கமாகவே சொன்னார் ரஜினி. த.மா.கா கூட்டணி அமையவும் ரஜினி ஆதரவு தரவும் பின்னணியில் இருந்து செயற்பட்டவர் சோ. தி.மு.க ஆட்சியும் அமைந்தது. அதனாலேயே சோ மீது வெறுப்பு காட்டினார் ஜெயலலிதா. அந்தக் காலகட்டத்தில்தான் சோவின் மகள் திருமணம் நடந்தது. "மகளின் திருமணத்துக்கு ஜெயலலிதாவுக்கு பத்திரிகை வைக்கலாமா?" என துக்ளக் ஊழியர்களிடம் கருத்துக் கேட்டார். அதன்பிறகுதான் அழைப்பிதழ் வைக்க ஜெயலலிதாவிடம் அப்பாய்ன்மென்ட் கேட்டிருக்கிறார் சோ. "நீங்க வர வேண்டாம். நானே உங்க ஆபிஸுக்கு வருகிறேன்" என சொல்லி, துக்ளக் ஆபிஸுக்கு ஜெயலலிதா போனார். 'ஜெயலலிதா வருகிறார்' என்கிற தகவலை ஊழியர்களிடம் சொன்ன சோ, "அவங்க வருவாங்க... உங்கள் ஒவ்வொருவரையும் அவங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். அவரவர் இருக்கையிலேயே இருங்கள்" என்றார். ஜெயலலிதா வந்ததும் அறிமுகப் படலம் நடந்து முடிந்தது. அதன்பிறகு, "மாடியில்தான் என் ஆபீஸ். உன்னால படி ஏற முடியுமா? எதற்காக சிரமப்படுகிறாய். இங்கேயே பேசிக் கொள்ளலாமா?" என சோ சொல்ல... "எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை" என சொல்லி, படியேறி போய் அவர் அறையில் பேசிவிட்டுப் போனார் ஜெயலலிதா. 'நீ... வா...' என ஜெயலலிதாவிடம் ஒருமையில் பேசியவர், ஊழியர்களிடம் 'அவங்க... வருவாங்க' என பன்மையில் பேசினார். முந்தையது அந்நியோன்யம் பின்னது மரியாதை!

சில வருடங்களுக்கு முன்பு உடல்நலக் குறைவால் அப்பலோவில் அட்மிட் ஆகியிருந்தார் சோ. அவரை பார்க்கப் போயிருந்தார் ஜெயலலிதா. "உடம்பை நல்லபடியாக பார்த்துக் கொள்ளுங்க... ரெஸ்ட் எடுங்க... நீங்க ரொம்ப வருஷம் இருக்கணும். உங்களுக்கு முன்னாடி நான் போயிடணும். எனக்குப் பின்னாடிதான் நீங்க போகணும்" என சோவிடம் ஆறுதல் சொல்லியிருக்கிறார் ஜெயலலிதா.

'அப்படி எல்லாம் பேசக்கூடாது' என்று கண்டித்தார் சோ. ஆனால், ஜெ. சொன்னதுதான் இறுதியில் நடந்தது. முந்தைய நாள் ஜெயலலிதாவும் பிந்தைய நாள் சோவும் இறந்துபோனார்கள்!

தீவிர இந்துத்வா ஆதரவாளர் சோ. பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது துக்ளக் அட்டைப் படத்தை கறுப்பு நிறத்தில் போட்டு எதிர்ப்பை பதிவு செய்தார். தனது அலுவலகத்தில் பணியாற்றிய முஸ்லிம் ஊழியர் ஒருவருக்கு ஐந்து வேளையும் தொழுகை நடத்த தனி அறை ஒதுக்கித் தந்த பண்பாளர்.

துக்ளக்கில் வெளிவரும் 'கேள்வி பதில்' பகுதிக்கு ஒவ்வொரு புதன் கிழமையும் தவறாமல் பதில்களை கொடுத்துவிடுவார் சோ. வேலைகள் இருந்தால் மட்டுமே வியாழக்கிழமை வரையில் தள்ளிப் போகும். அவர் இறப்பதற்கு முன்புகூட பதில்களை கொடுத்துவிட்டுத்தான் இறந்து போனார்.

அந்த பதில்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்றுதான் ரெடியானது. தனது மருமகள் சித்ராவை அழைத்து வாசகர் கேள்விகளுக்கு பதில்களைக் கொடுத்திருக்கிறார். துக்ளக் ஆரம்பித்த காலத்தில் இருந்து கேள்வி பதில் பகுதி கடைசி நேரத்தில் பிரின்டுக்கு போன வரலாறு கிடையாது. அதுதான் முதல்முறை. அது கடந்த ஞாயிறு அன்றைக்குத்தான் அரங்கேறியது. உடல்நிலை குன்றி வீட்டில் இருந்த காலகட்டத்தில்கூட ஒவ்வொரு இதழும் அவரின் பார்வைக்குப் போய் ஓகே ஆனபிறகுதான் பிரின்டுக்கே போகும். அப்படித்தான் கடந்த துக்ளக் இதழை தயார் செய்துவிட்டு எடிட்டரிடம் 'ஓகே' வாங்க சப் எடிட்டர்கள் அப்பலோ போனார்கள். அதே ஞாயிற்றுக்கிழமைதான் அப்பலோவில் இருந்த ஜெயலலிதா சீரியஸ் என செய்திகள் பரவின. "நிறைய கெடுபிடிகள் சார்... நாங்க போராடித்தான் இங்கே வந்தோம்" என சோவிடம் சொல்லியிருக்கிறார்கள் சப் எடிட்டர்கள். "யாராவது வி.ஐ.பிகள் வருகிறார்களா என்ன?" என கேட்டுவிட்டு பக்கங்களைப் பார்த்து திருத்தங்களை சொல்லியிருக்கிறார் சோ. "கடைசி நேரத்தில் பதில்களை கொடுத்திருக்கீங்க... வழக்கம் போல இருந்தது சார்" என சப் எடிட்டர்கள் சொல்ல, "அப்ப இம்ப்ரூவ்மென்டே இல்லை என்கிறீர்களா?" என இரட்டை அர்த்தத்தில் கேட்டுவிட்டு, "சோவின் கேள்வி பதில்கள் வருவதை போஸ்டரில் போடுங்க" எனவும் சொல்லியிருக்கிறார். 'சோவின் கேள்வி பதில்கள்' இதுவரைக்கும் போஸ்டரில் வந்ததே கிடையாது. "அவ்வளவுதான் சார்... இனிமேல் என்ன இருக்கு சார்" என்றபடியே சப் எடிட்டர்களை அனுப்பி வைத்திருக்கிறார்.

"இம்ப்ரூவ்மென்ட் இல்லையா?" என அவர் எதற்காக கேட்டார் என தெரியவில்லை. அதன்பிறகு அவரின் உடல்நிலையில் முன்னேற்றமே இல்லாமல் போய்விட்டது.

உடனே ஐ.சி.யூவுக்கு சோ மாற்றப்பட்டார்.



அதேநேரம் ஜெயலலிதாவின் உடல்நிலையும் சீரியஸ் ஆகிக் கொண்டிருந்தது. தீவிர சிகிச்சைப் பிரிவில் இரண்டு பேர்களின் உயிர்களும் போராடிக் கொண்டிருந்தன. ஜெயலலிதா உயிர் பிரிந்தபோது அந்த செய்தி சோவின் நினைவுக்குப் போய் சேரவில்லை. அடுத்த 30 மணி நேரத்தில் சோவின் உயிரும் உடலை விட்டுப் பிரிந்து போனது ●

ஜூனியர் விகடன்

## பங்களாதேஷ் பிறிமியர் லீக்

# லிவிஸ் - சங்கக்கார அதிரடி


# கிண்ணம் வென்று சாதித்தது டாக்கா

**பங்களாதேஷ் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் ராஜ் ஷாஹறி அணியுடனான இறுதிப் போட்டியில் டாக்கா அணி வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.**




இந்திய பிறிமியர் லீக் (IPL) போட்டிகளைப் போல பங்களாதேஷ கிரிக்கெட் வாரியமும் பங்களா தேஷ் பறிமியர் லீக் கிரிக்கெட் போட்டி நடத்துகிறது. 7 அணிகள் பங்கேற்ற இப்போட்டியில் இறுதிப் போட்டிக்கு ஷகிப் - அல்-ஹசன் தலைமையிலான டாக்கா டைன மைட்ஸ் அணியும், டேரன் சமி தலைமையிலான ராஜ்ஷாஹறி கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற டாக்கா அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்து விளையாடியது. அவ்வணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 159 ஓட்டங்கள் எடுத்தது. லீவிஸ் 45 ஓட்டங்களும், சங்கக்கார 36 ஓட்டங்களும் எடுத்தனர். பின்னர் விளையாடிய ராஜ்ஷாஹறி அணி 17.4 ஓவரில் 103 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால் டாக்கா அணி 56 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.



## இலங்கைக்கு எதிரான ரி-20

## களமிறங்குகிறார் ஜஸ்டின்

இலங்கை அணி மூன்று இருபது- 20 கிரிக்கெட் போட்டிகளில் விளை யாடுவதற்காக அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அவுஸ் திரேலியா செல்கிறது.

முதல் போட்டி மெல்பேர்னில் பெப்ரவரி 17 ஆம் திகதி தொடங் கு கிறது. 2 ஆவது போட்டி 19ஆம் திகதியும், 3 ஆவது மற்றும் கடைசி போட்டி 22 ஆம் திகதியும் நடக்க இருக்கிறது.


அதே சமயத்தில் பெப்ரவரி 23 ஆம் திகதி இந்தியா - அவுஸ் திரேலியா அணிகளுக்கு இடையி லான டெஸ்ட் தொடர் தொடங்கு கிறது.

இரண்டிற்கும் வெவ்வேறு அணி என்பதால் அவுஸ்திரேலியா டெஸ்ட் அணி முன்கூட்டியே இந்தியாவிற்கு வந்து விட திட்டமிட்டுள்ளது. அந்த அணியுடன் தலைமை பயிற்சி யாளர் லீமென் இந்தியா வந்து விடுவார். இதனால் இலங்கை அணிக்கெதிரான இருபது-20 அவுஸ்திரேலிய அணிக்கு பயிற்சி யாளர் இருக்கமாட்டார்.

ஆகையால், ஜஸ்டின் லாங் கரை இலங்கை அணிக்கெதிரான தொடருக்காக பயிற்சியாளராக நியமித்துள்ளது அவுஸ்திரேலிய

## வரி ஏய்ப்பு புகார்

## சிக்குவாரா ரொனால்டோ



போர்ச்சுகல் அணியின் தலைவரும், ஸ்பெயினை சேர்ந்த ரியல் மாட்ரிட் கிளப்புக்காக ஆடி வருபவருமான பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ மீது வரி ஏய்ப்பு புகார் கிளம்பியுள்ளது. அவர் கடந்த ஆண்டு மட்டும் ரூ.1,600 கோடி சம்பாதித்து இருப்பதாகவும், இதில் தனது புகைப்பட உரிமத்தை வழங்கிய ஒப்பந்தத்தில் மட்டும் ரூ.1,000 கோடி பெற்றதாகவும் பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. அதற்குரிய வரியை அவர் முறைப்படி கட்டினாரா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

## மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம்

## சாதனைக்கு காத்திருக்கும் இந்தியா

இந்தியாவின் அகமதாபாத்தில் உள்ள சர்தார் பட்டேல் கிரிக்கெட் மைதானத்தை உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானமாக உருவாக்க குஜராத் கிரிக்கெட் சங்கம் முடிவு செய்துள்ளது.

இதனையடுத்து இந்த மைதான த்தை இடித்து கட்டுவதற்கான பணி கள் தொடங்கப்படவுள்ளன.

இதன்மூலம் 1,10,000 ரசிக ர்கள் ஒரே நேரத்தில் அமர்ந்து போட்டியை ரசிக்க முடியும். தொட ர்ந்து பார்க்கிங் வசதி, குளிர்சாதன பெட்டிகளை அமைக்கும் வசதிக ளும் செய்து கொடுக்க முடிவு செய் யப்பட்டுள்ளது.



இந்த வேலைகள் முடிய இர ண்டு ஆண்டுகள் ஆகும் என குஜ ராத் கிரிக்கெட் சங்கத்தின் செய லாளர் ராஜேஷ் பட்டேல் தெரிவித் துள்ளார்.

தற்போதைய சூழலில் மெல் பேர்ன் கிரிக்கெட் மைதானமே உலகின் மிகப்பெரிய மைதான மாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கையுடன் செயற்படுகிறார் முரளி விஜய்;

# சதமடித்ததைத் தொடர்ந்து கவாஸ்கர் வாழ்த்து

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் தொட க்க வீரர் முரளிவிஜய் சதம் அடித் தார்.

அடுத்த 2 டெஸ்டில் அவரால் ஓட்டங்கள் குவிக்க முடியவில்லை. ஷாட்பிட்ச் பந்துகளில் விக்கெட்டு களை பறிகொடுத்தார். இதனால் அவர் நெருக்கடியில் இருந்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்டில் முரளிவிஜய்



அற்புதமான ஆட்டத்தை வெளிப் படுத்தினார்.

அவருக்கு இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கவாஸ் கர் பாராட்டு தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

முரளிவிஜய் ஷாட் பிட்ச் பந்து களை எதிர்கொள்ள கடுமையாக உழைத்து இருக்கிறார். அவ ருக்கு பயிற்சியாளர் அனில் கும்ப்ளே நம்பிக்கை அளித்து இருக்கிறார்.

அந்த நம்பிக்கையை முரளி விஜய் காப்பாற்றி இருக்கிறார். அவர் முன்னேற்றம் அடைந்து வருகிறார்.

முரளிவிஜயும், புஜாராவும் ஒரு வர் மீது ஒருவர் அதிக நம்பிக்கை வைத்து விளையாடினார்கள். அஸ் வின் 23 முறை 5 விக்கெட் வீழ்த்தி உள்ளார். அது ஒரு துடுப்பாட்ட வீரர் 23 சதம் அடிப்பதற்கு சமமாகும் என்றார்.

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






(நேற்றைய தொடர்ச்சி...)

இப்போது மட்டும் அல்ல, அப்போதும் மாநகரத்தின் நெரிசலில் தொலைந்து போகாமல் இருப்பது என்பது ஒரு கடும் தவம் போன்றதாகத்தான் இருந்தது. தொலைந்து போவது என்பது எலும்பு மஜ்ஜைகளால் ஆன பூத உடல் தொலைந்து போவது அல்ல... தன் சுயம், தன் இருப்பு தொலைந்து போகாமல் இருப்பது. இதற்காக வித்யாவதி போராடிக்கொண்டிருக்கும் போது தான், விதியோ அல்லது தற்செயலோ... வேதவல்லியின் சுயத்தையும், இருப்பையும் வேறுவிதமாக வடிவமைக்க காத்துக் கொண்டிருந்தது.

ஆம். வித்யாவதியை சந்திக்க வரும் தயாரிப்பாளர்கள் வேதவல்லிக்கும் திரைப்படத்தில் நடிப்பதற்கேற்ற தோற்றம் இருப்பதைக் காண்கிறார்கள். தங்கள் படங்களில் நடிக்கக் கேட்கிறார்கள். வேதவல்லிக்குக் குழப்பம்.

என்ன முடிவு செய்வது என்று தெரியவில்லை... அவர் சென்னைக்கு வந்தது, தனது இரண்டு பிள்ளைகளுக்கும் நல்ல கல்வியை வழங்க... நல்ல எதிர்காலத்தைக் கட்டமைத்துத் தர... ஆனால், எதிர்பார்க்காத வாய்ப்பு வந்து இருக்கிறது. வாய்ப்பை ஏற்றுக் கொள்ளலாம் தான். ஆனால், இந்த விடயம் அப்பாவுக்குத் தெரிந்தால் நிச்சயம் கோபப்படுவார். எதைத் தீர்மானிப்பது என்று பல்வேறு யோசனைகளில் இருந்த போது தான், கன்னடப் படத் தயாரிப்பாளர் கெம்பராஜ் விடமிருந்து மீண்டும் அழைப்பு.

"மீண்டும் கேட்கிறேன். என் படத்தில் நடிக்க சம்மதமா...?" - கெம்பராஜ்.

"மீண்டும் அதே நபரிடமிருந்து வாய்ப்பு. நிச்சயம் இது ஏதேச்சையானது அல்ல. இது தான் இறைவன் நமக்குக் காட்டி இருக்கும் பாதை. இதை நிராகரிப்பது, நிச்சயம் முட்டாள்தனமானது." ஆம், அந்தப் பாதையில் பயணிக்கத் தீர்மானிக்கிறார். வாய்ப்பை ஏற்றுக் கொள்கிறார். வேதவல்லி சந்தியாவாக மாறுகிறார்.

### சென்னை-பெங்களூர்-சென்னை

சந்தியாவுக்கு நிறைய பட வாய்ப்புகள் வரத் தொடங்குகின்றன. பெரிய வேஷங்கள் எல்லாம் இல்லைதான். ஆனால், சிறுசிறு கதாபாத்திரங்கள் என வாய்ப்புகள் கதவைத் தட்டிய வண்ணம் இருக்கின்றன. எப்போதும்... எல்லோருக்கும்... விரும்பியது எல்லாம் கிடைக்காது அல்லவா...? சந்தியாவுக்கும் அது கிடைக்கவில்லை. அவர் சென்னைக்கு வந்தது, தம் குழந்தைகளின் நல் எதிர்காலத்துக்காக.

ஆனால், இப்போது அவர்களைக் கவனித்துக்கொள்ள முடியாத அளவுக்கு, பரபரப்பான வாழ்க்கை. என்ன செய்யலாம்...? வேறு வழியே இல்லை... மீண்டும் அம்முவையும், பாப்புவையும் பெங்களூருக்குத் தன் தந்தை வீட்டுக்கு அனுப்பி வைக்கிறார்.

முதன் முதலாக அம்மு, தன் அம்மாவைப் பிரிகிறார். கனத்த இதயத்துடன் பெங்களூர் பயணம் ஆகிறார். ரெங்கசாமியும், கமலம்மாவும், சந்தியாவின் தங்கை பத்மா எனக் குடும்பமே அம்மு மீது பாசத்தைக் கொட்டி கவனித்துக் கொண்டாலும், அந்த வயதில் அம்முவுக்குத் தேவைப்பட்டது, அம்மாவின் அரவணைப்பு... ஆம். அம்மாவுக்காக அம்மு எப்போதும் காத்துக் கொண்டிருக்கிறார்.

சந்தியாவுக்கும் இது புரியாமல் இல்லை. இந்தப் பாதையில் செல்லத் தீர்மானித்தது தம் பிள்ளைகளுக்காகத்தானே...? அவரும் ஒருநாள் ஓய்வு கிடைத்தாலும், பெங்களூர் சென்று அம்முவை பார்த்துக்கொள்கிறார்.

அம்முவுக்குப் பிடித்தமான அனைத்தும் வாங்கித் தருகிறார். அம்முவை மகிழ்வாக வைத்துக்கொள்ள என்னவெல்லாம் வாங்கித் தர முடியுமோ... அதையெல்லாம் செய்கிறார்.

ஆனால், பாவம்.. சந்தியாவுக்குப் புரிந்ததா என்று தெரியவில்லை... அம்முவின் சந்தோசம் உயிரற்ற பொம்மையில் இல்லை... இனிப்பு தின்பண்டங்களில் இல்லை... அம்முவின் சந்தோசமும், சுவையும் தன் அம்மாவின் அருகாமை மட்டும்தான். சந்தியாவும், அம்முவை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், சென்னைக்கு அழைத்துக் கொள்கிறார்.

அம்முவின் அந்த விருப்பமும் விரைவில் நிகழ்கிறது. அம்முவைக் கவனித்துக்கொண்ட சந்தியாவின் இன்னொரு தங்கை பத்மாவுக்குத் திருமணமாகிறது. வயதான ரெங்கசாமி, கமலம்மாவால், குழந்தைகள் இருவரையும் கவனித்துக்கொள்ள முடியவில்லை. பத்மாவுடனும் அனுப்ப முடியாது... வேறு வழியில்லை, மீண்டும் சென்னைக்குத்தான் அனுப்பியாக வேண்டும். ரெங்கசாமிக்கு அவர்களைச் சென்னைக்கு அனுப்புவது கவலையளித்திருக்கக்கூடும்... ஆனால், அம்முவுக்கு இதைவிட வேறு என்ன மகிழ்ச்சி இருக்க முடியும்? பறவை தன் தாய் இருக்கும் கூட்டுக்கு எவ்வளவு சந்தோசமாக கிளம்புமோ.... அதை விட பலமடங்கு மகிழ்ச்சியாக மீண்டும் தன் கூட்டுக்குத் திரும்புகிறார் அம்மு.



### உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்மா...!

சென்னை திரும்பியதும் சர்ச் பார்க் பாடசாலையில் சேர்க்கப்படுகிறார். படிப்பில் படு சுட்டி. பாடசாலையில் சேர்ந்த கொஞ்ச நாட்களிலேயே ஆசிரியர்களின் செல்ல மாணவியாக மாறுகிறார். பாடசாலையில் பாராட்டு, ஆசிரியரின் அன்பு.. எல்லாம் இருந்தும் அவர் பெங்களூரில் எப்படித் தனிமையை உணர்ந்தாரோ அதே தனிமைதான் அம்முவை சென்னையிலும் வாட்டுகிறது. ஆம், சென்னை வந்த பின்னும் அம்மாவின் அருகாமை அவருக்கு கிட்டவே இல்லை.

எப்போதும் படப்பிடிப்பிலேயே இருக்கும் அம்மாவைப் பார்க்க ஏங்குகிறார். அன்பின் கதகதப்பை உணர விரும்புகிறார்... உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று சொல்ல விரும்புகிறார்... ஒருநாள், அம்மு தன் அன்பைக் கடிதமாக மாற்றி, 'என் அம்மா' என்ற தலைப்பில் கடிதமாக எழுதுகிறார். தன் அம்மாவுக்கு அந்தக் கடிதத்தைக் காட்ட ஓர் இரவு முழுக்க விழித்து இருக்கிறார்.

ஆனால், சந்தியா அந்த இரவு முழுவதும் வரவே இல்லை. அடுத்த நாள் பாடசாலையில் அந்தக் கடிதத்தைப் பார்த்த ஆசிரியர்கள், உச்சி முகர்ந்து அம்முவைக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால், அம்மு எதிர்பார்த்தது அதுவல்லதானே...? அம்மு விரும்பியது, அந்தக் கடிதத்தைத் தன் அம்மாவிடம் காட்டி, அவரை அணைத்து... 'உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்மா...' என்று அழ வேண்டும் என்பதைத் தான்.


அது இரண்டு நாட்கள் கழித்து நிகழ்ந்தது. ஆம், இரண்டு நாட்கள் கழித்து வீட்டுக்கு வந்த சந்தியா, அம்மு ஒரு புத்தகத்தை அணைத்துக்கொண்டு தூங்குவதைப் பார்க்கிறார். அந்தப் புத்தகத்தை மெதுவாக எடுத்தபோது அம்மு விழித்துவிடுகிறார். பின் அழுதே விடுகிறார். கடிதத்தைப் படித்த சந்தியா, அம்முவை இறுக அணைத்து, "இனி உன்னிடம் அதிக நேரம் செலவிடுகிறேன் அம்மு... இனி எப்போதும் இது போல் நிகழாது..." என்கிறார். ஆனால், துரதிஷ்டமாக, அதுதான் மீண்டும் மீண்டும் நிகழ்ந்தது.

அம்மு தன் அம்மாவுக்காக காத்திருப்பது தொடர்கதை ஆனது. பாடசாலையில் அவர் பரிசு பெறும் நிகழ்வில் கூட சந்தியா கலந்து கொள்ளவில்லை.

(தொடரும்)

# ‘எமது பிள்ளைகள் எங்கே?’

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

மனித உரிமைகள் தினம் நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந் நிலையில் காணாமல் போனோரின் உறவுகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் வவுனியா, கந்தசாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து வவுனியா பசார் வீதி வழியாக நகர்ந்து அமைதியாக சென்று சுவர்க்கா விருந்தினர் விடுதியை சென்றடைந்தது.

அங்கு காணாமல் போனவர்களின் உறவுகள் தமது உறவுகளை விடுதலை செய்ய வலியுறுத்தி அடுத்த கட்டம் தாம் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “எமது பிள்ளைகள் எங்கே?, நல்லாட்சி அரசே எமது பிள்ளைகளுக்கு பதில் சொல், எம்மை ஏமாற்றாதே, மனித உரிமைகளுக்கு மதிபபுக் கொடு” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.(2-250)




## ‘மறுபிறப்பு’ சிறுகதை தொகுப்பு நூல் வெளியீடு

(மன்னார்)

மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டம் நடத்தும் வை.கஜேந்திரனின் ‘மறுபிறப்பு’ சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் அமைப்பாளர், தமிழறிஞர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன், கே.காதர் மஸ்தான்,மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி அஸ்ரான்லிடிமெல் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக பேசாலை புனித பற்றிமா மகா வித்தியாலய அதிபர் அருட் சகோதரர் ஜே.ஸ்ரனிஸலஸ், மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் சிவஸ்ரீ மகா தர்மகுமாரக் குருக்கள், மன்னார் நகர சபையின் செயலாளார் எக்ஸ்.எல்.றெனால்டோ, கிளிநொச்சி தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.குணநாயகம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து வரவேற்பு நடனத்தை மன்னார் பரத கலாலயா நாட்டியப் பள்ளி மாணவிகளும் வரவேற்புரையை மன்னார் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. பு.மணிசேகரனும் ஆசியுரையை மாங்குளம் அமைதிக் கரங்கள் இயக்குநர் அருட்பணி செ.அன்புராசாவும் வழங்குவார்கள்.


அறிமுகவுரையினை திருமதி. பொ.ரொவீனா நிகத்துவார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து முதல் பிரதியை துரையம்மா அன்பகத் தலைவர் வே.மனுவேல்பிள்ளை பெற்றுக்கொள்வார்.

சிறப்புப் பிரதிகள் வழங்கலையடுத்து நூல் ஆய்வுரையை தேசியக் கலைஞர் எஸ்.ஏ.உதயனும் கருத்துரையினை ஓய்வு நிலை ஆசிரியர் திருமதி. சாந்தி வாமதேவாவும் வழங்குவர். ஏற்புரையை நூலாசிரியர் வை.கஜேந்திரனும் நன்றியுரையை பி.அருள்ராஜும் நிகழ்த்துவர். (2)

## கிளிநொச்சியில் ஆளுநர் தலைமையில் காணிப் பிணக்குகள் ஆராயப்பட்டன

### மீண்டும் ஜனவரியில் பிணக்குகள் பற்றி ஆராயப்படும் -ஆளுநர் உறுதி



(பரந்தன்)

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மக்களின் காணிப் பிணக்குகள் ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பளை,பூநகரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் இருந்து அழைக்கப்பட்டிருந்த மக்கள் தங்களின் காணிப் பிணக்குகளை ஆளுநரிடம் முறையிட்டுள்ளனர்.

நீண்ட காலமாக தீர்க்கப்படாது இருந்து வந்த காணிப் பிணக்குகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மக்கள் தங்களின் காணிப் பிணக்குகள் தொடர்பில் ஆளுநரடம் முறைப்பாடுகளை பதிவு செய்தனர். தற்போது சில காணிப் பிணக்குகளுக்கு தீரவு காணப்பட்டுள்ளதாகவும மேலும் சிலவற்றுக்கு ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்தாண்டு ஜனவரி மாதம மீண்டும் கிளிநொச்சிக்கு வருகை தந்து குறித்த காணிப பிணக்குகள் தொடர்பில் ஆராய்வேன் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநருடன் வடக்கு மாகாண காணி ஆணையாளா மகேஸ்வரன், கிளிநொசசி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் மற்றும் மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலாளர்கள், காணி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(2-312)

## ஆள் மாறாட்டம் செய்து சா/த. பரீட்சை எழுதிய ஆசிரியருக்கு விளக்கமறியல்

வவுனியா, உலுக்குளம் மகா வித்தியாலயத்தில் பிறிதொரு நபருக்காக ஆள்மாறாட்டம செய்து க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதியதாக கைது செய்யப்பட்ட ஆசிரியரை டிசெம்பர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

வவுனியா மின்சார சபையில் பணியாற்றும் ஒருவருக்கு சாதாரண தரப்பரீட்சையில் தோற்றுவதற்காக அனுமதியட்டை கிடைத்திருந்தது. இந்நிலையில் குறித்த நபர் கடமைபுரியும் ஆசிரியருடன் ஒப்பந்தமொன்றினை மேற்கொண்டு பரீட்சையில் தோற்றச்செய்துள்ளார்.

இந் நிலையில் குறித்த நபர் மீது பரீட்சை மேற்பார்வையாளர்கள் சந்தேகம் கொண்டு பரிசோதித்தபோது பிறிதொருவருக்காக ஆசிரியர் பரீட்சை எழுதியமை தெரிய வந்துள்ளது. இதனையடுத்து வவுனிய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு கைது செய்யப்பட்ட ஆசிரியர் வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். குறித்த வழக்கினை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிமன்றம் குறித்த ஆசிரியரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள். (2-250)

## யுத்த காலத்தில் ராணுவம் கைப்பற்றிய காணிகளை மீளவும் மக்களிடம் கையளிப்பதே அரசின் நோக்கம்

### முல்லைத்தீவில் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கடந்த கால யுத்தம் காரணமாகவே பொதுமக்களின்காணிகளை இராணுவம் கைப்பற்றியிருந்தது. எனினும் யுத்தம் நிறைவடைந்த நிலையில் காணிகளை மக்களிடம் மீளக் கையளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் வடக்கு மாகாண ஆளுநர்றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் காணிப் பரச்சினை தொடர்பில் மக்களிறகும் வடக்குமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கும் இடையில் நேற்று முன்தினம் முல்லைதீவு மாவட்ட செயலக கேட்போா கூடத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற காணிப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலில் இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட தமது காணிகள் தொடர்பில் அதிகமான முறைப்பாடுகளை காணி உரிமையாளர்கள் வடமாகாண ஆளுநரிடம முன்வைத்திருந்தனர்.

இதுமாத்திரமன்றி 2009 ஆம் ஆண்டிற்கு பின்னர் கொக்குத்தொடுவாய் முகத்துவாரம் பகுதியில் தொழில் செய்வதற்காக தற்காலிகமாக வசித்து வரும் தென்னிலங்கை மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

எனினும் கடந்த காலங்களில இடம்பெற்ற யுத்தம் காரணமாகவே தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டிருந்ததாகவும் எனினும் அவற்றை மீண்டும் இராணுவத்திடம் கையளிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை தொடர்ந்தும் இராணுவத்தால் மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் றெஜினோல்ட் குரே குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களல் வாழ்ந்து வரும் சிலருக்கு ஆரம்ப காலங்களிலிருந்து சொந்த காணிகளே இருக்கவில்லை எனவும் தற்போது அரசாங்கத்தாலே காணிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

## கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் 2020ல் வேலைவாய்ப்பை இழக்கநேரிடும்

இலங்கையில்நிலக்கண்ணி வெடி அகற்றும் சுமார் 3 ஆயிரத்து 600 பணியாளர்கள் ஈடுபட்டுள்ள நிலையில் இவர்களில் 600 இற்கு மேற்பட்டவர்கள் பெண் பணியாளர்களாக காணப்படுவதுடன் தாஸ் எனும்நிறுவனத்தில் 400 பணியாளர்கள் பணிபுரியும் நிலையில் 85 பெண் பணியாளர்கள் அதில் உள்ளடங்கியுள்ளதாக ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வரும் தாஸ் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திர சிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் , வடக்கு கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடி அகற்றும் பணியை முன்னெடுத்து வரும் நிறுவனங்களுக்குள் தாஸ் நிறுவனமும் தனது பணியை வடக்கு பகுதியிலும் முன்னெடுத்துவருகின்றது. எமது நிறுவனத்தில் 400 பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

அவர்களில் கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட குடும்பப் பெண்கள் மற்றும் முன்னாள் பெண் போராளிகள் உட்பட 85 பெண்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் தினமும் சராசரி 7 மணித்தியாலங்கள் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுகின்றனர்.

இவர்களுக்கு வருடாந்தம் 14நாட்கள்சமயோசிதவிடுமுறையும் 12 நாட்கள் மருத்துவ விடுமுறையுமாக மொத்தம் 26 நாட்கள் வழங்கப்படுகின்றது.

எமது நிறுவனத்தினால் காப்புறுதி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வேலை செய்யும் இப் பெண்கள் தமக்குரிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையாலும் குடும்பத்திற்கான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் குடும்பத் தலைவர்களின்றி இருப்பதனால் இறுதி யுத்தத்தின் போது அனைத்தையும் இழந்து நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்து மீள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் தமது குடும்ப பாரத்தை சுமப்பதற்காக அபாயகரம் நிறைந்த இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அதிகாலை 5 மணிக்கு வேலைக்குப் புறப்படும்பெண்கள்சுமார் 7 மணித்தியாலங்கள் பணிபுரிந்து மாலை 5 மணியளவில் வீடு திரும்புகின்றனர். இதனால் பிரயாண கஷ்டங்கள், வீட்டு வேலைகள் என பல சவால்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே இப்பணியில் ஈடுபட்டிருக்கும் இப் பெண்கள் 2020ஆம்ஆண்டிற்குபின்னர் தொழில்வாய்ப்பைஇழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு நிலக் கண்ணி வெடிகளை அகற்றும் நிறுவனங்களின் பணிகள் முடிவுறுத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

கல்லைவிடக் கடினமானது மனிதனின் இதயம்!

*– பல்கேரியப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜெயலலிதாவின் மர்மம் போல அரசியல் அமைப்பு சீர்திருத்தம்

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் மரணம் குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனம்! அவர் அப்பலோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தோழி சசிகலா தவிர்ந்த வேறு எவரும் அவரைப் பார்க்க அனுமதிக்காமை! அவர் இறந்தது எப்போது என்ற கேள்வி! டிசம்பர் 5ஆம் திகதி மாலை 5 மணியளவில் அவர் இறந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டு அதிமுகவின் கட்சிக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டமை! அவர் இறக்கவில்லை என்ற அறிவிப்பு! அதனை தொடர்ந்து அ.தி.மு.க. கட்சியின் கொடி மீள ஏற்றப்பட்டமை! மீண்டும் இரவு 11.30 மணியளவில் முதல்வர் ஜெயலலிதா இறந்துவிட்டார் என்ற செய்தி போன்ற விடயங்கள் அவரின் மரணம் குறித்து பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

ஒவ்வொரு விடயத்தையும் வைத்து முதல்வர் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் உள்ளது என்ற ஊகங்களும் கருத்துக்களும் ஊடகங்களை – சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்துள்ளன

இவ்வாறான கருத்துக்கள், ஊகங்கள் சாதாரணமாக நின்றுவிடாது என்பது உண்மை. சில நாட்கள் கடக்க கடக்க செல்வி ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் தங்கள் கருத்துக்களை முன்வைப்பர்.

அ.தி.மு.க சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிடுவர். இவற்றால் கலக்கமடைந்த தமிழக மக்கள் செல்வி ஜெயலலிதாவின் மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என கோசம் இடுவர். ஆர்ப்பாட்டம் செய்வர். இவையெல்லாம் நடந்தேறும்.

செல்வி ஜெயலலிதாவின் மரணம் நோயினால் ஏற்பட்டதாக கூட இருக்கலாம். ஆனால் அவரின் மரணத்தில் சந்தேகம் ஏற்படுவதற்கு காரணம் அவர் நோய்வாய்ப்பட்டு இறந்தபோது அவர் பற்றிய விடயங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தாமை தான்.

அதாவது வெளிப்படைத்தன்மை இருந்திருக்குமாயின் செல்வி ஜெயலலிதாவின் மரணம் குறித்த சந்தேகங்களை முற்றாக தவிர்த்திருக்க முடியும்.

ஆக, சொந்த விடயங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் வெளிப்படைத்தன்மை மிகவும் அவசியமானது.

ஜெயலலிதாவின் விடயத்தில் மரணத்தில் வெளிப்படைத்தன்மை இல்லாததால் மரணத்தின் பின்னர் எழுந்துள்ள ஐயங்கள் பலர் மீது சந்தேகங்களையும் ஆத்திரங்களையும் ஏற்படுத்தவே செய்யும்.

இதுபோலத்தான் அரசியல் அமைப்பு சீர்திருத்தமும். புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் எந்த விடயங்களையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை வெளிப்படுத்தாமல் உள்ளது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்மதித்துவிட்டது என்று அரசதரப்பு அமைச்சர்கள் கூறுகின்றனர்.

எனினும் இன்றுவரை புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தால் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மை என்ன என்பது பற்றியோ அல்லது இனப்பிரச்சினைக்கு தீர்வு எவ்வாறு அமையும் என்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமை இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே நாங்கள் ஏற்றுக் கொள்வதை யே தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வர் என்று கூட்டமைப்பை ஆட்டிப்படைப்போர் கூறி நிற்பது எந்த வகையிலும் நியாயமாகாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர் எனில், அதற்கு காரணம் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் ஆகும்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி என்ற விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனவே மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டிய தார்மிக கடமையை கொண்டிருக்கின்றனர் என்பதால்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை புதிய அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இது செய்யத் தவறப்படுமாயின் புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்கள் பல்வேறு சந்தேகங்களை கொள்ள நேரிடும் என்பதுடன் தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் சதித்திட்டங்கள் நடப்பதாகவே கருதப்படும்.

5000 ரூபாய் செலுத்த வேண்டும்

## சுகாதாரம் பேணாதவர்களுக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிப்பு

(கரணவாய்)

நெல்லியடி நகர்ப் பகுதியில் சுகாதாரம் பேணாத உணவக உரிமையாளர்கள் மூவருக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டது.

கரவெட்டி சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கையுறை இடப்படாமல் பொருட்கள் வழங்கியமை, தலைக்கு தொப்பி அணியாமல் சமையலில் ஈடுபட்டிருந்தமை போன்ற குற்றத்திற்காக 3 வர்த்தகர்களுக்கும் எதிராக வழக்கு கடந்த 8 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (இ-60)

## அத்துமீறி நுழைந்தவர்கள் 14000 ரூபாய் செலுத்தினர்

கரவெட்டி மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் அத்துமறி நுழைந்து தொலைபேசியை உடைத்ததுடன் அவர்களின் காணிக்குள் புகுந்து குற்றம் புரிந்த இருவரையும் பாதிக்கப்பட்ட நபருக்கு நட்டஈடாக 14 ஆயிரம் ரூபாய் செலுத்துமாறும் குற்றப்பணமாக 500 ரூபாய் வீதமும் செலுத்துமாறும் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

நெல்லியடியில் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது அவ்விருவரையும் பாதிக்கப்பட்ட நபருக்கு 14 ஆயிரம் ரூபாய் நட்டஈடும குற்றப் பணமாக 500 ரூபாய் வீதமும் விதித்தார். குற்றப் பணத்தைச் செலுத்தத் தவறின் மூன்றுமாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டார். (இ-60)

### பொதுக்கூட்டம்

யாழ். கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ)

### அரிசி இறக்குமதி

நாட்டில் நிலவுகின்ற அரிசி தட்டுப்பாட்டை தீர்ப்பதற்காக 10 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சர் பீ.ஹெரிசன் கூறினார். (இ)

## வீடுபுகுந்து தாக்குதல்; ரூ.2 ஆயிரம் நட்டஈடு

(கரணவாய்)

நெல்லியடி திருமால் சோதி வீதிப் பகுதியில் வீடொன்றில் புகுந்து ஒருவரை தாக்கிய சம்பவத்தில் பாதிக்கப்பட்டவருக்கு 2 ஆயிரம் ரூபாய் நட்டஈடு வழங்குமாறும் குற்றப் பணமாக 500 ரூபாயும் விதித்து பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் உத்தரவிட்டார்.

நெல்லியடிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடாக 2 ஆயிரம் ரூபாய் வழங்குமாறும் குற்றப்பணத்தை செலுத்தத் தவறின் 3 மாத காலம் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிட்டார். (இ-60)

### பிள்ளையார் கதை

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய பிள்ளையார் கதை விரதம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஜனவரி மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை இடம்பெறவுள்ளது. (இ-3)

### ஆவணப்படம் கையளிப்பு நிகழ்வு

யாழ். ஊடக அமையத்தால் தயாரிக்கப்பட்ட இருள் இதயபூமி ஆவணப்படம் கையளிக்கும் நிகழ்வு நாளை 12 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் றக்கா வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

## சிரியாவில் உடனடி போர் நிறுத்தம் ஐ.நா.வாக்கெடுப்பில் பெரும் ஆதரவு

சிரியாவில் இராணுவம் மேற்கொண்டு வரும் தாக்குதல் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி ஐ.நாவில் நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் பெரும்பாலான நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

கனடா சார்பில் இந்த தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதில் தீர்மானத்திற்கு ஆதரவாக 122 பேர் வாக்களித்தனர். ரஷ்யா, ஈரான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன. லெபனான், ஈராக், தென் ஆபிரிக்கா, நைஜீரியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. (இ-10)

## கண்களைத் திறந்து பார்த்து பாதையை செம்மைப்படுத்துவோம்

இன்று திரு வருகைக் காலத்தின் மூன்றாவது ஞாயிறாகும். திருவருகைக்காலம் ஆண்டவர் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும் காலம். அந்த அமைதியின் மன்னர் நம்மோடுதான் இருக்கிறார். அவரை வரவேற்க நாம் தயாராகும் காலம். அடுத்தவர் மீது நாம் கொண்டுள்ள அன்பில் வளர்ந்து இறை விசுவாசத்தை ஆழப்படுத்தி, இறைவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் தூய ஆவியாரின் கொடைகளுக்கு இதயங்களைத் திறக்கவும் கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு எம்மைதயார் செய்ய இந்த திருவருகைக் காலம் உதவ வேண்டும். இத் திரு வருகைக் காலத்தில், இதயங்களிலும், குடும்பங்களிலும். இல்லங்களிலும் நல்ல உணர்வை நாம் வளர்க்க வேண்டும். இக்காலத்தில் நாம் நம் உள்ளச் சோலைகளைத் தயார்படுத்த வேண்டும். மகிழ்ச்சியோடு நாம் கடவுளுக்கு நன்றி கூறவேண்டும். நம்மைக் காண்பவர்கள் நாம் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறுவார்கள்.

### பரமபிதா காட்டிய பாதை

"மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை" என்று இயேசுவால் புகழப்பட்டவர் திருமுழுக்கு யோவான். பாலை நிலத்தில் ஒலித்த யோவானின் குரலைக் கேட்க மக்கள் ஓடிச் சென்றனர். மக்களை மனமாற்றத்துக்கு அழைத்து, அவர்களுக்கு நம்பிக்கையையும் நற்செய்தியையும் கூறிய யோவான், மதம் பிடித்த சமயத் தலைவர்களையும் உரோமைய அரசையும் வன்மையாகக் கண்டித்தார். இதனால் கதி கலங்கிய மதம் பிடித்த சமயத்தலைவர்களும், ஏரோதும் அவரைச் சிறையில் அடைத்தனர். யோவான் அடைபட்டிருந்தாலும், அவர் மனம் தனது மக்களின் விடுதலையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது. அந்த விடுதலை, இயேசுவின் வழியே வருமா என்ற கேள்வியை ஏக்கத்துடன் கேட்கிறது. "வரவிருப்பவர் நீர் தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா?" இந்தக் கேள்வியும், இதற்கு இயேசு தந்த பதிலும் தெளிவான வாழ்க்கைப் பாடங்களை நமக்குத் தருகின்றன. உலகின் செம்மறி என்று மக்களுக்குச் சுட்டிக் காட்டிய இயேசு, தனக்குப் பின்னர் முழு மூச்சில் பணியில இறங்கியிருப்பார். மதம் பிடித்த சமயத் தலைவர்களையும், உரோமைய அரசையும் இந்நேரம் கதிகலங்கச் செய்திருப்பார் என்பது அப்போது யோவானின் எதிர்பார்ப்பாக இருந்தது. யோவானின் எதிர்பார்ப்புகளும், தனது கண்ணோட்டம், பணிவாழ்வு இவைகளும் வேறுபட்டவை என்பதைச் சொல்ல இயேசு தயங்கவில்லை. யோவான் எதிர்பார்த்த புரட்சி, அநீதியாளர்களை விரட்டி அடித்து, ஆட்சியைப் பிடித்து, மக்கள் வாழ்வை மாற்றுவது என்ற வரிசையில் அமைந்திருந்தது. இயேசுவின் புரட்சி இதற்கு நேர்மாறான, தலைகீழான புரட்சி. இந்தப் புரட்சி மக்கள் வாழ்வை மாற்றுவதிலிருந்து ஆரம்பிக்கிறது. இந்த புரட்சியைக் குறித்து இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயாவும் கூறியுள்ளார்: திடம் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்; இதோ, உங்கள் கடவுள் பழிதீர்க்க வருவார். அநீதிக்குப் பழிவாங்கும் கடவுளாக வந்து உங்களை விடுவிப்பார். இறைவன் எப்படி பழிதீர்ப்பார் என்றால் அப்போது பார்வையற்றோரின் கண்கள் பார்க்கும், காது கேளாதோரின் செவிகள் கேட்கும். கால் ஊனமுற்றோர் மான்போல் துள்ளிக் குதிப்பர். வாய் பேசாதோர் மகிழ்ந்து பாடுவர். அவர்கள் முகம் என்றும் மாளா மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். துன்பமும் துயரமும் பறந்தோடும். பழிதீர்ப்பதற்கு இறைவன் தரும் இலக்கணம் இதுதான். இத்தகைய "பழிதீர்க்கும் படலத்தை" பழிதீர்ப்பது என்றால், பழியை, குறையைத் தீர்ப்பது என்று இயேசு பொருள் கொள்கிறார் போலும். இல்லையா? அவ்விதம் பழியைத் தீர்க்க, பழியைத் துடைக்க வந்தவர் இயேசு. "வரவிருப்பவர் நீர் தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா?" என்று கேள்விகள் எழுப்பிய யோவானுக்கு இயேசு கூறிய பதில் இதுதான்: "நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர். கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர், தொழுநோயாளர் நலமடைகின்றனர். காது கேளாதோர் கேட்கின்றனர். இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது"



கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பது இன்றைய உலகில் பலரது பழிதீர்க்கும் படலமாகிறது. இதற்கு நேர் மாறாக, பழியைக் குறைக்கும் வழிகளும் உள்ளன உண்டு. கண்களையும், மனதையும் திறந்து இவற்றைப் பார்க்க நாம் பழக வேண்டும் என்று இயேசு நமக்கு அழைப்பு விடுக்கிறார். இயேசு காட்டும் வழியில் பழியைக் குறைக்க நாம் முயற்சி எடுப்போம். நம்மிடையே, கணக்குப்பார்த்து பழிதீர்க்கும் உலகை விட, நல்ல நடத்தைகள் வழியாக, பழிகளைத் குறைப்பதில் நாம் உலகை வளர்ப்போம்.

**ம.பிரான்சிஸ்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

# கொழும்பில் கோவில் கட்ட முடியுமென்றால் கொக்குளாயில் விகாரை அமைக்க என்ன பிரச்சினை

## வடக்கு மாகாண ஆளுநர் கேள்வி

(பனிக்கன்குளம்)

தமிழ் மக்களால் கொழும்பில் கோவில் கட்ட முடியும் என்றால், முல்லைத்தீவு கொக்குளாயில் விகாரை அமைப்பதில் என்ன பிரச்சினை உள்ளது என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எனினும் வேறு ஒருவரின் காணியில் மக்கள் இல்லாத இடத்தில் அவ்வாறு நிர்மாணிக்கப்பட்டால் அது குற்றம் என தெரிவித்த அவர், வேறு ஒருவருடைய காணியில் அனுமதியின்றி விகாரை அமைக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

எனினும் கரைதுறைப்பற்று முன்னாள் பிரதேச செயலாளரால் குறித்த விகாரை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் யாருக்கும் கோவில் கட்டமுடியும், பள்ளி கட்ட முடியும் அது அவர்களின் விருப்பம், ஆனால் விகாரை தொடர்பான பிரச்சினை மக்களுக்கு இல்லை எனவும் அரசியல்வாதிகளுக்கே உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் கொக்குளாய் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்கள் 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது விகாரை அமைப்பதற்கான காணி என தெரிவித்து குறித்த பிக்கு குறித்த காணியில் மக்களை மீள்குடியேற்ற அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் இதனைத் தொடர்ந்து குறித்த காணியின் உரிமையாளரான மூத்த புதல்வரான 52 வயதுடைய திருஞானசம்பந்தர் மணிவண்ணதாஸால் நீதிமன்றில் வழக்குதாக்கல் செய்யப்பட்ட போதும் குறித்த காணி உரிமையாளரின் காணிப்பத்திரம் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

எனினும் அண்மைக்காலமாக முல்லைத்தீவு கொக்குளாயில் விகாரை அமைக்கும் பணிகள் இரவு பகலாக தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)




# தொலைபேசி விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருட்டு

## பளை நகர்ப் பகுதியில் சம்பவம்




கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பளை நகர்ப் பகுதியில் அமைந்துள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று திருடர் குழு ஒன்றினால் உடைக்கப்பட்டு அங்கிருந்த இலத்திரனியல் பொருட்கள் திருட்டுப் போன சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெள்ளிக்கிழமை இரவு விற்பனை நிலையத்தை மூடிவிட்டு உரிமையாளர் வீடு திரும்பிய நிலையில் மறுநாள் சனிக்கிழமை காலை விற்பனை நிலையம் திறந்த நிலையில் காணப்படுவதாக உரிமையாளருக்கு பொதுமக்கள் வழங்கினர். இத்தகவலை அடுத்து குறித்த உரிமையாளர் விற்பனை நிலையத்திற்கு சென்ற போது கடையின் முன்கதவு உடைக்கப்பட்டு கடையினுள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த கைத்தொலைபேசிகள் உட்பட பெறுமதியான இலத்திரனியல் பொருட்கள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன களவாடிச் செல்லப்பட்டதை அவதானித்தார். அதன் பின்னர் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பளை பொலிஸாரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இருந்து வந்த தடயவியல் நிபுணர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

# பழைய பேருந்துகளை இயங்கும் நிலைக்கு கொண்டு வந்து சேவையில் ஈடுபடுத்தவேண்டும்

## கிளிநொச்சியில் இ.போ.ச. தலைவர் தெரிவிப்பு



இலங்கை போக்குவரத்து சபை தலைவர் ரமால் சிறிவர்த்தன கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சி சாலைக்கு விஜயம் மேற்கொண்ட அவர், சாலை நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன், குறைகள் தொடர்பில் ஊழியர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த விஜயத்தின்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த தலைவர்,

கிளிநொச்சி மாவட்டத்திற்கான பேருந்து நிலையம் ஒன்றினை மாகாண மற்றும் மத்திய அமைச்சு இணைந்து அமைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் கிளிநொச்சி சாலையில் நிலவும் ஆளணி பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி டிப்போவினை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், டிப்போ நகரை அண்டிய பகுதியிலேயே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

கிளிநொச்சி சாலையில் புதிய பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாகவும், மேலும் பேருந்துகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவித்த அவர், பழைய பேருந்துகளை தள்ளிவிடாது அவற்றை இயங்கு நிலைக்கு கொண்டுவந்து சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் நேற்று கவனயீர்ப்பு



கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிக்கும் பொருட்டு கவனயீர்ப்பு நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசாமி கோவிலடியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பங்களின் சங்கம் மற்றும் தமிழ் சிவில் சமூக அமையம் இணைந்து இக் கவனயீர்ப்பு நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவுகள், தமிழ் சிவில் சமூக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (2-312)

# கிளிநொச்சியில் கடும் குளிருடன் பனிப்பொழிவு வயல் நிலங்களில் பூச்சித் தாக்கம் அதிகம்

## விவசாயிகள் கவலை



கிளிநொச்சியில் கடும் குளிருடன் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகின்றது.

கிளிநொச்சியில் கடும் பனி காரணமாக விவசாய வயல் நிலங்கள் பூச்சித் தாக்கங்களினால் பாதிக்கப்படுகின்றது என விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

கிளிநொச்சி நகர் பகுதிகள் மற்றும் விவசாய நிலங்கள் முற்றிலும் அதிகாலை வேளை பனியினால் மூடியுள்ளது. நேற்று அதிகாலை முதல் சுமார் 11 மணி வரையும் கடும் குளிருடன் கூடிய பனிப்பொழிவு மிக அதிகமாக காணப்படுகின்றது.

இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய நிலங்களில் உள்ள பயிர்கள் கிருமிகளின் தாக்கத்தினால் அதிகரித்து காணப்படுகின்றது.

பருவமழை பெய்யத் தவறும் பட்சத்தில் விவசாய நிலங்கள் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் அனைத்தும் கருகி விடும் நிலைக்கு போய்விடும் என்று விவசாயிகள் அங்கலாய்க்கிறார்கள். (2-312)

# நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கை

## கிளிநொச்சியில் நாளை முன்னெடுப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையினரும், சுகாதார திணைக்களத்தினரும் இணைந்து கிளிநொச்சி நகரம் அதனை அண்டிய பகுதிகள் ஆகியவற்றில் நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிக்கும் நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளனர். இந்நடவடிக்கை நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 6.30 மணிவரை இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கரைச்சி பிரதேச சபை பணியாளர்களினால் சபையின் வாகனம் மூலம் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களில் உள்ள குப்பைகள் அகற்றப்படவுள்ளன.

இதனடிப்படையில் கீழ் குறிப்பிடப்படும் பிரதேசங்களுக்கு கரைச்சி பிரதேச சபையின் பணியாளர்கள் வாகனத்துடன் வருகை தரவுள்ளனர். இச் சந்தர்ப்பத்தில் பொது மக்கள் தங்கள் வீடுகளில் மற்றும் பொது இடங்களில் காணப்படுகின்ற நீர் தேங்கி நிற்கும் பொருட்களை பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அந்தவகையில் கிளிநொச்சி நகரம், இரத்தினபுரம், கனகபுரம், உதயநகர் கிழக்கு, திருநகர், கணேசபுரம், கனகாம்பிகைக்குளம், தொண்டமான் நகர் போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் கரைச்சி பிரதேச சபையின் வாகனங்கள் மூலமாக கழிவகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (2-312)

# கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமைகள் தினம் நாளை அனுஷ்டிப்பு

கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினம் - 2016 நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கி.சின்னராசா தலைமையில் நடைபெறும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (2-277)

# 5 ஆயிரம் ரூபாய் தாளுக்கு வரப்போகிறது தடை!

## நிதியமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள 5000 ரூபாய் நாணயத் தாள்களை வெளியில் கொண்டு வருவதற்கு,

இந்தியாவில் பிரதமர் நரேந்திர மோடி செய்தது போல் இங்கு நாமும் செய்வோம் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போதே அவர் இதனை சபையில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இந்தியா வில் புளக்கத்தில் காணப்பட்ட ரூபாய் 500 மற்றும் ரூபாய் 1000 நாணயத்தாள்கள் செல்லுபடியற்றது என அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நாய் கடிக்கு இலக்கான...

வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது சிகிச்சை அளித்த வைத்தியர் குறித்த பெண்ணை கடித்த நாயை பிடித்து அதன் தலையை கொண்டுவரும்படி குறித்த பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கும்படி உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேலும் 3 பேர் அதே தெருநாயினால் கடியுண்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து வந்தவர்கள் மேற்குறித்த நாய் பசியில் கடித்ததாகவும் அது விசர் நாய் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் குறித்த பெண் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார்.

இந் நிலையில் மேலதிக சிகிச்சைக்காக கடந்த 8 ஆம் திகதி மந்திகை வைத்தியசாலைக்கு சென்ற அவரை உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிய போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

சுகாதார வைத்திய அதிகாரி பரிவு உத்தியோகத்தர்களின் அசண்டையீனத்தால் தான் மேற்குறித்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கடமையை ஒழுங்காக செய்திருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிராது எனவும் உறவினர்கள் மரணவிசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்ட தன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-60,9)

**Maths Personal Classes** (Tamil & English Medium)

தரம் 6 - 11வரையான மாணவர்களுக்கான கணித தமிழ் மற்றும் ஆங்கிலமொழி மூலமான) வகுப்புக்கள் பிரபல பாடசாலை அனுபவமிக்க ஆசிரியரால் வீடுவந்து இலகுவான முறையில் நேர்த்தியாக கற்பிக்கப்படும். ஓர் தவணைக்குள் மாணவரின் அடைவுமட்டம் சிறப்பாக அமைய கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு :- 0772369133**

(யாழ்ப்பாணம், நல்லூர், கொக்குவில், கோண்டாவில், சுன்னாகம் உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.) (6899)

5-13 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான Chess வகுப்புக்கள் இணுவில் புகையிரதகடவை வீதியிலுள்ள OLYMPIA MATHS CEINTRE இல் கற்பிக்கப்படும் (மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்)

## யாழ்ப்பாண மாநகர சபை - கேள்வி அறிவித்தல்
## வியாபார. நிலையங்களில் கட்டணக் கழிவகற்றும் சேவை

யாழ்.மாநகர ஆளுகைக்குட்பட்ட இருநூறுக்கும் (200) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான கழிவு அகற்றும் சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ்.மாநகர சபை, பிரதம பொறியியலாளர் பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப்படிவங்களை 15.12.2016 - 25.12.2016 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் பி.ப 3.00 மணிவரையும் 26.12.2016ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2,000.00 + வற் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்படிவங்களை 26.12.2016ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு முன்னர் ஆணையாளர். மாநகர சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதம பொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 26.12. 2016 திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

குறிப்பு - குறித்த கழிவகற்றல் சேவை தொடர்பான முறைமையும் விளக்கங்களும் அடங்கிய ஆவணத்தினை 26.12.2016 பி.ப. 3.00 மணி வரை கடமை நாட்களில் யாழ் மாநகர சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொ.வாகீசன்,
ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.
11.12.2016 (C-6657)

# சித்திரவதைகளுக்கு எதி...

ளோர் தண்டிக்கப்படாது இருக்கும் நிலைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

இலங்கை படைத்தரப்பால் தொடர்ந்து சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா நிபுணர் குழு அண்மையில் முன்வைத்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் பலவந்தமான காணாமல் ஆக்கப்பட்டோருக்கு காரணமானவர்கள், தடுப்புக்காவலில் இருக்கும் போது இடம்பெற்ற மரணங்களுக்கு பொறுப்பானவர்கள் என குற்றவாளிகள் தண்டனைகளில் இருந்து விலக்களிக்கப்படும் நிலைமை தொடர்நது காணப்படுகின்றது.

காணாமல்போன கேலிச்சித்திர ஓவியர் பிரகித் எக்னெலிகொடவின் குடும்பத்தினரை பாதுகாக்க வேண்டும் என்ற சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா நிபுணர் குழுவின் கோரிக்கையை வரவேற்கின்றோம்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதாக இலங்கை அரசாங்கம் முன்னர் கூறியிருந்த போதிலும், அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படாதுள்ளது.

இது தொடர்பில் கண்டறிவுகளை மேற்கொள்ள உண்மையை கண்டறியும் ஆணைக்குழு, நீதி நல்லிணக்க ஆணைக்குழு, மீள் நிகழாமை மற்றும் நட்டஈடு வழங்கும் அலுவலகம் போன்றன அமைக்கப்பட வேண்டும்.

இலங்கை படைத்தரப்பினரின் சித்திரவதைகள் மற்றும் முறைகேடான நடத்தைகள் போன்றவற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இவ்விவகாரங்கள் தொடர்பில் சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா நிபுணர் குழு முன்வைத்துள்ள ஆழமான பரிந்துரைகள் தொடர்பில் ஆராயப்பட வேண்டியது அவசியம் என இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# தமிழ் மக்களின்...

வேண்டியது அவசியமாகுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (செ-11)

# நல்லாட்சி...

அதேபோன்று பிரதான எதிர்க்கட்சியானதமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவும்வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த தோடு ஜே.வி.பி மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு எதிர்க்கட்சி ஆகியன எதிராக வாக்களித்தன. (செ-11)

# இ.போ.ச - தனியார் பேருந்து...

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் தனியார் பேருந்து தரப்பினருக்கும் அரச போக்குவரத்து சபையினருக்கும் இடையில் மோதல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த மோதல் சம்பவத்தினால் நேற்றையதினம் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியிருந்த தோடு, இரு தரப்பினரும் தடிகள் பொல்லுகளுடன் வீதிகளில் ரவுடிகள் போல் நின்றமையால் பெரும் கலவரமே இடம்பெற்றது போன்று சம்பவ இடம் காட்சியளித்தது. இந்த சம்பவத்திற்கு இருதரப்புமே பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை எதிரெதிராக முன்வைத்துள்ளனர்.

இதேவேளை நடைபெற்ற அடிதடி சம்பவத்தில் மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் இ.போ.ச. போக்குவரத்து சபையின் சாரதியொருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த மோதல் சம்பவமானது நேற்றுக்காலை 8.30 மணியளவில் யாழ்.கோண்டாவில் டிப்போகபகு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, நேற்றுக்காலை 7.40மணிக்கு யாழ்.புன்னாலைக் கட்டுவனில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தும் தனியார் பேருந்தும் பயணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளன.

இதன்போது இடையில் இரு தரப்பு பேருந்து சாரதிகளுக்குமிடையில்யார் முதலில் செல்வது யார் அதிக பயணிகளை ஏற்றுவது என்பது தொடர்பில் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதன்போது தனியார் பேருந்து அரச பேருந்தை முந்திச் செல்ல விடாது இடையூறாக சென்றுள்ளது. எனினும் ஒரு கட்டத்தில் தனியார் பேருந்தை அரச பேருந்து முந்தி சென்றது. முந்தி சென்ற அரச பேருந்து சாரதி கோண்டாவில் டிப்போ சந்திக்கு அருகாமையில் பஸ்ஸை நிறுத்திவிட்டு இரும்பு கம்பியுடன் தனியார் பேருந்தை நோக்கி சென்றுள்ளார்.

இதன் போது தனியார் பேருந்து சாரதியும் இறங்கிவர இரு தரப்பிற்கும் இடையில் மோதல் ஆரம்பித்துள்ளது.

இந்த மோதல் பத்து நிமிடங்கள் வரை நீடித்தநிலையில் அங்கிருந்தவர்களின் முயற்சியால் பெரும் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறாமல் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதன்போது குறித்த 764 வழித்தட பாதயினூடாக வந்த தனியார் பேருந்துகளின் சாரதிகள் நடத்துனர்களும் பேருந்துக்களை நிறுத்தி பயணிகளை இடைநடுவில் விட்டு விட்டும் அதேபோன்று இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகளின் சாரதிகளும் தமது பேருந்துக்களை இடைநடுவில் நிறுத்தி விட்டு இருதரப்பினரும் பரஸ்பரம் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

இச்சம்பவத்தால் குறித்த கோண்டாவில் டிப்போ பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதுடன் இருதரப்பினருக்கு இடையிலான தாக்குதல்களும் கடும் மோதல் சம்பவமாக உக்கிரமடைந்திருந்தது.

இந்த சம்பவங்களின் போது இரு தரப்பு சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் தமது கைகளில் கம்பிகள் பொல்லுகள் சகிதம் அங்கு மோதலில் ஈடுபட்டார்கள்.

இந்த சம்பவம் அங்கு தொடர்ந்து செல்ல மோதல் சம்பவத்தை கட்டுப்படுத்தும் வகையில் உடனடியாக கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதுடன் இதில் காயமடைந்தவர்களையும் வைத்திய சாலையில் அனுமதித்திருந்தனர்.

அந்தவகையில் இச்சம்பவத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தின் சாரதிகள் இருவர் காயமடைந்திருந்ததுடன் தனியார் பேருந்தின் சாரதி ஒருவரும்காயமடைந்து வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் மேற்படி சம்பவம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சாரதி ஒருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதேவேளை குறித்த சம்பவத்தையடுத்தும் இதில் தம்மீது தாக்குதல் நடத்திய போக்குவரத்து சபை பேருந்தின் ஊழியர்களை கைது செய்து உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி தனியார் பேருந்தின் 764 வழித்தடத்தினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் தனியார் பேருந்து சாரதிகள் தம்மை அவதூறான வார்த்தை பிரயோகங்களினால் அடிக்கடி பேருந்து வழித்தடத்தில் திட்டுவதாகவும். இதனாலேயே நேற்றைய மோதல் சம்பவம் இடம்பெற்று இருந்தது எனவும் அரச பேருந்து ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்த மோதல் சம்பவத்தினால் தம்மால் உரிய நேரத்தற்கு பயணிக்க முடியாது உள்ளதாகவும், தமது தொழில் போட்டிகளினால் மற்றவர்களின் உயிர்களை பறிக்கும் வகையில் இரு தரப்பு பேருந்து சாரதிகளும் பொறுப்பற்ற வகையில் வாகனத்தை செலுத்தி செல்வதாகவும் பாதிப்படைந்த பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (செ-4)

**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-6649)

CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**

பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

**021 221 5656**
**070 330 5500**

அண்ணா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

**காணி விற்பனைக்கு**

கிளிநொச்சி செல்வாநகரில் உள்ள இல. 53/3, காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு தொ.இல:-**
**0774376047, 0763037198**
**தொடர்பு கொள்ளவும்.**

(அ-6659)

Group Classes
English Medium 6-11
Science / Health
By-Mr.RAGUMAR 0776059650

(6779)

SATELLITE / D2H Re-Charge & NEW CONNECTIONS
சட்டலைட் TV மீள்நிரப்பு / புதிய இணைப்புக்கள்

VIDEOCON NEW CONNECTION : 6500/-
01 MONTH FREE RENT FREE & FIXING

DISH TV NEW CONNECTION : 6500/-
01 MONTH FREE RENT FREE & FIXING

Sri Lankan Dish TV : 5000/-
01 MONTH FREE RENT FREE
Rent Monthly: 249/- or 499/- or 699/-

RECHARGE Method
. BANK TRANSFER
. eZ CASH
. DIRECT PAYMENT
. CARD PAYMENTS
. TELEPHONE CALL

24

(6895)

videocon dishtv TATA Sky SUN airtel BIG TV

**VIJAYAM Entertainment**
FEEL THE ENTERTAINMENT

POINT PEDRO ROAD, KATTAPPIRAI JUNCTION, KATTAPPIRAI
Hotline : 0777 64 33 22 | Tel: 0115 88 31 21

RATHEE EVENT MANAGEMENT Proudly Presents
VIJAYAM Entertainment

BOOKING STARTS NOW

23 DECEMBER 10am

SPECIAL VIP SHOW

SPONSORED BY Sri Lanka Telecom Mobitel

RAJA CINEMA JAFFNA
LANKA TALKIES

(6893)

TICKETS / INFO: 0717643322

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS *

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: **0768226243**
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி
● நெல்லியடி ● வல்வெட்டித்துறை

(C-6500)

V2 TRAVELS

**அதிரடி விலைக்குறைப்பு!!**

என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

இப்பொழுது

அனைத்து விளம்பரப் பலகைகள் மற்றும் பனர் பிறிண்டிங் வேலைகளுக்குமான விலைகள் சடுதியாக குறைக்கப்பட்டுள்ளன!

எமது உற்பத்திகளுக்கான மூலப் பொருட்களை நாம் இப்போது குறைந்த விலையில் நேரடியாக இறக்குமதி செய்வதனால் இவ் விலைக்குறைப்பானது சாத்தியமாகியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

3 வருட உத்தரவாதத்துடன்

ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற் இல்லாமல்) High Quality ~~250/-~~ 190/- சதுர அடி

ஒருபக்க டிஜிற்றல் விளம்பரப்பலகை (கல்வனைஸ் சீற்றுடன்) High Quality ~~350/-~~ 250/- சதுர அடி

ஒருபக்க ஒளியூட்டப்பட்ட விளம்பரப்பலகை (Backlit Light Board) High Quality ~~650/-~~ 490/- சதுர அடி

(C-5645)

ANDRA DIGITAL IMAGE

அதி உயர்தர டிஜிற்றல்பனர் பிறிண்டிங்
சதுர அடி ~~50/-~~ 38/- இலிருந்து

டிஜிற்றல் பிறிண்டிங் துறையில் 200க்கு மேற்பட்ட கொழும்பு மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கும் ஒரே நிறுவனம்

379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7279 / 021 222 8929 / 077 7481696

**Xmas அதிரடி விலைக் கழிவில்**

**LED TV'S**

WARRANTY 3 YEARS

| | |
|---|---|
| 01- SAMSUNG 32" | 31900/= |
| 02- HISENCE 32" | 24900/= |
| 03- SONY 40" | 59999/= |
| 04- HISENCE 24" | 17900/= |
| 05- TCL 32" | 22400/= |
| 06- PANASONIC 32" | 32500/= |

**10-35% OFF**

OPEN TIME
08.00 AM - 08.00 PM
365 DAYS

INNOVEX WASHING MACHINE
FULLY AUTOMATIC
WARRANTY 5 YEARS
34500/=

SAMSUNG R19 REFRIGERATOR
WARRANTY 10 YEARS
Price 34900/=

(C-6648)

FURNITURES ELECTRONICS
TOYS BABYCARE
**10% OFF**

SONY | SAMSUNG | LG | Hisense | TCL

**KINGS ELECTRONICS (PVT) LTD**
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

021-4546699 | 12A, Point petro Road, Jaffna www.mykings.lk fb-kingsjaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வலம்புரி

சங்குநாதம்


நாதம் 95

வள்ளுவர் ஆண்டு 2047 | 11.12.2016 | தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஆலடி மாநாட்டில் அஞ்சலி

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் என்று பண்டிதர் அறிவித்ததும் மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தினர்.

ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரது முகங்களிலும் சோகம் புரையோடியிருந்தது. இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவரின் நினைவுக்குறிப்புகள் தவிர்ந்த வேறு எந்த விடயங்களும் இன்றைய ஆலடி மாநாட்டில் பிரஸ்தாபிப்பதில்லை என்றும் அவரின் நினைவு சார்ந்த விடயங்களுடன் மாநாட்டை ஒத்திவைப்பதென்றும் பண்டிதர் அறிவித்தார்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் அவர்கள் அமரர் செல்வி ஜெயலலிதா பற்றிய நினைவுக் குறிப்புகளை முன்வைப்பார் என பண்டிதர் அறிவிக்க வாத்தியார் எழுந்தார்.

**வாத்தியார்:** அமரத்துவமடைந்த தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் தமிழக மக்களை மட்டுமல்ல ஈழத்தமிழர்களுக்கும் தீராக்கவலையைத் தந்துள்ளது. முதல்வர் ஜெயலலிதா ஈழத்தமிழ் மக்களை உளமார நேசித்தவர்.

ஏனைய அரசியல் தலைவர்கள் போல அவர் தேர்தல் இலாபத்திற்காக, ஈழத்தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர் அல்ல. மாறாக ஆட்சியில் இருக்கும் போது ஈழத்தமிழ் மக்களை நேசித்தவர்.

இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு எனச் சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தவர். ஈழத்தமிழ் மக்கள் உரிமையோடு வாழவேண்டும் எனக் கருதிய முதல்வர் ஜெயலலிதா அவர்கள் அதற்காக தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வு என்ன? என்பதையும் இந்த உலகத்திற்குத் தெரியப்படுத்தியவர்.

அவர் முதலமைச்சராக இருப்பது எங்களுக்கு ஒரு பலம் என்றிருந்தம். ஆனால்... வாத்தியாரின் குரல் தழுதழுத்தது.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது அத்தனையும் உண்மை. அம்மா இருந்திருந்தா கச்சதீவை மீட்டிருப்பார்.

அந்த நேரத்தில நடந்த தவறுக்காக கச்சதீவை இலங்கையிட்ட ஒப்படைக்க முடியாது. அதை நாங்கள் மீட்க வேணும் எண்டு ஜெயலலிதா விடாப்பிடியா இருந்திருப்பார். என்ன செய்யிறது பல சந்தர்ப்பங்களில தென்பகுதிக்கு அதிர்ஷ்டம் ஏற்படுகிறது வழக்கம். எங்கட கெடுகாலம் அம்மாவை நாங்கள் இழந்திட்டம்.

**கங்காணி:** என்ன இருந்தாலும் அம்மா ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில சில ஏற்பாடுகள் சீராக இல்லை என்பதைக் கூறித்தான் ஆக வேணும்.

**மூப்பர்:** ஏன் கங்காணியார் அப்படிச் சொல்லுறியள்.

**கங்காணி:** மூப்பர் ஜெயலலிதா அம்மா அப்பலோ வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டு கடந்த 5 ஆம் திகதி அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது என்ற செய்தியில இருந்து தந்தி ரீவி பார்த்துக் கொண்டே இருந்தனான்.

தமிழக மக்கள் தங்கட முதல்வர் சுகம் பெற வேண்டும் என உளமாரப் பிரார்த்தனை செய்தவியள். ஆனால் சில அரசியல்வாதிகள் நடிச்சதையும் காணமுடிந்தது. அதிலும் குறிப்பாக ஜெயலலிதா அம்மாவின் தோழி சசிகலா நடந்து கொண்ட முறை எனக்குத் துண்டாய்ப் பிடிக்கல்ல. சசிகலாவின்ர உறவினரான அமைச்சர் ஒருத்தர் முதல்வருக்கு அஞ்சலி செலுத்த வந்தவியளை இழுத்து இழுத்து எறிந்ததைப் பார்த்தன். ஏன் அப்படி நடந்து கொண்டார் என்று தெரியவில்லை.

**சாத்திரியார்:** கங்காணியார் அது மட்டுமல்ல ஜெயலலிதாவின்ர சகோதரனின்ர மகன், மகள் இவையள் ஜெயலலிதாவின்ர உடலுக்குப் பக்கத்தில நிற்கிறதுக்கும் சசிகலா அனுமதிக்கலயாம்.

**விதானையார்:** சாத்திரியார் இதை நீங்கள் சொல்லுறியள். ஏன், ஓ. பன்னீர் செல்வத்தையும் சசிகலா எதிர்த்தவராம். அதாலதான் பன்னீர்செல்வமும் ஒதுங்கி நின்றதாகக் கேள்வி.

**வாத்தியார்:** தெரியாமல் தான் கேட்கிறன். 72 நாட்களாக சிகிச்சை கொடுத்த மிகப் பிரபல்யமான மருத்துவர்கள் ஜெயா அம்மாவுக்கு மாரடைப்பு வரக்கூடிய வாய்ப்பு உள்ளதை முன்கூட்டியே அறியவில்லையோ.

**கங்காணி:** வாத்தியார் அதுதான் சொல்லுறன் முதல்வர் ஜெயலலிதா அம்மாவின்ர மரணத்தில எனக்கெண்டால் சமசியம் இருக்கத்தான் செய்யுது.

**சாத்திரியார்:** மாரகச் சனி வந்தால் போகவேண்டியதுதானே!

**கங்காணி:** சாத்திரியார் இது உங்கட ஜோதிடத்திற்குத்தான் சரி. மாரகச் சனி தானாக வந்ததோ அல்லது யாரும் கூட்டி வந்தவியளோ எண்டு பார்க்கவேணும்.

நல்ல சுகமா இருந்த அம்மாவுக்கு திடீரென என்ன சுகயீனம் ஏற்பட்டது. அப்பலோ மருத்துவமனையில அனுமதித்த உடன அவற்ற உடல் நலம் குறித்த செய்திகளை வெளிப்படுத்தியிருக்க வேணும்.

**பண்டிதர்:** கங்காணியார் சொல்லுறதில நூறு வீதம் உண்மை இருக்குது. அம்மாவுக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட்டது என்றவுடன் தமிழக ஆளுநர் வித்தியாசாகர்ராவ் பெங்களூரில் இருந்து உடனடியாக சென்னை திரும்பி அப்பலோ கொஸ்பிற்றலுக்குப் போனவர். ஆனால் வெறும் ஐந்து நிமிடத்தில கொஸ்பிற்றலை விட்டுத் திரும்பிற்றார். இதைப் பார்த்தபோதே நிலைமை அவ்வளவு நல்லதல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

**மூப்பர்:** அப்ப பண்டிதர் ஐயா ஜெயா அம்மா டிசெம்பர் 5 ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் இறந்தவர் என்றது பொய்யோ.

**பண்டிதர்:** மூப்பர் என்னைப் பொறுத்தவரை விதானையார் சொன்ன மாதிரி ஜெயா அம்மாவின்ர மரணத்தில மிகப்பெரிய ஐயங்கள் இருக்குது. கொஸ்பிற்றலில சசிகலாவும் அவரின்ர நெருங்கிய உறவுக்களையும் தவிர வேறு ஒருத்தரும் அம்மாவைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. அதாலதான் சொல்லுறன் அம்மாவின்ர மரணத்தில ஏதோவொரு பிரச்சினை இருக்குது.

**சாத்திரியார்:** நாசமறுப்பார். அம்மா பிராமணக் குலத்தில பிறந்தவர். அந்திமக் கிரியைகள் செய்யிறது எண்டாலும் இறந்த நேரம் சரியாகத் தெரிந்தால் தான் நாள், நட்சத்திரம், திதி போன்றவற்றைக் கவனித்து அதன்படி வருசாப்தியம் செய்ய முடியும். செத்த நேரத்தை பிழையாய் அறிவித்தால் என்னெண்டு வருசாப்தியம் செய்யிறது.


**கங்காணி:** சாஸ்திரியார் ஒண்டுக்கும் கவலைப்படாதீங்கோ. ஜெயா அம்மாவின்ர இறப்பு நடந்து முடிஞ்சுது. தமிழக மக்கள் அவவை தங்கள் இதயங்களில் வைத்து ஆராதிப்பினம். ஆனா இறப்பு நடந்த விதம், இறந்த நேரம் என்ன வருத்தம் இது போன்ற விடயங்கள் எல்லாம் மெல்ல மெல்ல வெளியே வரும்.


அப்ப தான் தமிழ் மக்கள் தாங்கள் ஆரு என்பதைக் காட்டுவினம்.

கங்காணியார் இப்படிச் சொல்ல அதை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ‘நிர்வாண’ அரசியலமைப்பு





ஏமாற்றுதல் என்பது இந்த உலகப் பிரபஞ்சம் இருக்கும் வரை தொடரவே செய்யும்.

மனிதர்கள் மட்டுமல்ல ஏனைய ஜீவராசிகள் கூட ஏமாற்றுகின்ற தந்திரோபாயத்தைப் பின்பற்றுவதை நாம் காண முடியும்.

இந்தவகையில் ஏமாற்றுதல் பலவகைப்படும்.

யாரும் எதிர்பார்க்காத நுட்பங்களைப் பயன்படுத்தி இந்த ஏமாற்று நாடகம் நிறைவேற்றப்படுவது வழமை.

இதுபோன்ற ஒரு கதை தான் இது.

ஒரு நாட்டில் ஒருவன் அந்த நாட்டு மன்னனை ஏமாற்றிப் பணம் பறிப்பதென முடிபு செய்தான்.

மன்னனைச் சந்தித்து மன்னா! நான் மிகச் சிறந்ததொரு நெசவாளி. என்னிடம் அதிசயமான நெசவுத் தறிகள் உண்டு. அவற்றில் இருந்து மிக அற்புதமான ஆடைகளை நெய்ய முடியும் என்றான்.

இதைக் கேட்ட மன்னன், அப்படியா? நல்லது எனக்கும் நல்ல ஆடை நெய்து தா என்றான் மன்னன்.

சில தினங்கள் கடந்ததும் அந்த நெசவாளி கையை நீட்டி ஏந்தியபடி வருகிறான்.

அவனிடம் எந்தவிதப் பொருட்களும் இருக்கவில்லை.

அரச சபையில் மன்னர் உள்ளிட்ட மந்திரி பிரதானிகள் இருக்கின்றனர்.

அவர்களைப் பார்த்து மன்னா! உங்களுக்கான ஆடையைத் தயாரித்து வந்துள்ளேன்.

இந்தப் பெறுமதியான- அதிசயமான ஆடை அறிவாளிகளுக்கும் நல்லவர்களுக்கும் மட்டுமே தெரியும் என்றான்.

நெசவாளியின் கையில் எதுவும் இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தாலும் அறிவுடையவர்களுக்கும் நல்லவர்களுக்கும் மட்டுமே அந்த அதிசயமான ஆடை தெரியும் என்று அவன் சொன்னதால் மன்னன் உட்பட அனைவரும் நெசவாளியின் ஆடை தெரிவதாகக் கூறினர்.

அனைவரும் ஏமாந்து போயுள்ளனர் என்பதை புரிந்து கொண்ட அந்த நெசவாளி தான் கொண்டு வந்த ஆடையை விரித்துக் காட்டுவதுபோல பாவனை செய்து மன்னர் பெருமானே! மந்திரி பிரதானிகளே இந்த ஆடை எப்படி இருக்கிறது என்று கேட்டான்.

யாருக்குமே ஆடை தெரியவில்லையாயினும் அறிவாளிகளுக்கும் நல்லவர்களுக்கும் மட்டுமே அந்த ஆடை தெரியும் என்று நெசவாளி ஏற்கனவே கூறியதால் எல்லோருமே அந்த ஆடை மிக அழகாக இருப்பதாகக் கூறினர்.

ஆடை தெரியவில்லை என்று கூறினால் தமக்கு அறிவு இல்லை என்றும் தாம் நல்லவர்கள் அல்ல என்பதுமாகிவிடும் என்பதால் கண்ணுக்குத் தெரியாத போதும் ஆடை தெரிவதாக அவர்கள் கூறினர்.

இப்போது இந்த ஆடையை மன்னனுக்கு அணிவித்து அந்த நாட்டைச் சுற்றி வருமாறு நெசவாளி பணிக்கின்றான்.

மன்னன் அணிந்திருந்த ஆடைகள் களையப்பட்டு நெசவாளி தான் கொண்டு வந்த ஆடையை மன்னனுக்கு அணிவித்து விடுவது போல பாசாங்கு செய்கிறான்.


அனைவருக்கும் மன்னன் நிர்வாணமாகத் தெரிகின்ற போதிலும் ஒவ்வொருவரும் தமக்கு அறிவும் நல்ல குணமும் இல்லாததால் தான் மன்னன் அணித்திருக்கும் ஆடை தெரியவில்லை என்று நினைத்துக் கொள்கின்றனர்.

இப்போது மன்னர் நிர்வாணக் கோலத்தில் நாட்டைச் சுற்றி வலம் வருகிறார்.

அந்த நெசவாளிபோல எத்துணை அழகு, எத்துணை வர்ணம் மன்னர் அணிந்திருக்கும் ஆடை அழகோ அழகு என்று வர்ணனை செய்ய மக்களும் ஆகா என்று கூறி தம்மை அறிவாளிகளாகவும் நல்லவர்களாகவும் காட்டிக் கொள்கின்றனர்.

இவ்வாறு மன்னன் வலம் வரும் போது ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் தன் சகபாடிகளுக்குச் சொல்கிறான்.

அடே! அங்க பாருங்கள் எங்க நாட்டு மன்னன் நிர்வாணமாகப் போகின்றார் என்று.





## தமிழ்ப் புத்திஜீவிகள் இதை ஆராய வேண்டும்

ஆடு மேய்க்கும் சிறுவன் உரக்கக் கத்தியபோது தான் அனைவரும் விழித்துக் கொண்டனர்.

ஓடிச்சென்று மன்னரின் நிர்வாணக் கோலத்தை மறைத்தனர். அந்த நெசவாளி தங்களை ஏமாற்றி விட்டான் என்பதை புரிந்தனர்.

இந்தக் கதை ஏமாற்றுபவர்கள் கையாளும் தந்திரோபாயங்கள் பற்றி எடுத்துக் கூறுவதற்காகக் கூறப்பட்டதாயினும் இதற்குள் எங்கள் அறியாமையும் உண்டென்பதுதான் உண்மை.

மிக விரைவில் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவரப் போவதான தகவல்கள் வந்தவண்ணம் உள்ளன.

அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவந்தால் எங்களின் எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வு கிடைத்துவிடும் என்று எங்கள் தமிழ்த் தரப்பின் தலைமை கருதுகிறது.

அந்த நெசவாளி போல சிலர் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை மிகச் சிறந்த, அற்புதமான அரசியலமைப்பாகக் காட்டி நிற்கின்றனர்.

அதுமட்டுமல்ல நாங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

எனவே எங்களுக்கு மட்டும்தான் அரசியலமைப்புச் சீர்திருத்தம் பற்றிக் கதைக்கும் அதிகாரம் உண்டு.

மற்றவர்கள் எதுவும் பேசக்கூடாது என்று தமிழ் அரசியல் தலைமையின் முக்கியஸ்தர்கள் கூறி வருவதுதான் மிகப்பெரும் அபத்தம்.

சுருங்கக்கூறின் எதுவுமில்லாத அரசியலமைப்புத் சீர்திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கூறும் ஆடையாகக் காண்பிக்கப்படுகிறது.

இதுவே சிறந்த ஆடை என்று தமிழ் மக்கள் கருதினால் எங்களின் நிலைமை எல்லாம் இழந்த நிர்வாணக் கோலமாகிவிடும்.

எங்களுக்காக கதைப்பதற்கு- குரல் கொடுப்பதற்கு முன்வருபவர்களையும் மடக்கி, முடக்கி அடக்குகின்ற நாடகம் நடந்தேறுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய ஒருசிலருக்கு புதிய அரசியலமைப்பில் எதுவும் இல்லை என்பது தெளிவாக தெரிகிறதாயினும் அதனைக் கூறினால் அடுத்த தேர்தலில் ஆசனம் கிடைக்காமல் போய்விடுமே என்ற பயத்தால் அவர்கள் பேசாமல் உள்ளனர்.

ஆக, எங்ஙனம் அந்த நெசவாளி மன்னனை ஏமாற்றி இருந்த ஆடையையும் களைந்து நிர்வாணமாக்கி விட்டானோ அதோபோன்றதுதான் புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம்.

தமிழ் மக்களின் உரிமைகளை நிர்வாணமாக்கும் இந்த அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தருவதை வாங்குங் கள். உங்களுக்கு இது போதும் என்று எங்களுக்கு ஆலோசனை கூறுபவர்களை அரசியலில் இருந்து வெளியேற்றுவதற்கான ஒரே சந்தர்ப்பம் இதுவே.

ஆகையால் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும்.

எங்களின் உரிமைகளை உறுதி செய்யாத எந்த அரசியலமைப்பையும் தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார் என்பதை அரசுக்கு தெட்டத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும். இதை அவசரமாக; அதிரடியாக, தமிழ் மக்கள் மீது விசுவாசம் கொண்ட அத்தனை தமிழ்ப் புத்திஜீவிகள், தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகள் ஒன்றுசேர வேண்டும்.

இல்லையேல் எதுவுமில்லாத அரசியலமைப்பை எல்லாம் இருப்பதாகக் காட்டி நாங்கள் ஏமாற்றப்படுவோம்.

ஆகையால் விரைவில் வெளிவர இருக்கும் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஏதுமற்றதாயின் அதனை எதிர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கக்கூடிய தமிழ்ப் பற்றாளர்களும் பதவி ஆசையைத் துறந்து கூட்டை விட்டு வெளியே வந்து உண்மையை உரக்கச் சொல்ல வேண்டும்.

இல்லையேல் நிர்வாணமாகச் சென்ற மன்னனின் நிலைமைதான் தமிழ் மக்களின் உரிமைக்கும் நடக்கும்.




# இட்லியைத் துரத்திய பாட்டி

ஒரு ஊரிலே,ஒரே ஒரு பாட்டி. அந்தப் பாட்டிக்கு இட்லி என்றால் மிகவும் பிடிக்கும்.

இட்லி சாப்பிடுவதுமட்டுமல்ல, இட்லியைச் சமைப்பதும் அவளுக்குப் பிடிக்கும். அதை மற்றவர்களுக்குத் தருவது இன்னும் பிடிக்கும்.

பாட்டி தினமும் மாவை அரைத்துச் சுடச்சுட இட்லி செய்து எல்லாருக்கும் தருவார். அவர்கள் ருசித்துச் சாப்பிட்டு விட்டு பாராட்டுவார்கள். 'உன்னை மாதிரி இட்லி செய்ய இன்னொருத்தர் பிறந்துதான் வரணும்!'

அந்தப் பாராட்டுகளைக் கேட்டுப் பாட்டி மனம் திறந்து சிரிப்பார். அவர்கள் தருகிற காசுகூட ரெண்டாம்பட்சம்தான்.

ஒரு நாள், பாட்டி இட்லிகளைத் தட்டில் போட்டபோது, ஒரே ஒரு இட்லி மட்டும் கீழே விழுந்துவிட்டது. மறுகணம், அங்கிருந்து அது உருண்டு ஓடத் தொடங்கியது.

'ஏய், நில்லு, நில்லு' என்று கத்தியபடி அந்த இட்லியைத் துரத்தினார் பாட்டி.

அப்போது, திடீரென பூமி பிளந்தது. இட்லியோடு பாட்டியும் அதற்குள் விழுந்துவிட்டார்.

பூமிக்குக் கீழே, இட்லி தொடர்ந்து ஓடியது, பாட்டியும் துரத்தினார்.

சற்றுத் தொலைவில், சில சாமி சிலைகள் நின்றிருந்தன.

பாட்டி முதல் சிலையிடம் கேட்டார், 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்திச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்'



என்றார் முதல் கடவுள், 'ஆனா, நீ அதைத் துரத்திகிட்டுப் போகாதே.'

'ஏன்?'

'அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்றிடுவா.'

'நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி.

சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது.

அதனிடம் கேட்டார் பாட்டி, 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்திச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்' என்றார் இரண்டாவது கடவுள். 'ஆனா, நீ அதைத் துரத்திக் கிட்டுப் போகாதே.'

'ஏன்?'

'அந்தப் பக்கம் ஒரு அரக்கி இருக்கா, அவ உன்னைத் தின்றிடுவா.'

'நான் அரக்கியைப் பார்த்து பயப்படமாட்டேன்' என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தார் பாட்டி. சற்றுத் தொலைவில், அடுத்த சாமி சிலை வந்தது.

அதனிடம் கேட்டார் பாட்டி, 'இந்தப் பக்கமா ஒரு இட்லி வந்திச்சா? நீங்க பார்த்தீங்களா?'

'ஆமா, பார்த்தேன்' என்றார் மூன்றாவது கடவுள். 'நீ சட்டுன்னு எனக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கோ.'

'ஏன்?'

'இதோ, அரக்கி வர்றா.'இதைக் கேட்ட பாட்டி அந்தச் சாமிக்குப் பின்னால் ஒளிந்துகொண்டார்.

சில நிமிடங்களில்; அந்த அரக்கி வந்தாள். அவள் பெரிய, பயமுறுத்தும் உருவத்தில் இருந்தாள். சாமி முன் வந்து கும்பிட்டாள்.

பிறகு, மூக்கை உறிஞ்சி, 'மனித வாசனை அடிக்குதே' என்றாள்.

'அதெல்லாம் இல்லை' என்றார் கடவுள். 'நீ போ!'

'கண்டிப்பா மனித வாசனை அடிக்குது' என்ற அரக்கி, பாட்டியைப் பார்த்துவிட்டாள், 'அட, நீயா?' என்றாள்.

'என்னை உனக்குத் தெரியுமா?'

'உன் இட்லியைப்பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன்' என்றாள் அரக்கி.

'என்னோட வா!'

கடவுள் கேட்டார், 'நீ அவளைத் தின்னப்போறியா?'

'ம்ஹூம், என்னோட சமையல்காரியா வெச்சுக்கப்போறேன்' என்ற அரக்கி பாட்டியை ஒரு படகில் ஏற்றினாள். ஆற்றில் படகு சென்றது.

'இந்தச் சின்ன ஆத்தைக் கடக்கறதுக்குப் படகு எதுக்கு?' என்று கேட்டார் பாட்டி. 'நீதான் அரக்கியாச்சே, என்னைத் தூக்கிட்டுத் தண்ணியில நடக்கமாட்டியா?'

'அச்சச்சோ, எனக்குத் தண்ணின்னா பயம், நீச்சலடிக்கவும் தெரியாது' என்றாள் அரக்கி.

சிறிது நேரத்தில் அவர்கள் அரக்கியின் மாளிகைக்குள் நுழைந்தார்கள்.

அங்கே இவளைப்போலவே இன்னும் பல அரக்கிகள் இருந்தார்கள்.

'இனிமே எங்களுக்கு நீதான் தினமும் சமைக்கணும்' என்றாள் அரக்கி.

'சமைக்கிறேன், ஆனா இவ்ளோ பேருக்குச் சமைக்க அரிசிக்கு எங்கே போறது?'

'இதோ' என்று ஒரே ஒரு அரிசியை எடுத்துக் கொடுத்தாள் அரக்கி.

'இந்த ஒரு அரிசி எப்படிப் போதும்?'

'இதைப் பாத்திரத்தில போட்டு இந்த மந்திரக் கரண்டியால ஒருமுறை கலக்கினால் போதும். அது பாத்திரம்முழுக்க நிறைஞ்சிடும்' என்றாள் அரக்கி.

அதன் பின் என்ன நடந்தது என்று அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)



# கவிதைக் கலசம்



## குருத்தோலை சிரிக்கிறது

பச்சை நிறமிழந்து
பசுமை மெருகொடிந்து– அந்த
நெட்ட நெடும் பனையில்
நின்றாடும் காவோலை
காய்ந்து கலகலத்து
காற்றடிக்கும் திசையெல்லாம்
சாய்ந்து சரிந்தாடி
வாடி வலுவிழந்து
இளமைப் பொலிவோடு
அழகுமிடுக்கோடு–அன்றைய
ஆனந்த நினைவு நெஞ்சில்
அறவே அறுந்துவிட
உரத்த சிரிப்பின் ஒலி–பனை
உச்சியிலே கேட்கிறது– ஆம்!
இந்தக் காவோலை விழக்கண்டு
அந்தக் குருத்தோலை சிரிக்கிறது

**பொலிகை**
**செ.யோகராஜா**

## கிளியே...

அந்திப்
பொழுதுகளிலெல்லாம்
அழகியே
உனைத் தேடியபடி
என் கண்கள்
இமைக்க மறுக்கிறதோ
மறக்கிறதோ
புரியவில்லை
என் இதயத்தை
ஏலம்விட
நான் எண்ணவே
இல்லையே
அப்புறம் எதற்கடி
நீ– என்
காதலை மறுக்கிறாய்

**இரா.நவதர்சினி**
**வயாவிளான்**

## நரகத்து அரச சபையும் சித்திரகுப்தனாரின் புதிய பாடலும்

எமதர்மராசாநான் என்னசொல்ல – இவன்
தலைவிதிக் கணக்கோஎன்னக்கொல்ல
புண்ணியம் சேர்க்காத இந்தப் பொடியனோ
நெஞ்சநிமிர்த்திறான் உங்கமுன்ன!

பள்ளிப் பாடங்களைபடிச்சதில்ல – எந்த
வாத்தியார் சொல்லையும் மதிச்சதில்ல
துள்ளித் திரிஞ்சவயசில இவன்செய்த
கொடுமையோகொஞ்சம் நஞ்சமில்ல!

'பைக்கலீசில'எடுத்துவைச்சு–தாயின்
தாலியதாரைவார்த்தமகன்
தூக்கமருந்ததெளிச்சுப்பலவீட்டில
கூண்டோடு'ஆட்டையப்'போட்டயமன்!

பெற்றவர் உள்ளம் பதறியழ – தினம்
தண்ணியில் மானம் தவறிவிழ,
கட்டியமனைவியும்,பிள்ளைகளும் பின்பு
பெட்டியில் போனதுபெரிய க(ை)த!

'போனுக்கு'தேச்சகாட்டவிட – இவன்
உலகத்தில் ஒன்றும் கிழிச்சதில்ல,
நாடும்,வீடும் நட்டத்திலபலர்
இப்பிடித் திரியினம் பூமியில!

**த.நிரஞ்சலன்**
**கிளிநொச்சி**

## அம்மா என்றால் அன்பு

அன்புக்கு இலக்கணமான
அம்மா என்ற சொல்லை
தன் அடைமொழியாய்
தமிழர்க்குத் தாயாய் வாழ்ந்த தாயே

உன் பிரிவு
தமிழர் வாழ்வில் இருள்வு

ஈழத்தில் கொத்துக் கொத்தாய்
குண்டு போட்ட வேளை
அம்மா நீயிருந்திருந்தால்
அடுத்த கணமே
எடுத்திருப்பாய் முடிவு

என்ன செய்ய
நாடகத்தார் போல் நடித்து
எம் தலையில் வாறி மண்போட்ட
ஆட்சி அம்மா அன்றிருந்தது

ஈழத்தில் நடந்தது
இனப்படுகொலையே
என்று நீ போட்ட தீர்மானம்
எமக்கு நம்பிக்கை தந்தது


உன்னால் தமிழர் நாம்
தலை நிமிர்ந்தோம்
பெண்ணாய் இரும்புப் பெண்ணாய்
தமிழரின் சூரியனாய் ஒளிர்ந்தாய்

ஒளிர்ந்த சூரியன்
இன்று ஒளி மறைந்து போக
உடைந்து போனது
உலகத் தமிழினம்

முதல்வரை இழந்தது தமிழகம்
நல் தலைவியை இழந்தது உலகத் தமிழினம்
இனி விதை விட்டு முளைக்கட்டும்
உன் சிந்தனைகள்

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 331



## நாடும் காடும்

எதிர்பாராத விதமாய்
ஏற்பட்ட சந்திப்பில்
உறுமலும் கர்ஜனையும்
உறுத்தும் உரத்த குரலில்
இவை அடிக்கடி நிகழ்ந்தாலும்
பாதிக்கப்படுவதில்லை
நாட்டில் நடந்தவை போல்
வாட்டி வதைக்கும் சோகமும்
இடம்பெயர்வுகளும்
இடம்பெறுவதில்லை

**க.நாகராசா**
**நுணாவில்**

## பந்தப் பகை

ஏட்டிக்குப் போட்டியாய்
எதிரே போர்க்களம்
உறவுக்கு சாபமாய்
பந்தாடும் ஜீவனே
உயிர் மூச்சு சிவமாய்
இழந்தமூச்சு சவமாய்
வாழ்வினிலே போராட்டம்
உறவின் நிலையின்மை
தொடரும் பந்தமதில்
உணவுச் சங்கிலிக்காய்
நனவான போட்டியிதுவே

**சு.சுருத்திகா**
**யா/வ.ம.க.**

## சமாதானம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
இரண்டாகினால் இங்கேயே சாவு
இருவர் சண்டையில் மூன்றாமவர்
பயன்பெறப் போகின்றார்
அடம்பன் கொடியும் திரண்டால்
மிடுக்கு எனும்போது
அதிபலம் வாய்ந்த
நீங்கள் சேர்ந்தால்
அனைத்தையும் வென்று விடலாம்
சமாதானமாகி சேர்ந்திடுங்கள்
சகோதரத்துவத்தினை
போற்றிடுங்கள்

**ஜெ.தவேதன்**
**யாழ்.இந்துக் கல்லூரி**

## ஆழமறியாது காலைவிடாதே...

தனித்து வந்து சண்டையிடும்
சாங்கத்தான் என்னவோ
ஆழமறியாது காலை விட்டு
ஆத்திரத்தை ஊட்டிவிடாதே
பதுங்கியிருப்பவன்
பயந்தவன் என்று எண்ணிவிடாதே
நட்புரிமை கொண்டாடி
நல்லவனாய் ஆக்கிவிடு
நாட்டாமை காட்டி நின்றால்
நல்லவரைப் பார்க்கமாட்டாய்

**அணிஞ்சில்**
**புவபாலன்**

## புரிந்துணர்வு

இன்புற்றிருக்கும் போது
யாரினதும் துணை
வேண்டுவதில்லை
துன்பம் வரும்போதுதான்
துயர் பகிரத் துணைவேண்டும்
காலையும் வாலையும் எதனாலோ
இழந்த சிங்கம் வேதனையால்
கத்துவதைக் கேட்ட புலி இரங்கி
சிங்கத்தின் அருகிருந்து நட்போடு
உரையாடிச் சாந்தப்படுத்துகிறது
மனித சமுதாயமும் இதை உணர்ந்து
தம்முள் இன மத சாதி பேதங்களை
மறந்து சேர்ந்து இணங்கி
ஒன்றுபட்டு வாழலாமே

**துரை, தென்மட்டுவில்**

## வீரம்

வீரம் காட்டும் புலியும்
ஓரம் கட்டும் சிங்கமும்
தீரமுடன் போராடும் காட்சி
வீர வேங்கைகள்
வீறு கொண்டெழுந்து
போராடி வீரமரணம் எய்திய
வரலாறு நினைவுகூரும் காட்சி!
வீரப்புலியின் தோல்வியானாலும்
கோழைச்சிங்கத்தின்
வெற்றியானாலும்
வீரம் கோழையை வீழ்த்தி
உரமிடும் வெற்றிக்கு நிச்சயமாய்!

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

## ஒற்றுமையாக வாழ்வோம்

சாதி மத வேறுபாடுகளால்
மிருகங்களாக மாறி
நாட்டைச்சீரழிப்பதில்
என்ன பயன் உள்ளது
மானிடா– எல்லாம்
சமத்துவமானவை
எல்லோரும் ஒருதாயின்
பிள்ளைகள் என்று
உனக்குப் புரியவில்லையா
நாம் வேற்றுமையிலும்
ஒற்றுமையாக இணைந்தால்
நம் நாட்டினை புதிய பூமியாக
மாற்றிவிடலாம்
வாருங்கள் நண்பர்களே

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

# மௌனத்தின் தேடல் –332



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3, 2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு14.12.2016ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -






வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இ.3,2 ஒழுங்கை, நவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**மைத்திரிக்கும் மகிந்தவுக்கும் என்ன வித்தியாசம்?**

**சில பிரச்சினைகளை தீர்க்க மௌனம் தீர்வாக அமையுமா?**

**பேனா எடுக்க வேண்டிய வயதில் ஏன் இளைஞர் வன்முறையில்...**

துவா — யாழ்ப்பாணம்

**பேனா எடுக்க வேண்டிய வயதில் ஏன் இளைஞர் வன்முறையில் இறங்குகிறார்கள்?**

ஒரு காலத்தில் ஈழத்தில் சினிமாப்பாடல்கள், படங்கள் என்பவற்றிற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இவை இளைஞர் மத்தியில் போராட்ட சிந்தனையை சிதைத்துவிடும் என்பதற்காகவே தடைவிதிக்கப்பட்டன. அது வெற்றியும் அளித்தது.

இளைஞர்கள் அப்போது போராட்ட சிந்தனையோடு வாழ்ந்தார்கள். ஆனால் இன்றைய நிலை. எம் இளைஞரின் தறுதலைத் தனத்திற்கு மூலவேரே தென்னிந்திய சினிமாதான். மீண்டும் விடுதலைப் புலிகள் வரவேண்டும் என விரும்புபவர்களை கேட்டுப்பாருங்கள் போராட்டத்தை ஆதரிக்கவல்ல வாள்வெட்டு, கொலை, கொள்ளை, பலாத்காரம் இவற்றில் ஈடுபடும் தலைகளை சந்தியில் நிற்கவைத்து... அதுக்காகத்தான் என்பார்கள்.

வதனி — மானிப்பாய்

**ஒட்டுமொத்த தமிழ் அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்டு உரிமைக்காக போராடுவது போல நான் ஒரு கனவு கண்டேன்?**

உங்கள் கனவில் தீயை அள்ளிவைக்க. நடைபெறாத, நிறைவேறாத கனவு கண்டால் அதன் பலன் என்ன என்று வலம்புரி சங்குநாதத்தில் வெளிவரும் கனவுகளும் அதன் பலன்களும். பகுதியை பார்த்துத் தெரிந்துகொள்க.

வர்ணிகா — இருபாலை

**உறவுகள் பிரிவதன் காரணம்?**

ஒருகட்டடம். அதில் ஒரு சின்ன வெடிப்பு ஏற்படுகிறது. அதை யாரும் கவனிக்கவே இல்லை. அந்த சிறிய வெடிப்பு விரிசலடைகிறது. அந்த விரிசல் கட்டடம் தரை மட்டமாக காரணமாகி விடுகிறது. சிறிதாக இருக்கும் போது சரி செய்திருந்தால் கட்டடம் தரைமட்டமாகியிருக்காது. வாழ்வும் அப்படித்தான். சிறிய விரிசலை சரி செய்யாவிடின் பிரிவு நிரந்தரமாகிவிடுகிறது.

நிஷா — கோண்டாவில்

**தொடர் நாடகப் பைத்தியங்கள் தெளிவடைய என்ன செய்யலாம்?**

அதனால் பாதிக்கப்பட்டது நானும்தான். ஆனாலும் எதிர்ப்பதில்லை. ஏனென்றால் தொடர் நாடகங்களில் சொல்வதெல்லாம் கணவன், மாமியார், மாமனார், மைத்துனர், மைத்துனி இவர்களை எட்டடி எப்படி பழிவாங்குவது என்பதுதான். இதைத்தான் எனது மனைவியும் ரசித்து ரசித்துப் பார்ப்பாள். இந்த பழிவாங்கும் வரிசையில் கணவனாகிய நான்தான் முதலாவதாக இருக்கிறேன். அதனால் நாடகத்தைக் காங்கிச் சாப்பிடுவதற்கு மட்டும் வாயைத் திறக்கிறேன். மற்றபடி ம்ம்ம்... தான்.

ஜெயா — கொக்குவில்

**மதுவை அளவாக சமமாக பகிர்ந்து எடுப்பது போல மற்றைய விடயங்களில் நடக்கிறார்கள் இல்லையே?**

அதற்காக மாதுவை எல்லாம் சமமாக பகிர்ந்தளிக்க முடியாதப்பா.

தனு — அல்வாய்

**சில பிரச்சினைகளை தீர்க்க மௌனம் தீர்வாக அமையுமா?**

பல பிரச்சினைகளுக்கும் பலரின் பிரச்சினைகளுக்கும் காரணம் இந்த வாய்தான். அதனால் மௌனம் நம்மையும் மற்றவர்களையும் பாதுகாக்கும். அதற்காக பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருந்து விட்டால் கழுத்தில் சுருக்கு மாட்டப்படும். அதன்பின் கத்திக் கதறிப் பயனிருக்காது.

தவராஜா — இணுவில்

**எனக்கு தமிழனாக வாழப் பிடிக்கவில்லை?**

என்ன செய்ய. இந்த ஜென்மத்தைச் சீக்கிரம் முடித்துக்கொண்டு அடுத்த ஜென்மத்திலேனும் சிங்கள இனத்தில் பிறந்து விலை போகாத அரசியல் தலைமையின் கீழ் தலை நிமிர்ந்து நிற்போம்.

நிரோ — அளவெட்டி

**வாகனங்களின் 25000ரூபாய் அபராதம் பற்றி?**

லைசன்ஸ், இன்சுரன்ஸ், ரக்ஸ், கெல்மெட், சடுதியாக பிடிக்கக் கூடிய பிறேக், பக்கவாட்டு சிக்னல்கள் இப்படி எல்லாம் இருக்கிற எங்களுக்கே பொலிஸைக்கண்டவுடன் கொலை நடுக்கம் நடுங்குதே. இவை எதுவும் இல்லாமல் வரும் (அட) பாவிகளுக்கு எப்படி இருக்கும். சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. அதை திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது. ம்ம்ம்... எல்லாம் பரமசிவனுக்கே வெளிச்சம்.

பகிர்துசன் - பாவலன் தெல்லிப்பழை-இருபாலை

**காதல் என்பதன் அர்த்தம்?**

அதற்கு கண் இல்லை. அதனால் போகுமிடம் தெரியாது. அதற்கு பிறேக் இல்லை அதனால் நிறுத்த முடியாது. அது கெடுகுடி கடைசிவரை சொல்கேளா. அதற்கு வாயில்லை. அதனால் பிறர் தாய்மொழியை புரிந்து கொள்ளாமல் புலம்பித் தவிக்கும். இப்போது சொல்லுங்கள் இந்தச் சுருமாந்திரக் காதல் தேவைதானா?

உங்கள் கேள்விகளை SMS அனுப்புங்கள் 021 567 1532

கோவின் — யாழ்ப்பாணம்

**இலங்கைக்கு ஈழம் என பெயர் வரக் காரணம்?**

ஈழம் எனும் சொல் கீழம் என்பதன் மற்றொரு வடிவம். " கீழ் என் கிளவி உறழத்தோன்றும்" என்கிறது தொல்காப்பியம். கீழ் எனும் சொல் இரண்டு பொருள் தரும். ஒன்று தாழ்வைக் குறிக்கும். மற்றயது கிழக்கைக் குறிக்கும். தமிழ் நாட்டின் கிழக்கே ஈழம் இருப்பதுடன் தமிழ் நாட்டின் கிழக்குப்பகுதி தாழ்வான நிலப் பரப்பைக் கொண்டுள்ளது. உதாரணத்திற்கு நீரிழிவு எனும் சொல்லைப் பார்த்தால் இழிவு எனும் சொல் இறங்குதலைக் குறிக்கிறது. இழிவு - ஈழ் - ஈழம் என வரலாகிற்று.

மதுஸ் — பருத்தித்துறை

**பிறருக்கு தேவைப்படும் போது நல்லவர்களைத் தெரியும். நாம் அவர்கள் தேவை முடிந்த பின்பு கெட்டவர்களாகி விடுகிறோமே?**

அதுதானையா இந்த உலகம். நாம் நல்ல தாய் செய்யும் உதவிகளில் ருசி கண்டுவிட்டு கறிவேப்பிலை போல எடுத்து எறிந்து விடுவார்கள். அப்போது எங்களை ஒரு நாய் கூடத் திரும்பிப்பார்க்காது. இது நன்றிகெட்ட உலகம்.

குமரன் — நல்லூர்

**கடவுள் இருக்கிறாரா இல்லையா?**

கடவுளை கண்டேன் என்று ஒருவன் கூறினால் பைத்தியம் என்போம். கடவுள் என்று எதுவுமே இல்லை என ஒருவன் சொன்னால் அவனை நாஸ்திகன் என்போம். இதற்கிடையில்தான் வாழ்க்கை.

சுஜன்

**மைத்திரிக்கும் மகிந்தவுக்கும் என்ன வித்தியாசம்?**

தனது உத்தியோகபூர்வ இணையத்திற்குள் புகுந்த மாணவனை நேரில் அழைத்து பாராட்டி அனுப்பினார் மைத்திரி. இதே நிலை மகிந்த ஜனாதிபதியாக இருக்கும்போது ஏற்பட்டிருந்தால்? மாணவன், மாணவனின் பெற்றோர், மாணவனின் உறவினர்கள் இப்படி அனைவரது நிலையையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

ரஞ்சித் — அல்வாய்

**விஜய் அன்டனியின் சைத்தான் எப்படி?**

விஜய் அன்டனி படங்கள் என்றால் யாரிடமும் படத்தைப்பற்றிக் கேட்காமல் படம்பார்க்க போகலாம் என்பதை நிரூபித்துவிட்டார். அவரின் படத் தலைப்புகளில் இருந்து படம் வரை வித்தியாசமான முயற்சிகள். பிச்சைக்காரன் என்கின்ற பிரமாண்ட வெற்றிப்படத்தைத் தொடர்ந்து வெளிவந்த சைத்தான் இரண்டு நாட்களில் 5 கோடி வசூல் செய்து சாதனை படைத்திருக்கின்றது.

# நானும் நாயும் தகப்பனும் மகனும்








நியூயோர்க்கைச் சேர்ந்த டாபர் ப்ரோப்பி என்பவர், 'நானும் என் மகனும்தான் பல்லுயிர் உலகின் சம்பியன் கள்' என ஸ்டேட்டஸ் தட்டி, தங்களது போட்டோக்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்திருக்கிறார்.

எல்லா போட்டோககளி லும் தன்னைப் போலவே ஆடை அணிந்த தனது நாய்க் குட்டியோடு காட்சி தந்திருக்கி றார்!

பல்லுயிர்த் தன்மையை ஊக்குவிக்கும் விதமாக, வில ங்குகளோடு நாம் இணை ந்து வாழ வேண்டும் என் பதை வலியுறுத்துவதற் காகத் தனது செல்ல நாய் ரோஸன்பெர்க்கைத் தன் னைப் போலவே மாற்றி, 'மகன்' எனக் குறிப்பி ட்டு தினமும் புகைப்படங் களை பதிவு செய்து வரு கிறார்.

சமூக நலன்களை வலி யுறுத்தும் வாசகங்களோடு வித்தியாசமான உடை அணிந்து போட்டோக் களைப் பரவ விடும் இவர் கள், சமீபத்தில் முடிந்த அமெரிக்கத் தேர்தலில் எல்லோரும் வாக்களிக்க வலியுறுத்தி அந்நாட்டு தேசி யக்கொடி போன்ற உடைய ணிந்தும் போஸ் கொடுத் தனர்.

# உலகம் சுற்றும் யுவதி



"உலகம் என்பது ஒரு புத்த கம். பயணம்செய்யாதவர்கள் அதன் ஒரு பக்கத்தை மட்டுமே இன் னமும் படித்துக்கொண்டிருக்கிறார் கள்" என்பது பயணத்தைப் பற் றிய பிரபலமான பொன்மொழி. உலகம் முழுக்க சுற்றிப்பார்க்க நமக்கெல்லாம் ஆசை இருக்கும். ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த கஸாண்ட்ரா டி பெகோல் உல கத்தையே சுற்றிவந்து அசத்திக் கொண்டிருக்கிறார்.


2015ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கி இதுவரை 181 நாடுகளுக்குப் பயணித்தி ருக்கிறார் இவர். **Expedition 196** என்ற பெயரில் உலகத் தையே சுற்றிவரத் திட்டமிட்டு தற் போது சாதனையின் விளிம்பில் இருக்கிறார். மீதமிருக்கும் 15 நாடுகளுக்கும் அடுத்த மாதத் திற்குள் பயணித்து, "உலகம் சுற்றி வந்த முதல் பெண்" என்ற சாதனையைப் படைக்கவிருக் கிறார். இது தவிர்த்து, "குறைந்த காலத்தில் உலகின் பல நாடு களைச் சுற்றிவந்த முதல் நபர்" என்ற சாதனையையும் நிகழ்த்த விருக்கிறார்.

பக்கத்தில் இருக்கிற ஊருக்குப் போய்ட்டு வந்தாலே கன்னாபின் னான்னு செலவாகுமேனு தலை யைச் சொறிஞ்சுகிட்டே விசா ரிச்சா... இவருடைய பயணச் செலவுகள் அனைத்தையும் சுற்றுலா மூலம் அமைதியை ஏற்படுத்தும் பன்னாட்டு அமைப்பு தான் **(International Institute for Peace Through Tourism)** செலவழிக்கிறதாம். இதுவரை இரண்டு லட்சம் அமெ ரிக்க டொலர்கள் இவரின் இந்தப் பயணத்திற்காகச் செலவாகியுள் ளது.

தான் பயணிக்கும் நாடுகளில் குறைந்தது இரண்டு நாட்கள் தங்கி அந்நாட்டின் கலாசாரம், இடங்கள் பற்றிப் பதிவு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளார் கஸாண்ட்ரா. தனது கமராவில், பயணிக்கும் நாடுகளைப் படம் பிடித்து சமூக வலைத்தளங்க ளில் லைக்ஸ்களைக் குவிக்கும் இவர், இந்தப் பயணத்திற்காக இதுவரை 254 விமானங்களில் பயணித்திருக்கிறார்!

# செயற்கை வானவில்


கேப்ரியல் டாவ்



வயசு வித்தியாசம் இல் லாம எல்லோரும் ரசிக்கிற விடயங்கள்ல வானவில்லும் ஒன்று. நமக்கு விருப்பப்பட்ட இடங்களில் வானவில்லைக் கொண்டு வந்தா எப்படி இருக்கும்? இந்த ஆசையை நிஜமாக்கியிருக்கார் அமெரிக் காவைச் சேர்ந்த கேப்ரியல் டாவ்!

வானவில் வண்ணங்க ளில் இருக்கும் நூல்களைக் கொண்டு, செயற்கை வான வில் உருவாக்குவதில் கேப்ரி யல் வித்தை காட்டுகி றார்.

"கட்டடத்திற்குள் வானவில் வந்துவிட்டதென்று" பார்ப் பவர்களை வியக்கவைக்கிறது இவரின் படைப்பு.

இவர் இந்த மாதிரி 35 செயற்கை வானவில்களை ஏற்படுத்தி சாதித்திருக்கிறார்.

சமீபத்தில் ஓஹியோ மாகா ணத்தில் உள்ள தி கிரேட் கேலரி ஆஃப் டொலேடோ மியூசியத்தில் இவர் ஏற்படுத் திய செயற்கை வானவில், இணையத்தில் பிரபலமாகி யிருக்கிறது.

மியூசியத்துக்கு கலைப் பொருட்களைப் பார்க்க வரு பவர்கள் இவருடைய இந்த நூல் வானவில்லைப் பார்த்து சொக்கி நிற்கின்றனர். இதனால் மியூசியத்துக்கு வருபவர்க ளுடைய எண்ணிக்கையும் அதிகமாகியிருக்கிறது.

எங்களுக்கும் இந்த மாதிரி செயற்கை வானவில் பண் ணித்தாங்கள் என பெரிய பெரிய கட்டடங்களின் உரிமையா ளர்களிடமிருந்து கேப்ரிய லுக்கு வேண்டுகோள்கள் குவி கிறதாம்.

சின்ன ஐடியாதான்! ஆனா அது எல்லோரையும் கவ ரும்படி பண்ணா ஈஸியா ஹிட் அடிக்கலாம் என்பதற்கு கேப்ரியலோட இந்த செய ற்கை வானவில் முன்னு தாரணம்!

# மீண்டும் உயிர்பெறும் டைட்டானிக்



இங்கிலாந்து நாட்டைச் சேர் ந்த ஆர்.எம்.எஸ். டைட்டானிக் (RMS Titanic) என்ற பிர மாண்ட சொகுசுக்கப்பல் 1912ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பனிப் பாறை ஒன் றில் மோதி கடலில் மூழ்கியது. இந்த விபத்தில் 15,000 பயணிகள் உயிரிழந்தனர். இந்த சம்ப வத்தை மைய மாகக் கொண்டு டைட்டா னிக் திரைப்படம் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், டைட்டானிக் கப்பலை மீண்டும் சீனா உரு வாக்கத் தொடங்கியுள்ளது. சீனா உருவாக்கும் டைட்டானிக் கப்பல் சுற்றுலாப் பயணிகளுக்காக. டைட் டானிக் ரிப்ளிகா என்று பெயரி டப்பட்டுள்ள இந்த புதிய டைட்டா னிக் சீனாவின் சிச்சுவான் கடற்க ரையில் இருந்து 80 மைல்கள் கிலோமீற்றர்கள் தொலைவில் நிறுத்தப்படும்.

இந்த டைட்டானிக் ரிப்ளிகா வில் நீச்சல் குளம், விளையாட்டு அறை, திரையரங்கம் மற்றும் ஆடம்பர விருந்தினர் மாளிகை உள்ளிட்ட பல சிறப்பு அம்சங்கள் இருக்கும். இந்த கப்பல் கட்ட ஆகும் செலவு 145 மில்லியன் டாலர் (986 கோடி). இரண்டு ஆண்டுகளுக்குள் டைட்டானிக் ரிப்ளிகா தயாராகிவிடும் என்று கூறப்படுகிறது.

# அம்மாவின் அரசியல் பாதை...





1982–அ.தி.மு.கவில் இணைகிறார்.



1983– கொள்கை பரப்புச் செயலாளர்.




1984– மாநிலங்களவை உறுப்பினர்.



1989– சட்டமன்றத் தேர்தலில் போடிநாயக்கனூரில் போட்டியிட்டு முதல் முறை எம்.எல்.ஏ.ஆகிறார்



1989– தமிழக சட்டசபையின் முதல் பெண் எதிர்க்கட்சித் தலைவராகிறார்.



1989–அ.தி.மு.க.மீண்டும் ஒன்றிணைகிறது.




25 மார்ச் 1989– சட்டமன்றத்தில் ஜெயலலிதா தாக்கப்படுகிறார்.



1991– தமிழக முதல்வரானார்.



1996– சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தோல்வியை சந்தித்தது. பர்கூரில் ஜெயலலிதா தோற்றார்.



14 ஜூன் 1996 சொத்துக் குவிப்பு வழக்கு தொடரப்படுகிறது.



7 டிசெம்பர் 1996– கலர் ரி.வி. ஊழல் வழக்கில் கைதாகிறார்.



9 ஒக்டோபர் 2000– டான்சி வழக்கில் 2 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை.



14 மே 2001– அ.தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றுகிறது.



செப்டெம்பர் 2001– உச்ச நீதி மன்றத்தால் தகுதி நீக்கம் செய்யப்படுகிறார். ஓ.பன்னீர்செல்வம் முதல்வராக பதவி ஏற்கிறார்.



4 டிசெம்பர் 2001–டான்சி, பிளசன்ட் ஸ்டே வழக்குகளில் இருந்து விடுவிக்கப்படுகிறார்.



மார்ச் 2002– ஆண்டிபட்டி இடைத் தேர்தலில் போட்டியிட்டு வென்று மூன்றாவது முறையாக மீண்டும் முதல்வராகிறார்.



2004– எம்.பி.தேர்தலில் ஒரு சீட் கூட வெல்லாமல் அ.தி.மு.க.படுதோல்வி.



2006–சட்டமன்றத் தேர்தலிலும் தோல்வி.



16 மே 2011– நான்காவது முறையாக முதல்வராகிறார்.



செப்.27. 2014– சொத்துக்கு விப்பு வழக்கில் 4 ஆண்டு சிறை ரூ.100 கோடி அபராதம்.



11 மே 2015 சொத்துக் குவிப்பு வழக்கில் விடுதலையாகிறார்.



23 மே 2015– 5ஆவது முறையாக மீண்டும் முதல்வராகிறார்.



27 ஜூன் 2015– ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் போட்டியிட்டு வெல்கிறார்.



19 மே 2016– 6 ஆவது முறை முதல்வராகிறார்.




செப். 23.2016– உடல் நலக் குறைவால் அப்பலோ மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறார்.



2016 டிசெம்பர் 06 அரசியல் வானில் இருந்து விடிவெள்ளி பொன்று விடைபெற்றது.

# வெள்ளடியனும் மீன் குழம்பும்

சிறுகதை

மாசி மாத பனி மூசிப் பெய்யும் என்பார்கள். ஆனால் கார்த்திகை மாதத்தில் மூசிப் பெய்து கொண்டிருந்தது பனி, பனியின் குளிர் தாங்கொணாது போர்த்து மூடிப்படுத்திருந்தான் நமணன். காலை ஏழு மணியாகியும் எழுநதிராத கணவனை, தன் திருப்பள்ளியெழுச்சியினால் எழுப்பினாள் நமணனின் மனைவி மாலினி. நித்திரையில் இருந்து எழுந்தவன் சோம்பலை

முறித்து தேநீரைச் சுவைத்தபடி மனைவியிடம் "இன்றைககு மதியம் என்ன சாப்பாடு என்று கேட்டான்". "நீங்களே சொல்லுங்க". கணவன் விருப்பமே தன் விருப்பம்போல் கூறினாள் மாலினி. பந்து தன் பக்கம் வந்ததை உணாந்த நமணன் ஆர்வக் கோளாறுடன் "மீன் வேண்டுவம்" என்றபொழுது மாமனாரின் அவலக் குரல் கேட்டது. "மாலி மாலி ஓடி வா" என்னவென்று பாருங் கோவன் என்றாள் மாலினி. "கொப்பர் உன்னைத் தானே கூப்பிடுகின்றார்" என்றான் தேநீரைச் சுவைத்தபடி நமணன்.

"தம்பி தம்பி கொத்தப் போகுது... கொத்தப்போகுது... கொத்துது..." மாமனாரின் அலறல் நிலை மையின் தீவிரத்தை உணர்த்த முன்னர் ஒரு முறை வீட்டுக்குள் பாம்பு வந்த போது மாமனார் கட்டிலின் மேல் நின்றபடி அலறியது, ஞாபகத்துக்கு வர மீண்டும் பாம்பு தானோ என்று நினைத்தபடி நமணன் மாமனாரின் குரல் வந்த திசை நோக்கி தடியொன்றுடன் ஓடினான்.

மாமனார் சுவரோடு சுவராக பல்லிபோல் ஒட்டிக்கொண்டு சூ...சூ... என்று கத்த முயன்று கொண்டிருப்பதும் ஆனால் வாயிலிருந்து வெறும் காற்று மட்டும் வருவதையும் அவர் நடுங்கிய கையில் அரிசிச்சுண்டு இருப்பதையும் அதை நோக்கி நமணன் செல்லமாக வளர்த்த வெள்ளடியன் கோழி பாய்ந்து பாய்ந்து கொத்துவதையும் கண்ட நமணனுக்கு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. "ஐயோ அப்பாவை வெள்ளடியன் கொத்தப்போகுது என்ற மனைவியின் குரலில் பொத்துக்கொண்டு வந்த சிரிப்பு ஏவறையாக வந்தது.

நமணன் வெள்ளடியன் சேவல் வளர்க்க வேண்டுமென்ற ஆசையில் சிறு குஞ்சாக வேண்டிக் கோழிக் கூட்டில் விட்டது. நாளடைவில் அது வளர்ந்து மற்றைய கோழிகளைக் கொத்த கூட்டில் இருந்து விடுதலை கிடைத்தது வெள்ளயடியனுக்கு. வெளியில் நாய் பிடித்தாலும் பிடித்துவிடும் என்ற பயத்துடன் இருக்க நாய் வெள்ளடியனைப் பார்த்து பயந்து ஒதுங்கியது. இதனால் நமணனுக்கு ஒரு பெருமை தனது வெள்ளடியனைப் பார்த்து. வெள்ளடியன் வளர வளர அதன் அதிகாரம் வீட்டில் அதிகரித்துக் கொண்டே போனது.

சிறுபிள்ளைகளைக் கண்டால் துரத்தித் துரத்தி கொத்தத் தொடங்கி விடும். இன்று அதன் வேட்டையில் சிக்கியவர் நமணனின் மாமனார். கோழி பாவம் என்று அரிசி போட வந்தவரை, சிறைப்பிடித்து தாக்கத் தொடங்கியிருந்தது.

நமணனும் மாலினியும் வெள்ளடியனிடம் இருந்து அவரை மீட்டெடுக்க கடும் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இடையிடையில் மாலினியையும் கொத்த முற்பட்டது. நமணன் ஒரு மாதிரி யாக மாமனாரை மீட்டெடுத்தான. வெள்ளடியனை நல்லதொரு கயிற்றால் கட்டியவனைப் பார்த்து மாலினி சொன்னாள், "உந்த சனியனை வித்துப்போட்டு வாங்கோ. பதிலுக்கு நமணன் உனக் கென்ன விசரே?" என்றான்.

மாலினியோ, கோழியை வித்துப்போட்டு அந்தக்காசில் மீனை வேண்டிக்கொண்டு வாங்கோ. மத்தியானம் மீன் குழம்பு வைக்கலாம் என்றாள்.

அதில்லையடி சந்தைக்கு நான் கோழியோட போனால் என்னுடைய முகத்தைப் பார்த்துவிட்டு கோழி அழுக்கிற மாதிரி அழுக்கி விடுவாங்கள். பிறகு நட்டத்திலதான் முடியும் கோழி வியாபாரம் நமணன் தன் பட்டறிவை வைத்து தன் நிலையைச் சொன்னான்.

அதெல்லாம் வடிவா விற்கலாம், தனி ஒருவன் படத்தில் அரவிந்தசாமி தன் அப்பாவுக்கு சொல்லுகிறமாதிரி, மாலினியும் நமணனுக்கு சொன்னாள் இவ்வாறு, சந்தைக்குள்ள போகும் போது கொஞ்சம் தலை யை நிமிர்த்தி ஒருபக்கமாக சரித்து ஒரு அலட்சியப் பார்வையுடன் பார்த்துக்கொண்டு விலையைச் சொல்லுங்கோ என்ன விலையைச் சொல்ல? நமணனின் கேள்வி மாலினிக்கு எரிச்சலைத் தர இரண்டாயிரம் என்று சொல்லுங்கோ. நமணன் சிறு குழப்பத்துடன் கோழியின் இரண்டு கால்களையும் கட்டி பையினுள் தூக்கிப் போடும்போது கோழியின் கனம் திருப்தியைத் தந்தது.

இருந்தும் கோழியை முதலில் விட்டுவிட்டு சந்தை நிலைமையை பார்க்க மோட்டார் சைக்கிளில் சென்றான்.

சந்தைக்குள் சென்றவன் கோழியிறைச்சி கடைக்கருகில் சென்று நோட்டம் விட்டான், "என்ன தம்பி கோழி இறைச்சி வேணுமா?" இறைச்சிக்கடைக்கு பக்கத்து கடைக்காரர் கேட்டார்.

நமணனின் மௌனத்தை கண்ட கடைக்காரர் இறைச்சி விக்கிறவர் தேத்தண்ணி குடிக்கப் போய்விட்டார். எவ்வளவு என்று சொல்லும் நான் தருகின்றேன் என தன்னிலை விளக்கம் கொடுக்க நமணினின் தலை ஒரு சரிவாக உயர்ந்து கொள்ள கண்கள் அலட்சியத்தை வீச "இல்லை வெள்ளடியன் கோழி ஒன்று விற்கவேணும் அதுதான்" என்றான் அலட்சியமாக.

வெள்ளடியனோ? தம்பி எவ்வளவு சொல்லுகிறாய் பக்கத்து கடைக்காரர் பாசமாய் கேட்க நமணன் பெருமையுடன் இரண்டாயிரம் என்றான் குறும்பன் என்றான். சரி கொண்டுவாரும் இறைச்சிக்கடைக்கு போக முதல் என்னட்ட காட்டும் என்றார் பக்கத்துக் கடைக்காரர்.

நமணன் மிகவேகமாக வீடு சென்று மீண்டும் கோழியுடன் வந்து மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே, பக்கத்து கடைக்காரருக்கு கைகையால் கோழி கொண்டுவந்த பையைக் காட்ட அவரும் கண்ணசைவின் அர்த்தம் புரிந்து விரைந்து வந்து பார்த்தார். கோழியைப் பார்த்தவர் மீண்டும் தன் கடைக்குப் பின்னால் சென்று ஒரு சிறிய கோழியை தூக்கிவந்தார்.

அதைப் பார்த்தவுடன் நமணனின் தலை சிறிது தாழ தன்னையறியாமலே மோட்டார் சைக்கிளை விட்டிறங்கியிருந்தான். தம்பி இதைத்தான் நாங்கள் வெள்ளடியன் கோழி என்று சொல்லுகிறனாங்கள். உதைக் கொண்டு வந்து வெள்ளடியன் என்று சொல்லுகின்றீர். நமணனுக்கு அவரது கோழியின் பருமனைப் பார்த்ததும் தனது கோழி அதன் குஞ்சுக் கோழிபோல் இருப்பதாகத் தோன்றியது. இருந்தும் "அண்ணை இது வடமராட்சி கலப்பு வெள்ளடியன் அண்ணை" என்றான்.

ஆனால் அவனோ அதைக்கவனியாமல் இறைச்சிக் கடைக்காரனை விசிலடித்துக் கூப்பிட்டுவிட்டு தன்பாட்டில் போய்விட்டான். இதனால் நமணனின் கௌரவம் சிறிது பாதிக்கப்பட்டதாய் நமணன் உணர இறைச்சிக்கடைக் காரனிடம் "அண்ணை கலப்பு வெள்ளடியன் இரண்டாயிரம் என்றால் தருவன்" என்றான்.


பையைத் தூக்கிப்பார்த்த கடைக்காரனுக்கு கோழியின் கனம் திருப்தியைத் தர தலையை ஆட்டியவாறே தம்பி கழிச்சல் பீச்சல் வருத்தம் ஏதாவது என்று இழுத்தவனை இடைமறித்த நமணன் "ஒரு வருத்தமும் இல்லாத வீட்டுக்கோழி இரண்டாயிரம் என்றால் எடுங்கோ இல்லாட்டி விடுங்கோ" என்றான்.

"ஆயிரத்து ஐந்நூறு என்றால் தாங்கோ தம்பி என்றவனை இடைமறித்து வேண்டாம் அண்ணை நான் வேற இடத்தில விற்கிறன் என்று கிளம்பி கோழிப் பண்ணை பக்கமாய் என்று சென்றான்.

அங்கிருந்தவர்களும் அதே விலையைக் கேட்க தளர்ந்து போன நமணன் மீன்சந்தையில் மீனை வேண்டிக்கொண்டு கோழியையும் வீட்டுக்கு கொண்டு போவோம் என்று நினைத்தவாறு பேர்ஸைப் பார்த்தான். வெறும் நூறு ரூபா மட்டும் தான் இருந்தது. ஆக கோழியை விற்றால் தான் மீன்குழம்பும் என்று யோசித் தவாறு மீன்சந்தையை நோக் கிச் செலுத்தினான் மோட்டார் சைக்கிளை. மீன்சந்தையில் கோழிப்பையுடன் அநாதரவாக நின்ற நமணனை மீன் வெட்டிக் கொடுப்பவர் "என்ன தம்பி இன்றைக்கு கோழியே?" என்றார். நமணன் அவசர அவசரமாக இது விக்கிறதுக்கு என்றான். பார்ப்பம் கோழியை என்று வேண்டிப்பார்த்தவர் அருகில் கொஞ்சம் வெள்ளை யும் சொள்ளையுமாக நின்றவ ரிடம் "ஐயா நாட்டுக்கோழிக்கு அலைஞ்சியள். இஞ்ச தம்பி நல்ல வெள்ளடியன் கோழியோட நிக்குது. பார்த்து வேண்டுங்கோவன்" என்றார்.

அடப்பாவி திரும்பவும் வெள்ளடியன் என்று சொல்லி என்னைத் தலைகுனிய வைக் கப் போகின்றானே இவன் என்று நமணன் யோசித்தவாறு இருகக..

தம்பி இது வெள்ளடியன் கோழிதானே? வெள்ளையும் சொள்ளையும் வெள்ளந்தியாக கேட்டார். இப்போது நமணனின் தலை ஒரு பக்கமாக சாய்ந்து உயர்ந்து அலட்சியமாக ஆட்டியது. ஆடொன்று சிக்கிட்டுது விடப்படாது மனது யோசித்துக் கொண்டது விலை கேட்டது வெள்ளையும் சொள்ளையும்.



"இரண்டாயிரம்" நமணன் "தம்பி பார்த்துக்குடு" மீன் வெட்டுபவர். சரி இவரும் என்னை மாதிரியே வெள்ளந்தியா இருக்கின்றானே! என்று மனதுள் யோசித்தவாறே உங்களுக்கு என்ற படியால் ஆயிரத்து எண்ணூறு, ஆயிரத்து எழுநூறு என்றால் தாங்கோ தம்பி.

இவரிட்டையும் என்னட்டம் நூறு ரூபா மட்டும் இருக்கிற மாதிரி, ஆயிரத்து எழுநூறு தான் இருக்கோ? பாவம் என்று நினைத்தவாறு தன் சந்தோசத்தையும் வெளிக்காட்டாதவாறு வெள்ளடியனை இடது கையால் கொடுத்து வலது கையால் காசை வேண்டிக் கொண்ட நமணனின் நாக்கில் நீரூர மீன் வேண்டுவதற்கு சந்தைக்குள் சென்றான்.

மாணிப்பாய் சுதன்

# அம்மாவும் அம்புலன்சிலும் சிம்மராசி

## வைத்தியசாலை முதல் சமாதி வரை










1987 டிசெம்பர் 24இல் மறைந்த எம்.ஜி.ஆரின் உடல் ராஜாஜி ஹோலில் வைக்கப்பட்டிருந்தது. உடலுக்கு அருகே தலை மாட்டில் அப்போது நின்று கொண்டிருந்த ஜெயலலிதா, 29 ஆண்டுகள் கழித்து அதே ராஜாஜி ஹோலில் சடலமாக வைக்கப்பட்டிருந்தார். இராணுவ வண்டியில் எம்.ஜி.ஆர். உடல் ஏற்றப்பட்ட போது அதில் ஏற முயன்ற ஜெயலலிதா கீழே தள்ளப்பட்ட போதுதான் அவரின் அரசியல் அத்தியாயம் தொடங்கியது. அதே போன்றதொரு இராணுவ வாகனத்தில் ஜெயலலிதாவின் உடல் இப்போது ஏற்றப்பட்டது. அன்று எம்.ஜி.ஆருக்காக அஞ்சலி செலுத்த வந்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. இன்று அவரது மகன் ராகுல் காந்தி ஜெயலலிதாவுக்கு அஞ்சலி செலுத்த வந்து போனார். 29 ஆண்டுகளுக்கு முன்பு எம்.ஜி.ஆர். மறைவின்போது நடந்த சம்பவங்கள் ஜெயலலிதா மறைவின்போது மீள் சுழற்சியாகின.

TN 09 BE 5969 என்ற பதிவு எண் கொண்ட Toyota Land Cruiser LC 200 மொடல் காரைத்தான் ஜெயலலிதா பயன்படுத்தி வந்தார். செப்டெம்பர் 22 ஆம் திகதி காலையில் கோட்டைக்கு வந்தபோதுகூட அந்த காரில்தான் வந்தார். டிசெம்பர் 5 ஆம் திகதி இரவு TN 11 S 2289 என்கிற பதிவு எண் கொண்ட Flying Squad Redefining Care என்கிற அம்புலன்ஸில்தான் ஜெயலலிதாவின் உடல் அப்பலோவில் இருந்து போயஸ் கார்டனுக்கு எடுத்து வரப்பட்டது. சிம்ம ராசிக்கு சொந்தக்காரர் ஜெயலலிதா. அவரது உடல் கொண்டு வரப்பட்ட அம்புலன்ஸிலும் 'சிம்மம்' இருந்ததுதான் ஆச்சர்யம். சிம்மம் என்கிற ஆங்கில வார்த்தை அந்த அம்புலன்ஸின் முகப்பில் எழுதப்பட்டு சிங்கத்தின் படமும் பொறிக்கப்பட்டிருந்தது. சிறகுகளோடு இருக்கும் சிங்கத்தின் படங்கள் அம்புலன்ஸின் பக்கவாட்டிலும் பொறிக்கப்பட்டிருந்தன. இது திட்டமிடப்பட்டதா? எதேச்சையாக அரங்கேறியதா? தெரியவில்லை.

முடிக்கு டை அடிக்கும் பழக்கம் உடையவர் ஜெயலலிதா. 75 நாட்கள் சிகிச்சையில் இருந்ததால் அவரின் தலைமுடி வெள்ளையாகி இருந்தது. அதனால் அவரின் முடிக்கு டை அடித்தார்களாம். சிகிச்சையில் இருந்தபோது கையில் மணிக்கூடு இல்லை. ஆனால், இறந்தபிறகு மணிக்கூடு மாட்டப்பட்டிருந்தது. இரண்டு கைவிரல்களிலும் மோதிரங்களும் மாட்டப்பட்டிருந்தன. கழுத்தில் தங்க நகை அணியும் பழக்கம் இல்லை. ஆனால், அவரது உடலில் தங்க சங்கிலியை மாட்டியிருந்தார்கள். ஜெயலலிதாவுக்குப் பிடித்த நிறம் பச்சை. அதே நிறத்தில் மெரூன் பார்டர் போட்ட பட்டுப் புடைவையை சுற்றியிருக்கிறார்கள். மிகவும் போராடித்தான் புடைவையைக் கட்டியிருக்கிறார்கள். இந்த விடயங்கள் எல்லாமே கார்டனில் நடந்தன.

போயஸ் கார்டனில் இருந்து ராஜாஜி ஹோலுக்கு ஜெயலலிதாவின் உடல் கொண்டு வரப்பட்டபோது கட்சிக் கொடிதான் போர்த்தப்பட்டிருந்தது. பிறகு, கட்சிக் கொடியை எடுத்துவிட்டு தேசியக் கொடி போர்த்தப்பட்டது. உடல் வைக்கப்பட்ட பிறகு அவரது வாய் இலேசாகத் திறக்க ஆரம்பித்தது. அருகில் இருந்த இளவரசின் மகள் கிருஷ்ணப் ப்ரியாவும் சசிகலாவும் தாடையைப் பிடித்து வாயை மூட முயன்றனர். ஆனால், சில விநாடிகளிலேயே மீண்டும் வாய் திறந்தது. பற்கள் வெளியே தெரிய... தொடர்ந்து வாயை மூடுவதற்கு முயன்று தோற்றுப் போனார்கள். கடைசியில் தாடையைச் சுற்றி வெள்ளைத் துணியைக் கட்டி வாயை மூடினார்கள். ராஜாஜி ஹோலுக்கு உடல் கொண்டுவரப்பட்ட போது எடுக்கப்பட்ட போட்டோக்களில் அந்த வெள்ளைத் துணி இருக்காது.

உடலின் தலைமாட்டில் சசிகலா நின்று ஜெயலலிதாவின் முகத்தை சரி செய்த படியே இருந்தார்.

பிரதமர் மோடி வந்தால் சசிகலாவை சந்திப்பார் எனத் தெரிந்து அதற்கு வசதியாக சசிகலாவை கொஞ்சம் தள்ளி நிற்க வைத்தார் அவரது சகோதரர் திவாகரன். மறக்காமல் அவரும் பக்கத்திலேயே நின்றுகொண்டார். மோடி வந்தபோது இரண்டு பேர் பதறினார்கள் ஒருவர் மத்திய அமைச்சர் வெங்கய்ய நாயுடு. இன்னொருவர் பி.ஜே.பி. ராஜ்யசபா எம்.பி.யான இல.கணேசன். சசிகலாவை மோடிக்கு அறிமுகம் செய்து வைப்பதிலேயே குறியாக இருந்தார் வெங்கய்யா நாயுடு. சசிகலாவின் தலையை தொட்டு மோடி ஆறுதல் சொன்னார். அதன்பிறகுதான் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தின் பக்கம் பார்வையைத் திருப்பினார். கட்டித் தழுவி அவருக்கும் ஆறுதல் சொன்னார் மோடி. புறப்படும் போது மீண்டும் ஜெயலலிதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தியபோது அருகில் நின்ற இல.கணேசன் அவரைப் பிடித்து எம்.நடராஜனுக்கு அறிமுகம் செய்து வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். எம்.நடராஜனுக்கு வணக்கம் வைத்துவிட்டு காதில் ஏதோ சொன்னார்.

அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் எம்.பி.க்களும் அ.தி.மு.க. நிர்வாகிகளும் ராஜாஜி ஹோலின் நீண்ட படிக்கட்டுகளில் உட்கார்ந்திருக்க... சாதாரண கவுன்சிலர் சீட்டுக்கு மனு போட்ட தேவா, ஜெயலலிதாவின் உடலுக்கு அருகில் நின்று கொண்டிருந்தார். சசிகலா குடும்பத்தினரோடு தேவாவுக்கு நெருக்கம் அதிகம். அதனால் ஸ்பெஷல் மரியாதை.

அஞ்சலி செலுத்த வந்தவர்கள் உடலுக்கு வணக்கம் வைத்து சில விநாடிகள்கூட அந்த இடத்தில் நிற்கவிடாமல் அனுப்பிக் கொண்டே இருந்தார்கள். பலரையும் வலுக்கட்டாயமாகப் பிடித்துத் தள்ளினார்கள்.

இதில் நீல நிறச்சட்டை அணிந்திருந்த ஒருவர் கொஞ்சம் ஆக்ரோஷமாகவே செயற்பட்டார். அவர் இளவரசியின் மருமகன் ராஜராஜன்.

75 நாட்களும் அப்பலோவை சுற்றியே அரசியல் அரங்கேறிக் கொண்டிருந்தது. "பேசுகிறார்... எழுந்து நடந்தார்... கிச்சடி சாப்பிட்டார்" என அப்பலோவில் இருந்து வந்த செய்திகள் பல ரகம். ஜெயலலிதாவின் உயிர் பிரிந்த பிறகும் அப்பலோ செய்திகள் அடங்கிப் போகாமல் ஜெயலலிதாவின் சமாதி வரையில் தொடர்ந்தது. ஜெயலலிதாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட மறுநாள் சமாதியைச் சுற்றி பேரிகார்டுகளை அடுக்கி பாதுகாப்பு வளையத்தைப் போட்டிருந்தது பொலிஸ். அந்த பேரிகார்டுகளில் ஒன்றில் அப்பலோ விளம்பரம் பளிச்சிட்டது. அதில் இருந்த வாசகம் Save Time Save Lives!



ஆம்புலன்ஸில் சிம்மம்

ஜூனியர் விகடன்

# “ஹிட்லரை படித்தேன்... ஜெயித்தேன்”

# செஸ் ஜாம்பவான் மேக்னஸ் கார்ல்சன்

சென்னையில் 2013 இல் உலக செஸ் சம்பியன்ஷிப் நடந்தபோது அரங்கேறிய சம்பவம் அது. நோர்வேயைச் சேர்ந்த மேக்னஸ் கார்ல்சன், இந்தியாவின் செஸ் ஜாம்பவான் விஸ்வநாதன் ஆனந்த் இருவருக்கும் யார் சம்பியன் என்பதில் போட்டி. ஆனந்தின் அனுபவம் கார்ல்சன் வயது (அப்போது 23). எனவே உலகெங்கும் நூறு கோடி பேர், இந்த போட்டியை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். இறுதியாக ஆனந்தை தோற்கடித்து, ஜெயலலிதாவிடம் வேர்ல்ட் சம்பியன் பட்டத்தை வாங்கி விட்டு சலாம் போட்டு சென்றான், அந்த பொடியன்.

அடுத்த ஆண்டு அதே நவம்பர் மாதம் ரஷ்யாவின் சோச்சியில் வேர்ல்ட் சம்பியன்ஷிப் இந்தமுறையும் ஆனந்த் - கார்ல்சன் மோதல். உலகமே எதிர்பார்த்தது. ஆனந்த் பதிலடி கொடுப்பார் என்று. இந்த முறையும் ஆனந்த் பணிந்தார். இரண்டாவது முறையாக கார்ல்சன் சம்பியன். ஆனந்த் இனி ஓய்வுபெறலாம் என்றனர். எங்க வயசுல ந (ஆனந்த்) பேட்டைக்காரன். இப்ப உள்ள பசங்களுக்கு அவன் (கார்ல்சன்) பேட்டைக்காரன்' என, முன்னாள் ஜாம்பவான்கள் லெக்சர் எடுத்தனர். செஸ் என்பது உடல் சார்ந்த விளையாட்டு அல்ல. அறிவு சார்ந்தது. அறிவுக்கு ஏது ஓய்வு? ஆனந்த் இன்னமும் ஆடுகிறார்.

கார்ல்சனும் ஆடுகிறார். எப்படி... இன்னும் நேர்த்தியாக, இன்னும் ஸ்மார்ட்டாக... சமீபத்தில் நியூயோர்க்கில் நடந்து முடிந்த 2016 வேர்ல்ட் சம்பியன்ஷிப்பில், மீண்டும் கார்ல்சன் சம்பியன். தொடர்ந்து மூன்று முறை வேர்ல்ட் சம்பியன் என்பது கூடுதல் கௌரவம். இந்தமுறை தன்னை விட ஒரு வயது மட்டுமே மூத்த ரஷ்யாவின் செர்ஜி கர்ஜகினை வீழ்த்தியுள்ளார். ரெகுலர் கேம் 6-6 என முடிந்ததால் டை பிரேக்கரில் 3-1 என எளிதாக ஜெயித்தார்.

கர்ஜகினும் லேசுப்பட்டவர் அல்ல. இளவயதிலேயே கிராண்ட் மாஸ்டர் ஆனவர். புடின் உட்பட ஒட்டுமொத்த ரஷ்யாவும் அவருக்கு சப்போர்ட்டாக இருந்தது. தனிப்பட்ட முறையிலும், நாட்டுக்காகவும் இதில் நான் வென்றாக வேண்டும்' என போட்டிக்கு முன் பேட்டி கொடுத்திருந்தார். வெற்றிக்கு ரொம்பவே மெனக்கிட்டிருந்தார். அந்த உழைப்பு போட்டியில் தெரிந்தது. ஆனந்தை போல கர்ஜகினை கார்ல்சன் எளிதில் தோற்கடிக்க முடியவில்லை. இதுபோதும் கர்ஜகின் யவர் என்னவென்று அறிய.

ரஷ்யா எப்போதுமே சதுரங்கத்தில் கிங். வேர்ல்ட் சம்பியன்ஷிப்பில் ஜெயிப்பது அவர்களுக்கு மானப்பிரச்சினை. தன் நாட்டைச் சேர்ந்த ஒருவர் சம்பியன்ஷிப்பில் ஆடுகிறார் எனில், எதிர்த்து ஆடும் வீரர் சார்ந்த நாடு மீது ரஷ்யா மறைமுகமாக ஒரு யுத்தமே நடத்தும். 1972 வேர்ல்ட் சம்பியன்ஷிப்பில் அப்படித்தான் நடந்தது. அப்போது யதார்த்தமாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையே நிஜமான பனிப்போரும் நடந்தது. சதுரங்கத்தில் நாம் தோற்கக் கூடாது' என ரஷ்யா கங்கணம் கட்டியது. அரசியல் காரணங்களுக்காகத்தான் அந்த மோதல் இவ்வளவு முக்கியத்துவம் பெற்றதே தவிர, உண்மையிலேயே ஜாம்பவான்கள் மோதினார்கள் என்பதால் அல்ல' என பின்னாளில் சொன்னார் ரஷ்யாவைச் சேர்ந்த முன்னாள் சம்பியன் கேரி காஸ்பரோவ்.

அமெரிக்காவின் பாபி ஃபிஷர், சோவியத் யூனியனின் பாரிஸ் ஸ்பாஸ்கி மோதிய 1972 வேர்ல்ட் செஸ் சம்பியன்ஷிப் தொடர், இந்த நூற்றாண்டின் சிறந்த போட்டியாக கருதப்பட்டது. இந்த யுத்தத்தில் ரஷ்யாவை தோற்கடித்தது அமெரிக்கா. ஆம், டிஃபண்டிங் சம்பியன் ஸ்பாஸ்கியை தோற்கடித்து, வரலாறு படைத்தார் பாபி ஃபிஷர். தன்னை பொடியன்' என சொன்ன ஸ்பாஸ்கிக்கு தான் யாரென நிரூபித்தார். கூடவே, செஸ்ஸில் அது வரை கொடிகட்டிப் பறந்த சோவியத் யூனியன் ராஜாங்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

கிட்டத்தட்ட, கார்ல்சன் - கர்ஜகன் மோதலும் இன்னுமொரு பனிப்போர் போலத்தான் இருந்தது. தனிநபர் மோதல் என்பதைக் கடந்து நோர்வே - ரஷ்யா மோதலாகத்தான் 2016 வேர்ல்ட் சம்பியன்ஷிப் பார்க்கப்பட்டது. 1972 இற்குப் பின் இந்த போட்டியை எல்லை கடந்து ஒட்டுமொத்த செஸ் உலகமும் எதிர்பார்த்திருந்தது. காரணம், எந்நேரத்திலும் நோர்வே மீது தாக்குவதற்கு தயாராக பால்டிக் கடல் அருகே ஏவுகணைகளை நிறுத்தி இருந்தது ரஷ்யா. இதற்கு நேடோவில் (North Atlantic Treaty Organization) உள்ள நோர்வேயைச் சேர்ந்த உயரதிகாரி, இது பயங்கரமான மிரட்டல்' என கண்டித்தார். கணனியில் இரகசியமாக சேகரித்து வைத்திருக்கும் ஆட்டம் குறித்த நுணுக்கங்களை, ரஷ்யா ஹக் செய்ய வாய்ப்பு இருப்பதால், மைக்ரோசாஃப்டிடம் உதவி கோரி இருந்தார் கார்ல்சன். இந்த மோதலை ரஷ்யர்கள் எவ்வளவு சீரியஸாக கருதினர் என்பதற்கு இதுவே சான்று.

உலகம் முழுவதும் 100 கோடி பேர் ஒன்லைனில் பார்த்த இந்த போட்டியில் வென்று மீண்டும் ஒரு முறை ரஷ்யாவின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் கார்ல்சன். அதனால்தான் கார்ல்சனை கொண்டாடுகிறது செஸ் உலகம். கர்ஜகனுக்கு ஃபுடின் பக்க பலமாக இருப்பார் என எனக்குத் தெரியும். அதை சமாளிக்கும் வழிகளையும் நான் அறிவேன்' என நம்பிக்கையுடன் சொல்லி இருந்த கார்ல்சன், இந்த தொடரில் 9 ஆவது கேம் வரை முன்னிலை வகிக்கவில்லை. என்ன ஆச்சு 'உங்களுக்கு' என கேட்டதற்கு இன்னும் மூன்று கேம் இருக்கு. எப்படி ஜெயிக்கிறேன்னு மட்டும் பாருங்க' என, கெத்தாக பதில் சொன்னார்.

பொதுவாக ஓய்வு நேரத்தில் செஸ் குறித்து யோசிக்கமாட்டேன். புத்தகம் படிப்பேன். சமீபத்தில் ஹிட்லர் பற்றிய புத்தகம் படித்தேன். வெற்றிகளுக்கும் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும் ஹிட்லர் கையாண்ட வழிமுறைகள் என்னை பிரமிக்க வைத்தது. ஹிட்லரைப் படித்த பின், நெப்போலியனை ஆழ்ந்து படித்தேன். அவர் என் சின்ன வயது ஹீரோ. அவரைப் போல, ஒரு குறிப்பிட்ட காலம் வரை வியூகங்கள் வகுப்பதில் உச்சத்தில் இருந்த வேறு ஒருவரை நான் பார்த்ததே இல்லை' என முன்பு சொல்லி இருந்தார் கார்ல்சன். ஆக, அவர் சம்பியன் ஆனதில் ஆச்சரியமில்லை.


ஆனந்தை தோற்கடித்ததை விட கர்ஜகனை தோற்கடித்ததுதான் கார்லசன் செஸ் வாழ்வின் உச்சம். ஏனெனில் இருவரும் கணனியில் பிளான் போடுபவர்கள். சம வயதினர் என்பதும் காரணமாக இருக்கலாம். அதைவிட வேர்ல்ட் சம்பியன் ஷிப்பை கார்ல்சன், ஒரு உள்ளூர் டோர்னமென்ட் போலத்தான் எடுத்துக் கொண்டார். சீரியஸாக எடுத்திருந்தால் இவ்வளவு சிரமம் இருந்திருக்காது என்கின்றனர் செஸ் நிபுணர்கள்.

கார்ல்சனுக்கு வாழ்த்துகள். அவர் இந்த போட்டிக்கு சீரியஸாக தயாராகமால், செஸ் கடவுள் கெய்சாவின் கோபத்துக்குள் உள்ளானார். நல்ல வேளையாக அந்த கடவுள் கர்ஜகன் பக்கம் செல்வதை கார்ல்சன் அனுமதிக்கவில்லை' என காஸ்பரோ டுவீட் செய்திருந்தார். அசால்ட்டாக டீல் செய்தார் என்பதற்கு மற்றொரு உதாரணம். கார்ல்சன் ஆரம்ப சுற்றில் Trompowsky Attack மூலம் ஆட்டத்தைத் தொடங்கினார். Trompowsky Attack என்பது டேஞ்சரான மூவ். அதை வேர்ல்ட் சம்பியன்ஷிப்பில் யாரும் பரீட்சித்து பார்க்கமாட்டார்கள். கார்ல்சன் அதைச் செய்தார் எனில் எவ்வளவு அஜாக்கிரதை.

அதேநேரத்தில் கார்ல்சன் செல்ப்மென்ட் பேர்வழியும் கூட. ஒரு போட்டியின்போது, டால் - போட்வினிக் இருவரும் 1960 வேர்ல்ட் சம்பியன்ஷிப் தொடரில் மோதியது தொடர்பான புத்தகத்தில் என்னைக் கையெழுத்திடச் சொன்னார்கள். நான் மறுத்து விட்டேன். ஏனெனில், டால் அந்த முறை சம்பியன் ஆனார். அப்போது அவர் வயது 23. அதன் பின் அவரால் இன்னொரு பட்டம் வெல்ல முடியவே இல்லை. ஏனெனில் தோல்வி எனக்குப் பிடிக்காது.' என்றார் கார்ல்சன்.

எப்படி கிரிக்கெட்டில் சச்சின் சாதனைகளை முறியடிக்க விராட் கோலிக்கு மட்டுமே திறமை இருக்கிறது என நினைக்கிறோமோ அதேபோல ஐந்துமுறை வேர்ல்ட் சம்பியன் பட்டம் வென்ற ஆனந்தை மிஞ்சவும் கார்ல்சனுக்கு மட்டுமே தகுதி இருக்கிறது. இப்போது கார்ல்சன் வயது 26. எப்படிப் பார்த்தாலும் இன்னும் 20 ஆண்டுகள் செஸ் அரங்கில் கோலோச்சுவார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வேர்ல்ட் சம்பியன்ஷிப் நடப்பது கூடுதல் போனஸ். தவிர, முந்தைய தலைமுறை ஆனந்தையும் தோற்கடித்து விட்டார், இந்த தலைமுறை கர்ஜகனையும் வீழ்த்தி விட்டார் என்பதால், அடுத்த தலைமுறை வீரனையும் முறியடிப்பார் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியாவுக்கு ஆனந்த் போல, சுவிட்சர்லாந்துக்கு ரோஜர் ஃபெடரர் போல, போர்த்துக்கலுக்கு கிறிஸ்டியானோ ரொனால்டோ போல, நோர்வேக்கு மேக்னஸ் கார்ல்சன். நோர்வே என்றதும் கார்ல்சன் பெயரும், கார்ல்சன் என்றதும் நோர்வேயின் பெயரும் நினைவுக்கு வரும். இதைவிட வேறென்ன பெருமை வேண்டும். (கு)









# நெஞ்சு பொறுக்குதில்லையே!



மழை கொட்டோ கொட்டெனக் கொட்டிக் கொண்டிருந்தது. நான் பிறந்து வளர்ந்த காலத்தில இப்படியொரு குளிரக் கண்டதேயில்லை. குளிரெண்டா பல்லும் பல்லும் கிடுகிடென்று அடிக்கும். இந்தக் கறுமாந்திரக் குளிர் பல்லையும் பல்லையும் எங்க அடிக்க விட்டுது. உள்ளுக்குள்ள ஒரு றெயின் கோர்ட். அதுக்குமேல இன்னொரு றெயின் கோர்ட் போட்டுக் கொண்டுதான் மோட்டார் சைக்கிள் ஓடுறன். என்ர இதயத்துடிப்பு நிண்டுடும் போல இருந்தது.

நல்ல மழை கொட்டாட்டாலும் ஓரளவுக்கு ஆள நனைக்கிற மழை பெய்து கொண்டுதானிருக்குது. ஆனா குளிர் ஆள முடிக்கிற அளவில இருக்கு. இனியும் தாமதித்தா உயிர் போயிடும் என்ற நினைப்போட கே.கே.எஸ். றோட்டில ஏறினன்.

ஒரு ரீ குடிச் சாத்தான் தெம்பு கிடைக்கும். குளிரையும் சமாளிக்கலாம் எண்டு அந்த ரீக் கடைப் பக்கம் மோட்டார் சைக்கிளை நிப்பாட்டிட்டு உள்ள போனா ரீ குடிக்கிறதுக்குப் பெரிய சவட்டம். அப்பநினைச்சன் குளிரின்ர கொடுமையை.

சரி எண்டு போய் ஒரு காலியாக் கிடந்த மேசையில் இருந்தன். ஒருத்தன் வந்து நான் இருந்த மேசையைத் துடைச்சதை அவதானிச்சன்.

"தம்பி ஒரு ரீ" எனச் சொல்லிவிட்டு ரீக்காய் காத்திருந்தேன்.

நீண்ட நேரமாகியும் ரீ வராததால எனக்குச் சற்று எரிச்சல் வந்திச்சுது. கடையில நின்ற இன்னொருவனை அழைத்து "தம்பி ரீ ஓடர் பண்ணி அரை மணித்தியாலம் ஆச்சடா" என்றேன்.

''சேருக்கு இன்னும் ரீ கொடுக்கல. யார் ஓடர் எடுத்தது?'' என்ற அந்தக் குரலை எங்கோ கேட்ட ஞாபகம். திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தேன். இந்தக் குரல், இந்த உற்சாகம், இந்த ஆளுமை எனக்கு நன்கு பரிச்சயமான அந்த அவன்... யாரிவன்? எனக்குள் எழுந்த கேள்விகள் அவையீடன்னொருகேவந்தவன் ''சேர் இப்பவும் அந்தப் பள்ளிக்கூடம் தானா?'' என்றான். அப்போதுதான் அவனை எனக்கு நினைவுக்கு வந்தது.

வகுப்பில் முதல் மாணவன். நன்றாகப் படிப்பான். நாடகம், பாட்டு, நடனம், பேச்சு, பட்டிமண்டபம், கவியரங்கம் என அனைத்திலும் கலக்கும் கலையரசனே அவன்.

"டேய் கலையரசன் என்னடா இது" என்றேன். "ஒண்டுமில்ல சேர். திடீரென்று அப்பா செத்திட்டார். அப்பான்ர கூலி வேலையில சீவிச்சனாங்கள். அவர் இல்லையெண்ட அந்தச் சுமையை நான் ஏத்துட்டன். மூண்டு தங்கச்சியாக்களின்ட படிப்பை யோசிச்சுப் பார்த்தன். எனக்குப் படிப்புத் தேவைதானா? என்ற கேள்வி எனக்குள்ள வந்திட்டுது''

''இங்க கடையில 800 ரூபா சம்பளம். வீட்டுச் சீவியத்தோட தங்கச்சியாக்களப் படிப்பிக்கிறன்'' என்றவனை ''தம்பி ஒரு ரீ'' என்று அடுத்த மேசை நபர் கூப்பிட அதே உற்சாகத்துடன் நடந்தான் கலையரசன்.

எனக்கோ ரீ குடிக்க மனம் வரவில்லை. எழுந்தேன். காசைக் கொடுத்து விட்டு வெளியே வந்தேன். க.பொ.த. சாதாரண தர பரீட்சை முடித்த மாணவர்கள் பரீட்சையில் வந்த கேள்விகளுக்குரிய பதில்களை விவாதித்துக் கொண்டு சென்றார்கள்.

மழைநின்றுவிட்டது. என் மனம்... வீதியால் என் மோட்டார் சைக்கிள் பயணிக்கிறது. கலையரசனின் விதி என்ன என்ற கேள்விகள் என்னைக் குடைந்து கொண்டேயிருந்தன.

**- அபிமன்யு-**

## காலத்தால் அழியாத கானங்கள் ...

| | |
|---|---|
| பாடல்:- | அம்மா என்றால் அன்பு |
| திரைப்படம்:- | அடிமைப் பெண் |
| பாடலாசிரியர்:- | கவிஞர் வாலி |
| இசை:- | கே.வி. மஹாதேவன் |
| பாடியவர்:- | ஜெ.ஜெயலலிதா |




அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி அவரே உலகில் தெய்வம்
அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி அவரே உலகில் தெய்வம்
அன்னையைப் பிள்ளை பிள்ளையை அன்னை
அம்மா என்றே அழைப்பதுண்டு
அன்னையைப் பிள்ளை பிள்ளையை அன்னை
அம்மா என்றே அழைப்பதுண்டு
அன்பின் இரக்கம் பண்பின் ஒழுக்கம்
அம்மா என்றொரு சொல்லில் உண்டு
அன்பின் இரக்கம் பண்பின் ஒழுக்கம்
அம்மா என்றொரு சொல்லில் உண்டு

பத்துத் திங்கள் மடி சுமப்பாள் பிள்ளை
பெற்றதும் துன்பத்தை மறப்பாள்
பத்துத் திங்கள் மடி சுமப்பாள் பிள்ளை
பெற்றதும் துன்பத்தை மறப்பாள்
பத்தியம் இருந்து காப்பாள் தன்
ரத்தத்தைப் பாலாக்கிக் கொடுப்பாள்
அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி அவரே உலகில் தெய்வம்

இயற்கை கொடுக்கும் செல்வத்தை எல்லாம்
பொதுவாய் வைத்திட வேண்டும்
இயற்கை கொடுக்கும் செல்வத்தை எல்லாம்
பொதுவாய் வைத்திட வேண்டும்
இல்லாதவர்க்கும் இருப்பவர் தமக்கும்
பகிர்ந்தே கொடுத்திட வேண்டும்
இல்லாதவர்க்கும் இருப்பவர் தமக்கும்
பகிர்ந்தே கொடுத்திட வேண்டும்

ஒருவருக்காக மழையில்லை ஒருவருக்காக நிலவில்லை
ஒருவருக்காக மழையில்லை ஒருவருக்காக நிலவில்லை
வருவதெல்லாம் அனைவருக்கும் வகுத்தே வைத்தால் வழக்கில்லை
அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி அவரே உலகில் தெய்வம்

மொழியும் நாடும் முகத்துக்கு இரண்டு விழிகள் ஆகும் என்று
மொழியும் நாடும் முகத்துக்கு இரண்டு விழிகள் ஆகும் என்று
உணரும் போது உனக்கும் எனக்கும் நன்மை என்றும் உண்டு
உணரும் போது உனக்கும் எனக்கும் நன்மை என்றும் உண்டு
நாளும் உயிரில் உயர்வும் தாழ்வும் வகுத்து வைப்பது பாவம்
நாளும் உயிரில் உயர்வும் தாழ்வும் வகுத்து வைப்பது பாவம்
கருணை கொண்ட மனிதர் எல்லாம் கடவுள் வடிவம் ஆகும்
அம்மா என்றால் அன்பு அப்பா என்றால் அறிவு
ஆசான் என்றால் கல்வி அவரே உலகில் தெய்வம்

# கனவுகளும் பலன்களும்



சாவிக்கொத்து தன்னிடம் இருப்பது போலக்கனவு கண்டால் குடும்பத்தில் உறவு அதிகரிக்கும்.

தொழிலில் மேன்மை ஏற்படும். பொருள் வசதி அதிகரிக்கும். சாவிக்கொத்து காணாமல் போனதாக கனவு கண்டால் பலவிதக் கஷ்ட, நட்டங்களுக்கு ஆளாக நேரும். நம்பிக்கை மோசம் போவார்கள்.

ஈயக்கட்டியை உருக்குவது போலக்கனவு கண்டால் புதிய நகைகள் செய்யும் வாய்ப்பு ஏற்படும். வெறும் ஈயக்கட்டியைப் பார்த்தால் குடும்பத்தில் குழப்பமும் கலகமும் ஏற்படும். மணமானவர்கள் ஈயத்தைக் கனவில் கண்டால் பிரிவு ஏற்படும். செம்புத் தகடு, செம்புக்கட்டி, செம் புச்சிலை ஆகியவற்றைக் கனவில் கண்டால் பக்தி உண்டாகும். வாழ்க்கைப் பாதை சீர்படும்.

தங்கத்தைக் கனவில் கண்டால் நோய், நொடி உண்டாகும். வழக்குகள் ஏற்படும். சொத்துக்கள் களவு போகும். திகைக்க வைக்கும் சம்பவங்கள் நடக்கும். வியாபாரிகள் தங்கத்தைக் கனவில் கண்டால் முதலுக்கே மோசம் ஏற்படும்.

தங்கக்காசுகளைப் பிறருக்கு அளிப்பதாகக் கனவில் கண்டால் நண்பர்கள் அதிகமாவார்கள். பொற்காசுகளை வீசி எறிவதாகக் கனவு கண்டால் வீட்டில் களவு போகும். மண்ணோடு கலந்த பொன்னைக் கனவில் கண்டால் தரித்திர விமோசனம் ஏற்படும்.

வெள்ளியைக் கனவில் கண்டால் எடுத்த காரியம் வெற்றியடையும். வெள்ளி நாணயங்களைக் கனவில் கண்டால் நல்லது நடக்கும். வெள்ளிப் பாத்திரங்களைக் கனவில் கண்டால் தரித்திரம் ஏற்படும்.

வெண்கலப் பாத்திரத்தைக் கனவில் கண்டால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

### கனவில் ஆலயம் வந்தால்...

கனவில் ஆலயம் தோன்றுதல் மிகவும் நல்லது. அவ்வாறு கனவு காண்பவர் செய்யும் தொழில் வளர்ந்தோங்கும். தருமப்பணியால் புகழ் உண்டாகும்.

தெய்வத் திருவுருவம் இல்லாத ஆலயம் அல்லது பாழடைந்த ஆலயம் கனவில் தோன்றினால் மேற்கூறியதற்கு எதிரான பலன் உண்டாகும்.

ஆலயத்துக்குள் சென்று இறைவனை வழிபடுவது போன்று கனவு தோன்றினால் இறைவனருளால் எடுக்கும் காரியம் இனிது நிறைவேறி வாழ்வில் வளம் பெருகும்.

### கனவில் மரம், செடி, கொடிகள் வந்தால்...

துளசிச் செடியைக் கனவில் கண்டால் காரியங்கள் வெற்றி பெறும். புத்திர பாக்கியம் ஏற்படும். சந்தன மரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். உறவினர் உதவியால் மேன்மையடைவர். தொழிலில் இலாபம் உண்டாகும்.

பழச்செடிகளையோ அல்லது பழுத்துக் குலுங்கும் மரங்களையோ கனவில் கண்டால் பொருள் சேரும். புத்திரபாக்கியம் ஏற்படும். அதிலுள்ள பழங்களைப் பறிப்பதாகக் கனவு கண்டாலும் நல்லது நடக்கும்.

பழங்களைத் தனக்கு ஒருவர் கொடுப்பதாகவோ அல்லது தான் உண்பதாகவோ கனவு கண்டால் செய்யும் காரியம் வெற்றி பெறும்.

ஆலமரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் மேன்மை உண்டாகும். உறவினர்களால் மகிழ்ச்சியும் பொருள் இலாபமும் ஏற்படும்.

பூக்கள் நிறைந்த செடிகளைக் கனவில் கண்டால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். காய்கள் நிறைந்த செடிகளைக் கனவில் கண்டால் காரியத் தடையும் பொருள் விரயமும் ஏற்படும்.

துவரையைக் கனவில் கண்டால் பொருள் வரவு ஏற்படும். நோய்கள் குணமாகும்.

அரச மரத்தைக் கனவில் கண்டால் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தீரும். பொருள் இலாபமும் புத்திரபாக்கியமும் ஏற்படும். அரச மரத்தை வலம் வருவதாகக் கனவு கண்டாலும் இதே பலன்கள் ஏற்படும்.

கரும்புத் தோட்டத்தைக் கனவில் கண்டால் எதிர்காலம் இனிமையாக இருக்கும். கரும்பைத் தின்பது போலக் கனவு கண்டால் உங்களுடைய உழைப்புக்கு விரைவில் ஊதியம் கிடைக்கும். கரும்பு ஆலையைக் கனவில் கண்டால் குடும்பச்சுமை அதிகரிக்கும்.

முற்றிய நெற்கதிர்களைக் கனவில் கண்டால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். நெற்கதிரை அறுவடை செய்வது போலக் கனவு கண்டால் உங்களுடைய பணக்கார உறவினர் ஒருவர் விரைவில் மரணமடைவார். அவருடைய சொத்துக்கள் உங்களுக்கு வந்து சேரும்.

மரத்தை அறுப்பது போலக் கனவு கண்டால் தொழில் தொடங்குவதற்காகச் சொத்தை விற்கும் நிலை ஏற்படும். குடும்பத்தில் பாகப்பிரிவினை நடக்கும். வாழை மரத்தைக் கனவில் கண்டால் தரித்திரம் ஏற்படும்.

(அடுத்த வாரம் தொடரும்)

# சென்னை 28

### திரை விமர்சனம்



ஒரு சில இயக்குநர்கள் இப்படி படம் எடுத்தால் தான் ரசிகர்கள் அதிகம் ரசிப்பார்கள், அவர்கள் அந்த ரூட்டில் இருந்து கொஞ்சம் விலகினாலும் எப்போது மீண்டும் அந்த ரூட்டிற்கு வருவார்கள் என ஆவல் தோன்றும், அப்படித் தான் வந்த ஏரியாவிலேயே மீண்டும் களத்தில் இறங்கி 6 அடிக்க வந்துள்ளார் வெங்கட் பிரபு, 6 அடித்தாரா? பார்ப்போம்.

சென்னை-28 படத்தில் நடித்தவர்கள் அனைவரும் 10 வருடம் கழித்து காட்டுவது போல் அவர்கள் வாழ்க்கை தொடங்குகின்றது. படத்தின் ஆரம்பத்திலேயே ஜெய்யின் திருமண நிச்சயதார்த்தம் தேனியில் நடைபெறுகின்றது.

தேனிக்கு அனைத்து நண்பர்களும் குடும்பத்தோடு செல்ல, ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தேனி மாவட்டத்தில் வைபவ் நடத்தும் கிரிக்கெட் ரீமுடன் மோதுகிறார்கள். வைபவ் வெற்றி பெறுவதற்காக ஜெய்யை ஒரு பெண்ணுடன் இருப்பது போல் ஒரு புகைப்படத்தை ஏற்பாடு செய்து மிரட்டுகிறார்.

ஜெய்க்காக அந்த பைனல் மட்சில் தோற்றாலும், போட்டோ எப்படியோ லீக் ஆகி கல்யாணம் நின்றுவிடுகின்றது. அதைத் தொடர்ந்து ஜெய் திருமணம் என்ன ஆனது, மற்ற நண்பர்கள் குடும்பத்தினரிடம் எப்படி மாட்டி முழிக்கிறார்கள், இவர்கள் எல்லோரையும் மீண்டும் அதே கிரிக்கெட் எப்படி காப்பாற்றுகிறது என்பதை செம்ம ஜாலியாக கூறியிருக்கிறார் வெங்கட் பிரபு.

முதலில் இப்படி ஒரு கதைக் களத்தை தயார் செய்ததற்காகவே வெங்கட் பிரபுவை பாராட்டலாம், முழுக்க முழுக்க பசங்களுக்காக மட்டுமல்லாமல், முந்தைய பாகத்தைவிட பமிலி ஆடியன்ஸை மனதில் வைத்து சிறப்பாக திரைக்கதை அமைத்துள்ளார்.

அதிலும் தற்போது உள்ள மார்க்கெட்டிற்கு ஏற்றார் போல் ஜெய், சிவா, நிதின் சத்யா, விஜய் வசந்தை மிக அழகாக பயன்படுத்தியுள்ளார். அதிலும் சிவா வந்து நின்றாலே சிரிப்புச் சத்தம் வந்து விடுகின்றது, அவதார் படம் எந்தப் படத்தின் காப்பி என விமர்சனம் செய்வது, ஓடிப் போய் கல்யாணம் செய்யலாம் என்று கூறியவுடன், கட் செய்து இது அலைபாயுதே ஸ்டைல் என்று சொல்வது எல்லாம் செம்ம சார்.

முந்தைய பாகத்தின் நினைவுகள் அனைத்தும் சில இடங்களில் வந்து செல்வது ரசிக்க வைக்கின்றது, அதிலும் கோபி மறுபடியும் தன் பேட்டை வாங்கினாரா? என்பதை காட்டிய விதம் விசில் பறக்கின்றது.

படத்தின் மிகப்பெரிய பலம் யுவனின் பின்னணி இசை, அதிலும் பேட் பாய்ஸ் மற்றும் வைபவிற்கு வரும் பின்னணி இசை சுப்பர், ஒளிப்பதிவு தேனி, சென்னை என அனைத்தையும் ரசிகர்களுடன் ஒன்ற வைக்கின்றது.

ஆனால், முந்தைய பாகத்தில் கிரிக்கெட், கிரிக்கெட் என்று தான் கதை நகரும், இந்தப் பாகத்தில் கமர்ஷியலுக்காக சில விடயங்களை உள்ளே நுழைத்தது, ஹவுஸ்பார்ட்டி பாடல் என கொஞ்சம் யதார்த்தம் மீறுகின்றது.



நீண்ட நாட்களுக்கு பிறகு செம்ம ஜாலியாக ஒரு கதைக் களம், அதற்கு திரைக்கதை அமைத்த விதம்.

ஜெய், சிவா, விஜய் வசந்த் என அனைவரும் நீண்ட நாட்களுக்கு பிறகு நன்றாக நடித்துள்ளனர். ப்ரேம்ஜி மற்ற அண்ணன் படத்தை விட அதிகம் அடக்கி வாசித்துள்ளார், அதுவும் சென்ற பாகத்தில் கட்ச் போல், இதில் ஒரு பந்தை தேக்கும் காட்சி சுப்பர்.

கிரிக்கெட் சம்மந்தப்பட்ட காட்சிகள், பின்னணி இசை.

சென்ற பாகத்தில் இருந்த யதார்த்தம் மற்றும் அதிரடிப் பாடல்கள் மிஸ்ஸிங். மொத்தத்தில் இரண்டாவது இன்னிங்ஸ் செம்ம FUN பார்ட்டி. நீண்ட நாட்களுக்கு பிறகு இறங்கி அடித்துள்ளார் VP.

# அதிர்ச்சியான அஜித்



அஜித் எந்த ஒரு பிரச்சினைக்கும் தானாக செல்லாதவர். அவர் வேலையில் மட்டுமே கவனம் செலுத்தி வருபவர். இந்நிலையில் அஜித் அடுத்த சி.எம். என சில மீடியாக்கள் கிளப்பிவிட்டுள்ளனர்.

இது எப்படியோ அஜித் காதுகளுக்கு சென்றுள்ளது. அஜித் முதலில் இந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சி ஆனாராம். நான் அவர் மீது வைத்திருக்கும் மரியாதையில் தான் வந்தேன் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் வழக்கம் போல் சில மணி நேரம் கழித்து வதந்திகள் அனைத்தையும் முழுமையாக மெல்லிய புன்னகையுடன் விமான நிலையத்திற்கு சென்றுவிட்டார்.

# ஷாருகான் வீடு அரசாங்கத்தால் இடிக்கப்பட்டது.


பாலிவூட் சினிமாவில் சுப்பர் ஸ்டாராக இருக்கும் ஷாருகான் உலக அளவில் புகழ் பெற்றவர்.

தற்போது அவர் மும்பை பாந்திரா, பேண்ட் ஸ்டாண்டு பகுதியில் இருக்கும் மன்னத் பங்களா வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

இவருக்கு ராய்காட் மாவட்டம் அலிபாக் கடற்கரை அருகே ஒரு ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சுவருடன் பண்ணை வீடு ஒன்று உள்ளது.

சமீபத்தில் இந்தப் பகுதியில் பலர் அரசு நிலத்தை ஆக்கிரமித்து வீடுகள் கட்டியிருப்பதாக தகவல் வந்ததை அடுத்து சோதனை நடத்தப்பட்டது.

இதில் 2 ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதை கண்டுபிடித்த அதிகாரிகள் இயந்திரம் மூலம் அவைகளை அகற்றினர். ஷாருக்கின் வீடும் இதில் சிக்கியுள்ளது.



# வேற யாரையாவது வைச்சுப் பண்ணுங்க - ரஜினி

சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இன்று தமிழ் சினிமாவின் பாக்ஸ் ஆபிசில் முதலிடத்தை பிடித்து வருகிறார்.

தற்போது அவர் சங்கர் இயக்கத்தில் அக்சய் குமார், எமிஜாக்ஸனுடன் 2.0 படத்தில் நடித்து வருகிறார். நிதேஷ் திவாரி இயக்கத்தில் அமீர்கான் நடித்துள்ள "தங்கல்" படம் டிசெம்பர் 23ஆம் திகதி வெளியாக இருக்கிறது.

இந்நிலையில் அமீர்கான் தனது மிக முக்கிய நண்பர்களுக்கும் சுப்பர் ஸ்டார் ரஜினிக்கும் படத்தை திரையிட்டுக் காட்டியுள்ளார்.

தற்போது ரஜினி அமீரிடம் படம் நன்றாக இருக்கிறது. சிறப்பாக உழைத்திருக்கிறீர்கள் என வாழ்த்தியுள்ளார்.

உடனே அமீர் தமிழில் இந்த படத்துக்கு நீங்கள் டப்பிங் பேச வேண்டும் என சொல்ல, ரஜினி என் குரல் சரியாக இருக்காது. நீங்கள் வேறு யாரையாவது வைத்து பேச வையுங்கள் என்று கூறினார்.



# ஜெயலலிதாவின் இழப்பு தமிழ் மக்களுக்கு

# பேரிழப்பு!



தாயை இழந்தது தமிழகம், அம்மா அமரரானார், புரட்சித் தலைவிக்கு இதயஅஞ்சலி, அம்மாவுக்கு கண்ணீர்க் காணிக்கை என்று தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் ஜெயலலிதா பற்றிய நினைவுகளை வெளிப்படுத்தும் நீண்டவரிசைகள் காட்சியளிக்கின்றன.

சென்னை மெரீனா கடற்கரையில் எம்.ஜி.ஆர் .நினைவிடத்தில் ஜெயலலிதாவின் உடல அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கடந்தசெவ்வாய்க்கிழமை முதல் மக்கள் கண்ணீர மல்க அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

அதேவேளை அ.தி.மு.க தொண்டர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானபொதுமக்கள் (பெண்கள் உட்பட) மொட்டையடித்து காணிக்கை செலுத்தி வருகின்றனர்.

ஜெயலலிதா வாழ்ந்த போயஸ் கார்டன் இல்லத்தைச் சென்று பார்த்து பரவசமடைந்தநிலையில் நிலத்தில் விழுந்து கண்ணீர் மல்க வணங்கி தமது உணர்வுகளை வெளிப்படுத்தும் மக்கள் அம்மா வாழ்ந்த இந்த வேதா இல்லத்தை நினைவுச் சின்னமாக மாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுகின்றனர்.

ஜெயலலிதாவின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலும் ஜெயலலிதா வாழ்ந்த இல்லத்திற்கும் நாளுக்கு நாள் மக்களின் வருகை அதிகரித்துச் செல்கின்றது.

தமிழக மக்கள் மறைந்த முதல்வர் ஜெயலலிதாவை எளிதில் மறந்துவிடமாட்டார்கள் என்பதை இவ்வாறான நிகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

தமிழக அரசியலில் பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்திய ஜெயலலிதாவின் இழப்பு இனி யாராலும் ஈடுசெய்ய முடியாத ஒன்று.

எதிர்க்கட்சியினரே அம்மா என்று அழைக்கும் நிலையில் ஆதிக்கம் செலுத்திய ஜெயலலிதாவின் ஆளுமையுடன் இன்னொரு பெண் தமிழக அரசியலில் உருவாக இன்னும் பல நூற்றாண்டுகள் தேவைப்படலாம்.

அதுமட்டுமன்றி தமிழகத்திலுள்ள தமிழருக்கு மட்டுமல்ல ஈழத்தமிழருக்கும் துன்பத்தைக் கொடுத்த செய்தி ஜெயலலிதா காலமானார் என்பதுதான். கடந்த திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் வெளியிடப்பட்ட இந்தச்செய்தியறிந்த அதிர்ச்சியில் இதுவரை 77 பேர் உயிரிழந்தனர் என்றும் அவர்களுக்கு மூன்று இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு வழங்கப்படும் என்றும் தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழல் வழக்கில் சிக்கிய ஜெயலலிதா சிறையிலிருந்த போதும் 350 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரைமாய்த்துக் கொண்டனர். ஜெயலலிதாவின் பிரிவால் மக்கள் தமது உயிரை விடுவது பலமுறை நடந்துள்ளது.

ஜெயலலிதாவின் இழப்பு என்பது தமிழக அரசியலில் பேரிழப்பாகும். இதை யாரும் மறுக்கமுடியாது! அதேவேளை அம்மா இல்லாத தமிழக அரசியலை யாரும் நினைத்துக் கூடப்பார்த்திருக்க மாட்டார்கள்.

அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (அ.இ.அ.தி.மு.க.) என்ற மாபெரும் அரசியல் கட்சியை தனியொருவராக கட்டிக் காத்தவர் ஜெயலலிதா என்றால் அது, மிகையில்லை.

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் கோடிக்கணக்கான தொண்டர்களின் இதய தெய்வமாக வீற்றிருந்த ஜெயலலிதா அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக அதிரடி முடிவுகளை மேற்கொண்டவர்.

தமிழக முதலமைச்சராக இருந்த போது பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி தனக்கென தனியான இடத்தை தக்க வைத்துக் கொண்டார். அம்மா உணவகம் இதில் முக்கியத்துவம் பெறுகின்றது.

தமிழ் அரசியலில் நீண்ட காலத்திற்கு பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ள ஜெயலலிதாவின் மறைவு, இந்திய அரசியலைக் கடந்து இலங்கையிலும் தமிழ் அரசியலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக சட்டமன்றத்தில் ஈழத தமிழருக்கு ஆதரவாகவும் இனப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசிற்கு எதிராகவும் தீர்மானம் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றினார் ஜெயலலிதா.

ஈழத்தமிழருக்கு ஆதரவாக என்றும் தமிழகம் இருக்கும் என்ற நம்பிக்கையை இந்தத் தீர்மானம் ஊடாக ஊட்டிய மறைந்த முதல்வர் ஜெயலலிதா சட்ட மன்றத்தில் விசேட உரையும் ஆற்றியிருந்தார்.

இலங்கை அரசிற்கும் இந்திய மத்திய அரசிற்கும் கடும் கோபத்தை ஏற்படுத்திய இச்செயல் குறித்து ஜெயலலிதா கவலைப்படவில்லை.

ஈழத்தில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை இன்று வரை கூறிவந்தார். அதுமட்டுமன்றி சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொண்டு போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும். இதற்கான நடவடிக்கையை இந்திய மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தினார்.

ஜெயலலிதாவின் இந்த துணிச்சலான நடவடிக்கையை இனி யாரிடமும் ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது.

தமிழக அரசியலில் ஏற்பட்ட இந்த இழப்பை தமிழகத்துடன் மட்டுப்படுத்த முடியாத அதேவேளை இந்தியா முழுவதிலும் ஏன் ஈழத்திலும் ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதவேண்டியுள்ளது. இதனை எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போன்ற தமிழ்த் தலைவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். ஏனெனில் மறைந்தது ஜெயலலிதா எனும் பல்துறை ஆளுமை கொண்ட மாபெரும் தலைவி.

எஸ்.ஆர்.கரன்

facebook

# கடவுளின் கணக்கு!



சரவணனுக்கு பணம்தான் குறி. கஷ்டப்படுபவர்களுக்குப் பணம் தேவை என்றால் சரவணனிடம் தான் ஓடி வரவேண்டும். அதுவும் சும்மா ஓடி வந்தால், அவன் பணம் கொடுக்க மாட்டான். பண்ட பாத்திரமோ, நகையோ கொண்டு வந்தால் தான் பணம் கொடுப்பான். அதுவும் பாதி விலைக்குத்தான் வாங்குவான்.

கடவுள் அவன் பக்கம் இருந்து, எல்லா மக்களுக்கும் கஷ்டத்தைக் கொடுத்து அவனுக்கு இலாபத்தை வாரிக் கொடுத்தார்.

இதெல்லாம் ரொம்பப் பாவம். நம்மகனுக்குப் பாவத்தைச் சேர்த்து வைக்காதீர்கள் என்று அவன் மனைவி கமலா கண்டிப்பாள்.

போடி, போடி பிழைக்கத் தெரியாதவளே, பணம்தான் உலகம்... பணம் இல்லை என்றால் ஒருவனும் நம்மை மதிக்கமாட்டான், என்று அவளைக் கிண்டல் செய்வான் சரவணன். ஒருநாள் புதிய ஆள் ஒருவர் சரவணனிடம் வந்தான்.

என் மனைவிக்கு ஒரு பெரிய சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். அதற்குப் பணம் தேவைப்படுகிறது என்னிடம் உள்ள நகைகளை வாங்கிக் கொள்கிறீர்களா? என்று கேட்டான்.

அவனைப் பார்த்தால், திருட்டுப் பயல் போல இருக்கிறது. ஒரு மூட்டை நகை கொண்டு வந்து இருக்கிறான். நிச்சயமாக எங்காவது திருடிக் கொண்டு வந்திருப்பான். அவனைப் போகச் சொல்லுங்கள் வீண் வம்பு வேண்டாமென்றாள்.

ஆனால், நகையைக் கண்டதும் பேராசையும் பொங்கியது சரவணனுக்கு. இவ்வோ நகை எங்கே கிடைக்கும்? என்று நினைத்து யோசிக்க மறந்தான்.

கமலா! நீ இந்த விடயத்தில் தலை இடாதே... உனக்கு என்ன தெரியும்! என்று அவளைத் திட்டி அனுப்பி விட்டு, மூட்டையுடன் வந்த ஆளை உள்ளே அழைத்தான்.

அந்த ஆள் மூட்டையைப் பிரித்தான். ஏராளமான தங்க நகைகள் மின்னின. மாற்று உறைத்துப் பார்த்தான் சரவணன். எல்லாமே சுத்தத் தங்கம். இலட்ச ரூபாய்க்கு மேல் பெறும்.

பத்தாயிரம் ரூபாய் தான் கொடுப்பேன். இஷ்டம் இருந்தால் கொடு. இல்லாவிட்டால் போ, என்று கண்டிப்பாகப் பேசினான்.

சரி ஐயா பணத்தைக் கொடுங்கள், என்று அழுது வடிந்தான் அந்த ஆள்.

உடனே, பணத்தைக் கொடுத்து, நகைகளை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினான் சரவணன்.

மனம் முழுவதும் சந்தோசம். இப்படி ஒரு அதிர்ஷ்டம் யாருக்கு அடிக்கும். இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள நகையை பத்தாயிரத்திற்கு சுருட்டிய தன்னுடைய திறமையை எண்ணி மகிழ்ந்தான்.

ஒருமாதம் சென்றது.

சரவணன் வீட்டு வாசலில் பொலிஸ் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதில் இருந்து இன்ஸ்பெக்டரும், காவலர்களும் கையில் விலங்கு பூட்டிய ஒருவனோடு கீழே இறங்கினார்கள். கையில் விலங்குடன் காணப்பட்டவன் ஒரு மாதத்திற்கு முன்னால் சரவணனிடம் நகைகளை விற்ற ஆசாமி. சரவணன் பயத்துடன் வாசலுக்கு வந்தான். இவர்தான் என் திருட்டு நகைகளை வாங்கியவர் என்று சரவணனை அடையாளம் காட்டினான் திருடன்.

அவ்வளவுதான்! இன்ஸ்பெக்டரும் காவலர்களும். சரவணனின் வீட்டுக்குள் புகுந்து அலுமாரியைத் திறந்து திருட்டு நகைகளோடு மற்ற நகைகளையும் சேர்த்து எடுத்துக் கொண்டு, சரவணனை ஜீப்பில் அள்ளிப் போட்டுக் கொண்டு போனார்கள்.


கடவுள் சரவணனுக்கு உதவி செய்வது போல அவனை செழிக்க வைத்து, கடைசியில் பழிவாங்கி விட்டார். ஏழைகளின் வயிற்றெரிச்சல் சும்மா விடுமா?

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 924

### இராமச்சந்திரன் சுரேந்




### சுரேந்திரகுமார் கனகலிங்கம்



### கிருபவன்




### ரவிராஜ்




### குகதர்சன்




### சயந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 63

## விஞ்ஞான மற்றும் மருத்துவத் துறையில் வளர்ச்சி பெற்ற வேறு கிரகங்கள் இருக்கிறதா?



பூமியிலே மருத்துவ, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிகள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன.

எம்மிலும் ஆற்றல் மிக்க உயிரினங்களைக் கொண்ட வேறு கிரகங்கள் இருக்கின்றனவா? அவற்றுடன் எமது அறிவுகளை பகிர்ந்து கொள்ளும் காலம் ஒன்று உருவாகுமா? என்று எல்லாம் சிந்திக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது.

பல ஒளியாண்டுகள் தொலைவில் பூமியை ஒத்த 8 கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நாசா நிறுவனத்தின் கெப்லர் விண்வெளி- தொலைநோக்கியைக் கொண்டு இவை கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கிரகங்கள் பூமியைப் போலவே பாறைகள் மிகுந்திருக்கக்கூடும் என்றும், நீர் நிரம்பிய கடல்கள் மற்றும் உயிரினங்கள் வாழ்வதற்குரிய பிற விடயங்களைக் கொண்டிருக்கக்கூடும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். அவை மிக அதிக வெப்பமோ அல்லது மிகக் குளிரான வெப்ப நிலையோ இல்லாதவை என்று விஞ்ஞானிகள் கூறினர்.

இவற்றிலே முன்னேற்றகரமான உயிரினங்கள் வாழக்கூடும். அவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் எமது தொழில்நுட்ப அறிவும் வளர முடியும்.

ஆனாலும் இந்த கிரகங்களுக்கு மனிதர்களால் விரைவில் சென்றுவிட முடியாது. ஏனென்றால் அவை பல நூற்றுக்கணக்கான ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கின்றன.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்.

## திரன்சியன் ஸ்கீமிக் அற்றாக்
## (Transient Ischaemic Attack –TIA)

இது பாரிசவாதத்தை போன்றதும் பாரிசவாதத்தின் ஆபத்துக் காரணியும் ஆகும். எனினும் இதனால் ஏற்படும் குணங்குறிகள் சில நிமிடங்கள் முதல் மணித்தியாலங்கள் வரையே நீடிக்கும். அத்துடன் இது முழுமையாக 24 மணித்தியாலத்தினுள் சாதாரண நிலைக்கு திரும்பி விடும்.

இது பாரிசவாத்தின் ஒரு முன் எச்சரிக்கையாக கருதப்படுவதால் இதன் ஆபத்தான நிலையை விளங்கிக் கொண்டு நோயாளிக்கு சரியான முறையில் சிகிச்சையளிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஏற்பட்ட ஒருவருக்கு முழுமையான பாரிசவாதம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகரிக்கிறது. இவ்வாறான 12 பேரில் ஒருவருக்கு ஒரு கிழமைக்குள் பாரிசவாதம் ஏற்படுகிறது. ஆகவே இந் நிலைமையை புறக்கணிக்காது சரியாக கவனிக்க வேண்டும்.

### இதன் குணங்குறிகளாவன

- முகத்தில் ஏற்படும் அமைப்பு மாற்றம் வாய் ஒரு பக்கமாக செல்லுதல் அல்லது கண் மூடிய நிலையில் இருத்தல்.
- கைகளை இயக்க முடியாத நிலை.
- பேச்சு தொடர்பான பிரச்சினைகள் (சரியாக பேச முடியாதமை மற்றும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் பேசாமை.
- கண்பார்வை திடீரென மங்குதல் அல்லது பார்வையற்றுப் போதல்.
- திடீரென அங்கங்கள் செயலிழந்து போதல் மற்றும் உணர்ச்சி அற்றுப் போதல்.
- திடீரென ஏற்பட்ட நினைவிழப்பு மற்றும் மனநிலைக் குழப்பம்.
- திடீரென ஏற்படும் தலைச்சுற்று சமநிலையின்மை மற்றும் திடீரென விழுதல்

இவை பொதுவாக ஏனைய குணங்குறிகளுடன் சேர்ந்து ஏற்படும்.

இவற்றுள் ஏதாவது குணங்குறிகள் தென்படுமாயின் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும். ஏனெனில் இது பாரிசவாதத்திற்குரிய முதல் அறிகுறியாகக் கூட இருக்கலாம். நீங்களோ அல்லது உங்கள் உறவினரோ TIA தொடர்பான குணங்குறிகள் ஏற்கனவே ஏற்பட்டு வைத்தியரிடம் அறிவுரை பெறாது இருந்தால் வைத்திய ஆலோசனையை உடனடியாக பெற ஏற்பாடுகளை மேற்கொள்ளவும். ஆனால் குருதியில் குளுக்கோஸ் அளவு குறைதல், ஒற்றைத் தலைவலி, உட்காதுப்பிரச்சினைகள் மற்றும் வலிப்பு போன்ற நிலைமைகளும் மேற்குறிப்பிட்ட சில குணங்குறிகளை வெளிப்படுத்தலாம். எவ்வாறாயினும் வைத்தியரை நாடுவது சாலச்சிறந்தது.

குருதிக்குழாய்கள் தற்காலிகமாக ஏற்படும் அடைப்பானது மூளைக்கான குருதி வழங்கலை தடை செய்வதால் இது ஏற்படுகிறது. குருதிக்குழாயில் ஏற்படும் அடைப்பானது கரைவதாலோ அல்லது அவ்விடத்திலிருந்து நகர்வதாலோ இதன் குணங்குறிகள் தற்காலிகமானதாக அமைவதுடன் குணமடைந்தும் விடுகிறது.

பாரிசவாதத்தை போன்றே இதிலும் குருதிக்குழாய் அடைப்பானது சுருங்கிய மற்றும் கொழுப்புப்படிவுகளைக் கொண்ட குருதிக்குழாய்களிலேயே ஏற்படுகிறது. இருதயத்தில் அல்லது இருதய பெருநாடிகளில் ஏற்படும் குருதிக்கட்டிகளானது மூளை வரை நகர்ந்து செல்வதாலும் ஏற்படலாம். அரிதாக மூளையில் ஏற்படும் சிறு இரத்தக்கசிவும் இதை ஏற்படுத்தும்.

சில வேளைகளில் TIA கண்ணை மட்டும் பாதிக்கலாம். இது கண்ணிற்கு இரத்தத்தை வழங்கும் குழாயில் ஏற்படும் அடைப்பால் தற்காலிகமாக பார்வை இழப்பை ஏற்படுத்தும்.

இந்த நோயாளிகளை பார்க்கும் வைத்தியர் நோய்நிலைமை பற்றி முழுமையாக விசாரிப்பது மற்றும் தேவையான உடற்பரிசோதனைகளை மேற்கொள்வது மட்டுமல்லாது எதிர்காலத்தில் பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் ஆராய்வார். அத்துடன் நோயாளியை விசேட வைத்திய நிபுணர்களான நரம்பியல் வைத்திய நிபுணர் அல்லது பாரிசவாதம் தொடர்பாக தேர்ச்சிபெற்ற பொது வைத்திய நிபுணர்களிடம் அனுப்பி வைப்பார்.

60 வயதிலும் அதிகமாக இருத்தல், **140/90mmHg** இற்கும் அதிகமாக குருதி அமுக்கம் காணப்படல், ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் நீடித்த கை.கால்களின் இலக்கற்ற நிலை அல்லது பேச்சு தொடர்பான பிரச்சினை காணப்படுதல் மற்றும் நீரிழிவு நோயாளியாக இருத்தல் என்பவை TIA ஏற்பட்ட ஒருவருக்கு முழுமையான பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கும். ஒரு கிழமைக்குள் இரண்டு TIA ஏற்படல், ஒழுங்கற்ற இதயத்துடிப்பு காணப்படல், குருதி உறைதலை தடுப்பதற்கான மருந்துகளை பாவித்தல், மூளைக்குக் குருதி வழங்கும் நாடியில் சுருக்கம் காணப்படல் என்பன பாரிசவாதம் வருவதற்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும்.

உங்களுக்கு TIA ஏற்பட்டால் சில மருந்துகள் தொடக்கப்படும் இவ்வாறான மருந்துகளை பாவிக்க முடியாத வேறு நோய் நிலைமை இல்லாதவிடத்து வாழ்நாள் முழுவதும் இம் மருந்துகள் பாவிக்கப்பட வேண்டும். மேலும் நீங்கள் ஆபத்துக் காரணிகள் (உயர் குருதி அமுக்கம், நீரிழிவு, புகைப்பிடித்தல மற்றும் ஏனையவை) காணப்படின் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவீர்கள்.

விசேட வைத்திய நிபுணர் தேவையெனில் மூளையை படமெடுப்பதற்கான **(CT or MRI Scan)** ஒழுங்கை ஏற்படுத்தித் தருவார். இவை பிரதானமாக ஏனைய மூளை தொடர்பான பிரச்சினைகள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவே செய்யப்படும். சிலர் தொடர்ச்சியான இருதயத்துடிப்பு பதிவிற்கோ அல்லது இருதயத்தை ஸ்கான் செய்வதற்கோ **(Echocardiogram)** அனுப்பப்படுவர்.

ஆரோக்கியமான உணவை உட்கொள்வதுடன் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழுங்கள். புகைப்பிடிப்பதை நிறுத்துங்கள். அதிக மதுபாவனையை நிறுத்துங்கள். கிரமமாக குருதியின் குளுக்கோஸ் அளவை பரிசோதியுங்கள்.

பொதுவாக TIA ஏற்பட்ட ஒருவர் ஒரு மாத காலத்திற்கு வாகனம் செலுத்துவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுவார். ஏனெனில் அவருக்கு மீண்டும். TIA ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக உள்ளதனால் ஆகும்.

TIA இன் பின்னர் சிலர் அதிக கோபமாக, கவலையாக அல்லது பயமுடையவர்களாக காணப்படலாம். இவற்றுக்கும் தகுந்த சிகிச்சை வழங்கப்பட வேண்டும். இது தமக்கு பாரிசவாதம் ஏற்பட்டால் அது தமது குடும்பம் வேலை மற்றும் உறவுகளை பாதிக்கும் என்ற பயத்தினால் ஏற்படுவதாகும். இவ்வாறான உணர்வுகள் இயற்கையானவை. எனினும் அவை எல்லை மீறும் பொழுது அல்லது தொடர்ந்து காணப்படும் போது வைத்திய உதவியை பெறுவது நல்லது.

வைத்தியர் ஜெயராசா சஞ்ஜெயன்,
வைத்தியர் கலாநிதி அகிலி
அரசலிங்கம்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.